www.tamilarangam.net
தந்துதவியவர்: தேசம்நெற்


# தமிழோசை

THAMIZHOSAI

U.K. 30p
France FF 5.00
Germany DM 1.50
Swiss SF 1.50
Norway Kr 5.00

ஓசை : 1
ஒலி : 2

லண்டன் ஆங்கீரச ஆடி 17 - 30.07.1992 253 Western Avenue London W3 0PP Tel: 44-(0)81-993 7652 Fax: 44-(0)81-993 8611


## இலங்கையின் வடபகுதியில் மீண்டும் ஊரடங்கு

# புலிகளின் பாரிய தாக்குதல் பாதுகாப்பு படைகள் உஷார்

## படகுகளில் செல்ல தடை

(நமது கொழும்பு நிருபர்)

**இலங்கையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் இரண்டு அரசாங்க அதிபர் பிரிவுகளில் கடந்த செவ்வாய் நள்ளிரவிலிருந்து அரசாங்கம் காலவரையறையற்ற ஊரடங்கு உத்தரவை பிறப்பித்துள்ளது. அந்தப் பகுதிகளிலுள்ள பொதுமக்களை பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லும்படியும் அரசு கோரியுள்ளது.**

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் கடந்த சிலதினங்களாக விதிக்கப்பட்டிருந்த 24மணிநேர ஊரடங்கு உத்தரவை கடந்த திங்கட்கிழமைதான் அரசு நீக்கியிருந்தது. பலவேகய-2 என்ற பெயரில் கடந்த இருவாரங்களாக வடக்கில் பாதுகாப்புப்படைகள் மேற்கொண்ட தீவிர தாக்குதல் நடவடிக்கைகளின் ஓர் அங்கமாக இந்த ஊரடங்கு அங்கு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

கடந்த சனிக்கிழமை கட்டுபொத இராணுவ முகாமில் விடுதலைப்புலிகள் அதிகாலையில் மேற்கொண்ட திடீர்த்தாக்குல் அரசின் இந்த திடீர் நடவடிக்கைக்கு காரணமென்று கருதப்பட்டது. பல உயரதிகாரிகள் உட்பட 55 இராணுவ வீரர்கள் இதில் கொல்லப்பட்டார்கள்.வவுனியா-மன்னார் வீதியில் செட்டிகுளத்திலிருந்து 12 மைல் தொலைவில், அடர்ந்த காட்டுப்பகுதியில், அநுராதபுரத்துக்கு சற்று அணித்தாக அமைந்திருந்த இந்த முகாமில் 115 இராணுவ வீரர்கள் இருந்தார்கள். எண்ணூறுக்குமதிகமான விடுதலைப்புலி வீரர்கள், பெருமளவிலான பெண் வீரர்களோடும் சேர்ந்து இந்த தாக்குதலை நிகழ்த்தியதாக சொல்லப்படுகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட மிகப் பாரிய துணிச்சலான தாக்குதல் இது என்று கூறப்படுகிறது. இந்த ஆண்டில் இராணுத்தினர் தனி ஒரு நாளில் தம்மில் பெருந்தொகையானோரை பலிகொடுத்த தாக்குதல் இது. கடந்த இரண்டு ஆண்டுகளில் விடுதலைப்புலிகள் தமது முன்னைய நடவடிக்கைகளில் கொக்காவில், மாங்குளம் இராணுவ முகாம்களையும், கிழக்கில் கட்டைபறிச்சான், இராணுவ பிரிவையும் முற்றாகத் தகர்த்திருந்தார்கள். கட்டுபொத தாக்குதல் பாதுகாப்புப்படைகள் இவ்வாண்டில் எதிர் கொண்ட மிக மோசமான தாக்குதல் என்று இராணுவ வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது. இத்தோடு தனி ஒரு வாரத்தில் பாதுகாப்புப்படைகள் 115பேரை இழந்திருக்கின்றது.

அநுராதபுர மாவட்டத்தில் இந்த எதிர்பாராத கட்டுபொத தாக்குதல், புலிகள் ஒரு திசை திருப்பும் யுக்தியாக எல்லைப் புறங்களில் தாக்குதல்களை மேற்கொள்ளலாமென்று கடந்த இதழில் வெளியான 'தமிழோசை'யின் ஹேஷ்யத்தை ஊர்ஜிதம் செய்கிறது. எப்படியெனினும் இந்த வெற்றிகர தாக்குதல் பாதுகாப்புப்படைகள் தமது குறைகளை கண்டறிவதில் தீவிரப்பட்டிருக்கும்போது புலிகளுக்கு ஓர் ஆத்ம உற்சாகத்தை-தெம்பையே ஊட்டும். கூட்டுத்தலைமையகம், 25 புலிகள் இதில் இறந்ததாகவும் பலர் காயமடைந்ததாகவும் கூறினும் இறந்தவர்களின் சடலங்களை புலிகள் கொண்டு சென்றுவிட்டதாகச் சொல்வதால் இதனை ஊர்ஜிதப்படுத்த இயலாது. ஆக ஒரேஒரு புலி வீரரின் சடலமே காணப்பட்டது. இராணுவ வட்டாரங்களின்படி, கடந்த வாரத்தில் ஆனையிறவில் 34 பேரையும் கந்தளாயில் 16 பேரையும் ஜூலை 5தேதி ஆனையிறவுக்கணித்த பகுதியில் Y-8 விமானவிபத்தில் 19பேரையும் கட்டுபொதவில் 46 பேரையும் (அரசாங்க எண்ணிக்கை) பாதுகாப்புப்படை இழந்திருக்கிறது.


இதேவேளை, ஆனையிறவின் மேற்கு கரைப்பகுதிகளை தமது கட்டுப்பாட்டினுள் கொண்டுவந்த பின்னரே பலவேகய-2 நடவடிக்கைகள் முடிவடையுமென கூட்டுப்படை வட்டாரங்கள் தெரிவித்தன. இப்போது ஆனையிறவுக்கும் வெற்றிலைக்கேணிக்கும் இடைப்பட்ட கரையோரப்பகுதி தமது தாக்கமான கட்டுப்பாட்டிலேயே இருப்பதாக அவை கூறுகின்றன. இப்பிராந்தியத்தில் கைப்பற்றப்பட்ட முக்கிய இடங்களில் இராணுவ முகாம்களை அமைப்பதில் பாதுகாப்புப் படையினர் தற்போது தீவிரமாக ஈடுபட்டிருப்பதாக நம்பகமாக அறியப்படுகிறது. முள்ளியான், புல்லாவெளி, நித்தியவேட்டை, கோவில்வயல் முதலிய இடங்களில் தம்மை பலப்படுத்தியதும் இயக்கச்சியில் பிரதான முகாமொன்றை அவர்கள் அமைப்பார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனையிறவின் மேற்குப்பகுதியை இராணுவக் கட்டுப்பாட்டுள் கொண்டு வந்தபின்னரே ஆனையிறவு-இயக்கச்சி பிரதான பாதை பொதுமக்களுக்கு போக்குவரத்துக்காக திறந்து விடப்படும். இந்தப்பாதைப் பகுதிகளில் புலிகள் இன்னமும் தாக்குதல்களை நிகழ்த்திக்கொண்டேயிருக்கிறார்கள். எப்படியெனினும் புதிய நடவடிக்கைகள் எப்போ ஆரம்பிக்கும் என்பது பற்றி அந்த வட்டாரங்கள் எதுவும் தெரிவிக்காதபோது 24 மணி நேரத்தின் பின்னர் இந்த புதிய ஊரடங்கு உத்தரவை அரசு பிறப்பித்தது.

பரந்தன், தருமபுரம், புதுக்குடியிருப்பு, விசுவமடு என்பன இப்போது இந்த புதிய ஊரடங்கு உத்தரவுள் அடங்கும் பிரதான இடங்கள்.

பொதுமக்களை, பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள தருமபுரம் மகாவித்தியாலயத்திலும் விசுவமடு பால் சேகரிப்பு நிலையத்திலும் தஞ்சம்

(9ம் பக்கம் பார்க்க)



## புதிய ஜனாதிபதி

(புதுடில்லி)

நவபாரதத்தின் ஒன்பதாவது ஜனாதிபதியாக டாக்டர் சங்கர் தயாள் சர்மா தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இந்திரா காங்கிரஸ் வேட்பாளரான இவர் அமோக வெற்றியை ஈட்டினார். இம்மாத இறுதியில் அவர் புதிய ஜனாதிபதியாக பதவியேற்பார். கேம்பிரிட்ஜ் பட்டதாரியான சர்மாவுக்கு வயது 71.

(வாழ்க்கைக்குறிப்பு 2ம் பக்கம்).



# 13 வயதில் கணிதமேதை பிரிட்டனில் கணேஷ் சாதனை

(நமது நிருபர்)

**இலங்கையரான 13 வயது இளம் கணிதமேதை கணேஷ் சிற்றம்பலம் பிரிட்டனில் சரித்திரம் படைத்திருக்கிறார்.**

கில்போர்ட், சரே ...லைக்கழகத்தில் வாரத்தில் ... தினம் மட்டுமே சென்று பட்டப் படிப்பை மேற்கொண்டிருந்த கணேஷ், பிரிட்டனின் அதி இளம் சிறப்பு பட்டதாரியாக கணிதத்தில் முதல்பிரிவில் சித்திபெற்றிருக்கிறார். இவருடைய இந்த சாதனை 'கல்வி ...லகில் இணையற்றது' என்று அவரது விரிவுரையாளர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

சாதாரண ஒரு மாணவன் 7 வருடங்களில் ... முன்னேற்றத்தை இவர் 18 மாதங்களில் அடைந்திருக்கிறார். 13 வருடமும்

(2ம் பக்கம் பார்க்க)

லண்டனிலிருந்து வெளியாகும் அனைத்துலக தமிழர் பத்திரிகை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 13 வயதில் கணிதமேதை பிரிட்டனில்

1ம் பக்க தொடர்ச்சி

4 மாதங்களுமான வயதையுடைய கணேஷ், கடந்த மாதம் நடைபெற்ற ஆறு 3 மணிநேர பரீட்சையுடன் இந்த விஞ்ஞானமாணி பட்டப் படிப்பை முடித்ததன்மூலம், முன்னைய சாதனையை முறியடித்தார். முன்னைய இளம் சாதனையாளர் றுத் லோறன்ஸ் 13 வருடம் 11 மாதங்கள் வயதை உடையவர். 11 ஆண்டுகளுக்கு முன்னர் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் இடமளிக்கப்பட்டு முதல்பிரிவு கணித சிறப்பு பட்டத்தை அவர் பெற்றிருந்தார்.

ஏற்கனவே 8 வயதில் சாதாரணதர பரீட்சையில் 'ஏ' பிரிவு சித்தியையும் 9 வயதில் உயர்தர பரீட்சையில் அதிஉயர் சித்தியையும் பெற்றிருந்த அதிஇளம் சிறுவன் கணேஷ். பரீட்சைப் பெறுபேற்றைக் கேட்டதும் மகிழ்ச்சியில் தாம் துள்ளிக் குதித்ததாக சொன்னார்.வயதில் மற்றையவர்களுடன் பழகுவதில் எவ்வித வேறுபாட்டையும் தாம் உணரவில்லை என்றும், கதைகள் வாசிப்பதிலும் நேரம் கிடைக்கின்றபோது கம்பூட்டரில் விளையாடுவதிலும் ரெலிவிஷனில் 'நேபர்ஸ்' போன்ற நிகழ்ச்சிகளைப்பார்ப்பதில் தாம் விருப்பம் கொண்டவரென்றும் கணேஷ் சொன்னார். இந்த கோடை விடுமுறையைக் குதூகலமாகக் கழிக்கப்போகிறாராம். இந்த அளவோடு கணிதத்திலிருந்து கம்பூட்டர், அல்லது எலெக்ரானிக் துறைக்கு மாறி, 18 ஆவது வயதில் மீண்டும் பல்கலைக்கழகம் புக விரும்புவதாககவும் அவர் கூறினார். அவரது சாதனையை பிரகடனப்படுத்த பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்த பத்திரிகையாளர் மாநாட்டில் காமிராக்களின் முன்னர் கணேஷ் கூச்சமடைந்தவராக காணப்பட்டார். அவருடைய பெற்றோரும், விரிவுரையாளர்களும், பல்கல்லக்கழக அதிகாரிகளும் சூழ்ந்திருக்க, "வினாத்தாள்கள் அவ்வளவு சுலபமானவையுமல்ல; கடினமானவையுமல்ல" என்று அவர் பத்திரிகையாளர்களிடம் கூறினார்.

கணேஷ் விம்பிள்டனில் அவர் பயிலும் கிங்ஸ் கல்லூரி ஜூனியர் பாடசாலையிலிருந்து ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் தன்னுடைய பட்டப்படிப்புக்காக பல்கலைக்கழகத்துக்கு செல்வார். "அவனுடைய சாதனை மிகவும் குறிப்பிடப்பட வேண்டியது. ஏனெனில் அவர் பல்கலைக்கழகத்துக்கு வந்த மொத்த மணித்தியாலங்கள் 60 நாள்களே. அத்துடன், மொத்தம் 40 மாணவர்களில் முதற்பிரிவு சிறப்பு சித்தி பெற்ற 5 பேரில் இவர் ஒருவர்" என்று கணித பீடத்தின் தலைமைப் பேராசிரியர் தெரிவித்தார்.

கணேசனின் தந்தையார் திரு அர்ஜுனா சிற்றம்பலம் கணிதத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர். தாயார் நீலாவும் கணிதப்பட்டதாரியே. இது மாத்திரமன்றி பாட்டனார் திரு க.சிற்றம்பலமும் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்து கணித பட்டதாரியே. மன்னார் மாவட்ட அரசாங்க அதிபராகவிருந்த இவர் பின்னர் 1947இல் பாராளுமன்ற உறுப்பினராகி டி.எஸ்.சேனநாயக்கா அரசாங்கத்தில் அஞ்சல் தொலை தொடர்பு அமைச்சராக இருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. திரு சிற்றம்பலம் யாழ்.இந்துக்கல்லூரியை நிறுவிய திரு காசிப்பிள்ளையின் பேரனார்.

கணேசன் தனது பெற்றோருடன் ரொல்வேத்தில் வசித்து வருகிறார்.

# சங்கர் தயாள் சர்மா

பாரதத்தின் மத்தியப் பிரதேச மாநிலத்தில் போபால் நகரத்தில் 1918 ஆகஸ்ட் 19ம் திகதி பிறந்த சங்கர் தயாள் சர்மா, ஆரம்பத்தில் ஆக்ரா, லக்னௌத் பல்கலைக் கழகங்களில் பி.ஏயும், அலகாபாத் பல்கலைக்கழகத்தில் சட்டத் துறையில் எல்.எல்.எம்.பட்டமும் பெற்றார். பின்னர் அவர் கேம் பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து சட்டத்துறையில் பி.எச்.டி.என்ற டாக்டர் பட்டம் பெற்றார். கேம்பிரிட்ஜில் மாணவர் சங்கத்தில் முக்கிய பங்கேற்றிருந்தார். பின்பு லண்டனில் பாரிஸ்டராகவும் பட்டம்பெற்று, . அமெரிக்காவில் ஹார்வாட் சட்டக்கல்லூரி ஸ்தானிகராகவும் அங்கீகாரம் பெற்றார்.

சர்மாவைத் தெரிந்தவர்களுக்கு அவருக்குப் பின்னால் இத்தனை உயர் கல்விப்பட்டங்கள் இருப்பது தெரியாது. பாரதத்தில் அவர் வகித்த பதவிகள் பல.யாவும் அரசியல் சம்பந்தமானவை. பல மாகாணங்களில் கவர்னராகவும் மத்தியப்பிரதேசத்தின் முதலமைச்சராகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டவர். காங்கிரஸ் கட்சியின் உண்மையான சேவையாளராக இருந்தார். இந்திய தேசீய காங்கிரஸ் வரலாறு சம்பந்தமான உண்மைச் செய்திகளை அறிந்தவர் இவர்.

1987 செப்டெம்பரில் பாரத நாட்டின் துணை ஜனாதிபதியாகவும் ராஜ்ய சபையின் தலைவராகவும் தெரியப்பட்ட டாக்டர் சங்கர் தயாள் சர்மா, நேர்மைக்கும் நடுநிலைக்கும் ஓர் உருவமாக நிலவுகிறார்.



'நாதமணி' முத்து சிவராசாவின் மாணவரான செல்வன் துஷ்யந்தனின் மிருதங்க அரங்கேற்றம் இம்மாதம் 25ஆம் தேதி சனிமாலை 6.30 மணிக்கு, வோல்தம்ஸ்ரோ அசெம்பிளி மண்டபத்தில் நடைபெறுகிறது. துஷ்யந்தன் என்பீல்ட் திரு திருமதி புவனேந்திரம்பிள்ளை தம்பதியரின் புதல்வராவார்.

# நீதியான அமைதிவேண்டி ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(நமது நிருபர்)

இலங்கையில் 1983 யூலை இனப் படுகொலையின் 9ஆவது ஆண்டு நிறைவையொட்டி, நீதியான அமைதியை வேண்டிய மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் எதிர்வரும் 25ஆம் தேதி சனிக்கிழமை லண்டனில் நடைபெறுகிறது.

மதியம் 1.30 மணிக்கு ஹைட் பார்க் மைதானத்தில் ஆரம்பமாகும் இவ்வூர்வலம் றவல்கர் சதுக்கத்தில் முடிவடையும்.

இலங்கையின் தமிழ்ப்பிரதேசங்களில் இலங்கை இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்கும் எதிராக நடைபெறும் இவ்வூர்வலத்தில்; விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மீதான 'காட்சி' விசாரணையையும் தமிழ் அகதிகளின் கட்டாய திருப்பியனுப்புதலையும் நிறுத்த இந்தியாவுக்கும் தமிழர் தாயகத்தில் மருந்து, உணவு, எரிபொருள் தடையை நீக்கி, யுத்தத்தை நிறுத்தி, ஓர் அமைதித் தீர்வுக்கு இலங்கை அரசுக்கும் கோரிக்கைகள் முன்வைக்கப்படவுள்ளன.

சர்வதேச தமிழர் சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ள இவ்வூர்வலம் பார்க் லேன், பிக்கடிலி, ஹேமாக்கற் வழியாக செல்லும்.


FIAT LUX

**Hartley College**
**PAST PUPILS ASSOCIATION**
**(UK BRANCH)**

**ANNUAL GENERAL MEETING**

DATE : Saturday 15th August 1992
TIME : 5.30 PM
VENUE : Holiday Inn (Commonwealth Suite) (Hotel Marriott) Ditton Road, Langley, Slough Berks SL3 8PT

Nominations for Office Bearers for the following Posts close on 8th Augst 1992

1. President
2. Vice Presidents (2 Posts)
3. Secretary
4. Assistant Secretary
5. Treasurer
6. Social Secretary
7. Executive Committe Members (6 Posts)

Nominations should be forwarded to the under-mentioned

Secretary
Hartley College PPA
85 Windsor Avenue
Hillingdon, Middlesex
UB10 9AX



**FIRST SEE THEN BUY**

LOW! LOW! LOW!
IN PRICE

HIGH! HIGH! HIGH!
IN QUALITY

DINNER SETS (35, 45, 95 PIECES)
COFFEE SETS
TEA SETS
CASSEROLE / VEGITABLE DISHES

EMPOSSED AND INLINE DESIGN
IN FINE CHAINA
AVAILABLE

FOR DETAIL:
CONTACT
081 509 2563




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தெல்லிப்பழை துர்க்கை ஆலயம் வேண்டுமென்றே தாக்கினர்

## தங்கம்மா அப்பாக்குட்டி

(நமது நிருபர்)

இலங்கையில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் மீதும் அதன் பக்கத்திலுள்ள கட்டடங்கள் மீதும்" இலங்கை இராணுவத்தின் பேஸ்விமானங்களும் ஹெலிகாப்டர்களும் மூர்க்கத்தனமான குண்டுமாரி பொழிந்ததில் ஏற்பட்ட சேதங்கள் பற்றிய விபரங்களை தேவஸ்தான தலைவி சிவதமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பக்குட்டி அறிக்கையொன்றில் விபரித்திருக்கிறார்."

கடந்த மே 31ந் தேதி நண்பகல் 12.15க்கும் 12.45க்குமிடையே நிகழ்ந்த இத்தாக்குதல்கள் மூன்று விதமானவை என்று அவர் குறிப்பிடுகிறார்; அவை:

1.ஐக்கிய தேச உதவியுடன் கிடைத்த அரசாங்க ஆஸ்பத்திரி அம்புலன்ஸ் மீது ஹெலிகாப்டரிலிருந்து வீசப்பட்ட குண்டின் தாக்குதல்.

2.குண்டு வீசும் விமானத்திலிருந்து நான்கு தடவை குண்டுத் தாக்குதல்.

3.அவ்ரோ விமானத்திலிருந்து வீசப்பட்ட பீப்பாய், குண்டு.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிப்பதாவது:

எமது தேவஸ் தானத்தின் ஆதரவில் 67 குழந்தைகள் தங்கியிருக்கும் விடுதியுண்டு. இவ்விடுதியின் ஆசிரியர்கள் ஆறு பேர். இதன் ஆதரவில் முதியோர் ஆறுபேரும் இருக்கிறார்கள். இதைத்தவிர கோயில் வட்டாரத்துள்ளே ஆலயச்சிப்பந்திகளும் வசிக்கிறார்கள். 1990 ஜுன் மாதத்திலிருந்து அகதிகளின் குடும்பங்கள் பல இந்த ஆலயத்திலே வந்து தஞ்சமடைந்திருக்கிறார்கள். 1992 மே 30, தேதிகளில் பாதுகாப்பு நடவடிக்கை காரணமாக வந்து ஒதுங்கிய குடும்பங்கள் பல. குண்டு வீச்சு நடந்த சமயம் சுமார் 2500 மக்கள் இந்த ஆலயத்திலும் சுற்றுப்புறத்திலும் நெருங்கியிருந்தார்கள்.

தேவாலயத்தில் தஞ்சமடைந்தால் போர் விமானங்களின் தாக்குதலைத் தவிர்க்கலாம் என்ற நம்பிக்கையில்தான் இந்த மக்கள் கூடியிருந்தார்கள். சர்வதேச செஞ்சிலுவைச்சங்கமும் சிறீலங்கா செஞ்சிலுவைச் சங்கமும் கொடுத்த உத்தரவின் பேரில் கோயிலின் கோபுரத்தின் உச்சியில் செஞ்சிலுவைச் சங்கக்கொடி பறக்க விடப்பட்டிருந்தது. இந்தக் குண்டுத்தாக்குதலை மக்கள் எதிர்பார்க்கவில்லை. திடீரென வந்து விமானங்கள் குண்டுகளைப் பொழிந்தன. ஸ்தலத்திலேயே மூவர் கொலையுண்டனர். மற்றும் மூவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட பின் இறந்தனர்.

இருபத்தைந்து பேர் படுகாயமும், 100 பேர் சிறுகாயமும் அடைந்தனர். இந்தக் குண்டு வீச்சில் கோயில் பிராகாரத்திலுள்ள வசந்தமண்டபம் அழிந்து போய்விட்டது. தென்மேற்குப் பிராகாரத்திலுள்ள திருமுறை மண்டபமும் தகர்ந்து போயிற்று. இந்த மண்டபத்தினுள் தான் தேவஸ்தான சபை முதல்வரின் காரியாலயமும் உள்ளது. ஆலயச்சிப்பந்திகளில் பிரதம குருக்கள் விடுதியும், உதவியாளர் ஒருவர் வீடும் சேதமடைந்தன. இங்கு ஏற்பட்ட சேதங்களின் அளவை ரூபாய்க்கணக்கில் மதிப்பிடமுடியாமலிருக்கிறோம்.

இலங்கையின் பல பகுதிகளிலும், முக்கியமாக வடபகுதிமுழுவதிலும் பிரசித்தி பெற்று, இந்துமக்களுக்கு மாத்திரமல்ல மற்றவர்களுக்கும் பலவித சேவைகளைப் புரிந்து வந்த இவ்வாலயம் படுமோசமாகத் தாக்கப்பட்டுச் சேதமடைந்தது, எல்லோர் இதயங்களையும் வெகுவாகப் பாதித்து விட்டது. வெளிநாடுகளில் தஞ்சமடைந்த ஈழத்து இந்துகளுக்கு இது ஒரு பெரிய இழப்பு. இந்தத் தாக்குதல் வேண்டுமென்றே, ஆலயத்தை அழிக்க வேண்டுமென்றே நடத்தப்பட்டிருக்கிறது. இந்த ஆலயத்தின் சேவைகளைப்பற்றி, செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமாக இலங்கை அரசு நன்றாகத் தெரிந்து கொண்டிருகிறது. இந்த ஆலயத்தின் மகிமையைப்பற்றி மக்கள் பல்லாண்டுகளாகத் தெரிந்திருப்பதால், எந்த ஆபத்துக்கும் இங்கு தஞ்சடைந்தால் பாதுகாப்புக்கிடைக்கும் என்று நம்பினார்கள். இப்போது மக்கள் வாழ்வு சீர்குலைந்து விட்டது. குழந்தை இல்லங்களை நடத்த முடியவில்லை. மற்றும் சமூக சேவைகளையும் நடத்த முடியவில்லை.

இதில் துயருறும் கோயில் நிர்வாகிகள் இந்தக் கொடிய அழிவைச் செய்தவர்கள் மீது விசாரணை செய்து உரிய தண்டனை விதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றனர். துர்க்கையம்மன் கோயில் வட்டாரத்தை ஒரு புனித ஸ்தலமாகவும் பாதுகாப்பு இடமாகவும் உடனே அறிவித்தல் செய்ய வேண்டுமென்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை நாம் வேண்டிக் கொள்கிறோம்.

பக்தர்கள் யாவரும் அமைதியோடும் துர்க்காம்பாள் மீது நம்பிக்கையோடும் அவளின் தர்மமும் நீதியும் காப்பாற்றும் என்ற உறுதியோடும் இருக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

# எல்லோருக்குமாக போராடியவர் அமிர்தலிங்கம்

(கொழும்பு நிருபர்)

"தலைவர்கள் திரு அமிர்தலிங்கமும், திரு யோகேஸ்வரனும் ஏன் கொல்லப்பட்டார்கள்! தமிழ் மக்களுக்காக அவர்கள் கண்ணிமைக்காது உழைத்தார்கள் என்பதற்காகவா, அல்லது தமிழர் பிரச்னையைத் தீர்ப்பதற்கான முயற்சியில் அவர்கள் பெருமளவில் உதவினார்கள் என்பதற்காகவா அல்லது இந்நாட்டிலுள்ள எல்லா இனத்தவர்களும் கௌரவத்தோடும் உரிமையோடும் வாழ வேண்டும் என்று விரும்பினார்கள் என்பதற்காகவா"?

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் திரு அமிர்தலிங்கத்தினதும், திரு யோகேஸ்வரனினதும் 3ஆவது ஆண்டு நினைவுக்கூட்டம் கூட்டணியின் கொழும்பு தலைமை அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றபோது உரையாற்றிய தமிழர் கூட்டணித் தலைவர் திரு மு.சிவசிதம்பரம் உணர்ச்சியோடு வினவினார்.

விருந்தினராகவந்து தேநீர் அருந்தியவண்ணம் தமிழினத்தை எப்படி ஒற்றுமைப்படுத்தலாம் என்று பேசிக்கொண்டிருந்தவர்கள், தேநீர்க் கோப்பையை வைக்கையில் திடீரென்று இச்செயலைப் புரிந்தார்கள் என்று, அப்போது கூடவே இருந்தவரான கூட்டணித்தலைவர் அங்கு கூறினார். அமிர்தலிங்கம் தமிழ் மக்களுக்கு எதிரான அநீதியை ஒழிப்பதற்காக மாத்திரம் போராடவில்லை. இந்திய வம்சாவளி மக்களினதும், முஸ்லிம்களினதும் பிரச்னைகளிலும் அவர் தயக்கமின்றி தலையிட்டார் என்றும் திரு சிவசிதம்பரம் சுட்டிக்காட்டினார்.

இந்துசமய, இந்து கலாச்சார அமைச்சர் திரு.பி.பி.தேவராஜ், சமசமாஜக் கட்சித் தலைவர் திரு பேனாட் சொய்சா, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் திரு எம்.எச்.எம்.அஷ்ரப், முன்னாள் மூதூர் எம்.பி.திரு அ.தங்கத்துரை ஆகியோரும் பேசினர்.

# அல்லலுறும் யாழ்மக்கள்

(நமது நிருபர்)

யாழ்ப்பாணத்தில் மக்கள் அன்றாட வாழ்க்கைத் தேவைகளுக்கும் அதியாவசிய மருந்துகளுக்கும் மிகுந்த கஷ்டப்படுகிறார்கள். அவர்களின் இந்த கஷ்டங்கள் நீங்கவும் அங்கு அமைதி சமாதானம் ஏற்படவும் வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் தம்மாலான விதத்தில் உதவ வேண்டும் என்று லண்டன் வந்திருக்கும் இலங்கை பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாசிரமத்தின் தலைவரான சுவாமி சித்ருபானந்தா தெரிவித்தார்.

பிரதமர் திரு ஜோன் மேயரையும் சந்தித்து உதவி கோரவிருக்கும் சுவாமிகள், 2 ஆண்டுகளுக்கு முன்னர் திருமதி தாச்சர் பிரதமராகவிருந்தபோது 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மருந்துவகைகளை தமக்கு தந்துதவியதாக தெரிவித்தார். இரண்டரை ஆண்டுகளாக மின்சாரம் இல்லாததோடு பெற்றோல், மண்ணெண்ணெயும் கிடைப்பதில்லை. இது எல்லா விதத்திலுமே பாதிப்புகளை ஏற்படுத்துகிறது என்று தெரிவித்த சுவாமி சித்ருபானந்தா, கிடைக்கும் உதவிகளை செஞ்சிலுவைச் சங்கம் தமக்கு சேர்ப்பிக்கும் என்றும் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: லண்டனிலிருந்து 'ஸ்கொட்' நிறுவனம், விம்பிள்டன், ஹைகேற் ஆலயங்கள், சைவமுன்னேற்றச் சங்கம் போன்றனவும் வெளிநாடுகளிலுள்ள எமது பக்தர்களும் எமக்கு ஏற்கனவே உதவுகிறார்கள். இவர்களின் உதவியுடன் நடமாடும் வைத்திய நிலையம், அநாதைப்பிள்ளைகளுக்கு சிறுசேமிப்புத் திட்டங்கள், வீடமைப்புத்திட்டம், கல்விவசதி போன்ற பலவற்றை செய்து வருகிறோம். இலங்கையில் இராமகிருஷ்ணமிஷன் போன்றவையும் உதவுகின்றன. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# இந்துமாமன்றத் தலைவர் காலமானார்

(கொழும்பு)

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் திரு.வே.பாலசுப்பிரமணியம் கடந்த புதன்கிழமை இரவு கொழும்பில் காலமானார். கடந்த ஐந்து ஆண்டுகளாக இந்துமாமன்றத்தின் தலைவராக அவர் விளங்கினார். கொழும்பில் பல ஆண்டுகாலமாக ஸ்தம்பித்துக்கிடந்த இந்து மாமன்றத்தின் கலாச்சார மண்டப கட்டடவேலைகள் இவரது உழைப்பால் இவரது காலத்தில் துரிதப்படுத்தப்பட்டன. 25 மில்லியன் ரூபா உத்தேச செலவிலான இக்கட்டடத்தின் நான்கு மாடிகள் பூர்த்தியாக்கப் பட்டுவிட்டன. இதில் இரண்டு மாடிகளுக்கான செலவினத்தை திரு பாலசுப்பிரமணியம் தாமே பொறுப்பேற்றிருந்தார்.



இலங்கை முழுவதிலும் பல நிறுவனங்களைக் கொண்ட இந்து மாமன்றம், திருக்கேதீஸ்வரம், நல்லூர் தேவஸ்தானங்களில் வேத பாடசாலைகள் போன்ற பல நிறுவனங்களை நிருவகித்தும் பல செயற்பாடுகளில் ஈடுபட்டும் வருகிறது. திரு பாலசுப்பிரமணியம் ஒவ்வாராண்டிலும் மன்றத்தின் பொதுக்கூட்டத்தில் ஏகமனதாகவே தொடர்ந்து தெரிவு செய்யப்பட்டடார்.

இந்து மாமன்றத்தைத் தவிர இன்னும்பல மத நிறுவனங்களில் அவர் உறுப்பினராகவிருந்தார். பல வர்த்தக நிறுவனங்களின் அதிபரும் தர்மசிந்தனையாளருமான இவர் வேறும்பல மத, தர்ம நிறுவனங் களுக்கு பெருமளவில் உதவியிருக் கிறார்.

61 வயதான திரு பாலசுப்பிரமணியம் கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்; கொழும்பு ஆனந்தா கல்லூரியில் கல்வி பயின்றவர். இவரது மனைவி திருமதி சாந்திக்கும் பிள்ளைகள் உகந்தன், கார்த்திகன் ஆகியோருக்கும் இந்து மாமன்றம் அதன் அநுதாபத்தைத் தெரிவித் திருக்கிறது.

# கனவாகும் இரவு

என்னிடம்
ஒரு துண்டுப் பிரசுரத்தைப் போல
நம்பிக்கையும் முடிவும் சொல்லத்தக்க
வார்த்தைகள் இல்லை.

இரவு;
இரவினால் அதிகாரமிடப்பட்ட பகல்;
நாளைக்காலையில்
சூரியன் உதிக்குமா என்பதில் கூட
சந்தேகம் கொண்டுள்ள என்னிடம்
கனவுகள்
தம் அர்த்தத்தை இழந்தவைதான்.

இந்தச் சமூகத்தின் தொப்புள் கொடிக்கு
துப்பாக்கி நீட்டப்படும்போது
ஒரு மெல்லிய பூ நுனியில்
உட்காரக்கூடிய
வண்ணத்துப்பூச்சியின் கனவு
எனக்கு சம்பந்தமற்ற
ஒரு சம்பவிப்பு மட்டுமே.

நான் மனிதனாய் வாழும் முயற்சியில்
பூக்களை மரத்துடன் விட்டுவிட விரும்புகிறேன்
எனக்கு
பகலால் உருவமைக்கப்பட்டு அழகிய இரவு
கனவாய் உள்ளது.

–சிவரமணி–
1989



தமிழோசை முதற்பிரதி வெளியீட்டை யொட்டி விம்பிள்டன் விநாயகர்ஆலயத்தில் விஷேடபூசைகள் நடைபெற்றன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உலக அரங்கில்

## இவ்வார அரசியல் கள கண்ணோட்டம்

**-விமல் சொக்கநாதன்-**

# மயிர்நீப்பின் வாழா பொஸ்னியக் கவரிமான் மக்கள்

காரிருள் நேரம்; பீரங்கிக் குண்டொலி தொலை தூரத்தில் கேட்கிறது. கட்டடங்கள் விழுந்து நொறுங்கும் அழிமிதி அவலம். காயம்பட்டு வேதனையால் துடித்து இறக்கும் மக்களின் மரணக்குரல் ஒலிக்கிறது. இதுதான் பொஸ்னியா. முன்னாள் யூகோஸ்லாவிய குடியரசில் இருந்து பிரிந்து சென்று தனிநாடு அமைத்த புதிய குடியரசு! பொஸ்னியாவின் பல நகரங்களில் இன்று இதே நிலைதான். குறிப்பாக தலைநகரம் சறயேவோ- எதிரிகளான சேர்பியர்களினால் இரவுபகலாக தாக்கப்பட்டு வருகிறது.

ஐரோப்பிய குடும்பநாடுகள் தமது சமரசத்தூதர்களை அனுப்பி என்ன பயன்? ஐ.நா.உலகநாடுகள் மன்றத்தில் ஏற்றுமதித்தடைகள் சேர்பியாவுக்கு எதிராக பிரகடனம் செய்யப்பட்டுத்தான் என்ன பயன்? அழுகுரல் தொடர்கிறது. அவலம் நீடிக்கிறது.

பிரான்ஸ் நாட்டின் அதிபர் மீற்றெறாங் அவர்கள் மேற்கொண்ட துணிச்சலான ஒரு செயல், தமது உயிரையே பணயம் வைத்து அந்த பெருமகனார் மேற்கொண்ட ஒரு திடீர் விஜயம் அழுது கொண்டிருக்கும் பொஸ்னியக் குழந்தைகளுக்கு உணவளித்திருக்கிறது. செய்வதறியாது திகைத்துக் கொண்டிருந்த பெற்றோரின் வயிற்றில் பாலை வார்த்திருக்கிறது.

பொஸ்னியக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, மருந்து வகை போர்வை என்றெல்லாம் வழங்க முன்வந்த நாடுகள் இந்த உதவிகளை எப்படி அங்கே கொண்டுபோய் இறக்குவது என்று சிந்தித்தன; ஆனால் செயற்பட மறுத்தன.

காரணம் தலைநகர் சறயேவோ விமானநிலையம் மூடப்பட்டிருந்தது. விமான இறங்கு பாதையின் இருமருங்கிலும் சண்டையிடும் குழுக்கள். குண்டுவைப்பு! துப்பாக்கிச்சண்டை! இவற்றிற்கு மத்தியில் நிவாரண உதவிகள் கொண்டுவரும் எந்த நாட்டின் விமானமாவது இறங்கமுடியுமா என்ன?

இரண்டு வாரங்களுக்கு முன்- ஒரு சனிக்கிழமை தமது விசேஷ விமானத்தில் ஏறி சறயேவோ நோக்கிப்புறப்பட்டார் அதிபர் மீற்றெறாங். உலகநாடுகளின் தலைவர்கள் திகைத்து நின்றார்கள்.



சேர்பியர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டு பொஸ்னிய கிராம வீதியொன்றில் குவிக்கப்பட்டுள்ள முஸ்லிம்களின் சடலங்கள்.

சிலர் முகம் சுளித்ததார்கள். பத்திரிகையாளர்கள் பரபரப்புடன் காத்து நின்றார்கள். ‘மனிதர் துணிச்சல்காரர்தான்’ என்று முணுமுணுத்தபடி விமான நிலையத்திற்கு ராணுவ லாரியில் விரைந்து சென்றார் ஐ.நா.படைகளின் தளபதி (கனடிய ஜெனரல்) மக்கென்சீ!

பிரெஞ்சு விமானம் வந்திறங்கியது. சறயேவோ விமான நிலையத்தை மீண்டும் திறந்து இயங்க வைக்கிறேன் என்பது போல அதிபர் வந்து சேர்ந்தார். ஐ.நா.தளபதியின் துணையுடன் பொஸ்னியத் தலைவர்களைச் சந்தித்துப் பேசிவிட்டு அன்று மாலையே புறப்பட்டார். அவர் புறப்பட மீண்டும் விமான நிலையத்திற்கு வந்தபோது விமான நிலையம் குண்டுகளினால் தாக்கப்பட்டது. அதிபரும் அவரது குழுவினரும் சொற்பநேரம் பயணிகள் தங்குமிடத்தில் பதுங்க வேண்டியதாயிற்று.

பிரெஞ்சு அதிபரின் துணிச்சலான விஜயத்தை தொடர்ந்து ஒரு சில இழுபறிகளின் பின் விமான நிலையத்தை போராளிகளிடமிருந்து பறித்தெடுத்து பொறுப்பேற்றார் ஐ.நா. படைத்தளபதி.

உதவிவழுங்கும் நாடுகளின் விமானங்கள் தங்குதடையின்றி உணவோடும் மருந்துகளோடும் வந்து இறங்கின. இந்த வேளையில் “எங்களுக்கு உணவு வேண்டாம் துப்பாக்கிகள் தாருங்கள்” என்று உருக்கமாக கேட்டிருக்கிறார்கள் ‘மயிர் நீப்பின்வாழா- கவரிமான்’ போன்ற சறயேவோ மக்கள். தலைநகர் சறயேவோ நாலுமாதங்களாக எதிரிகளால் சுற்றி வளைக்கப்பட்டிருக்கிறது.சுமார் 750பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.தலைநகரில் மட்டும் 5,000 பேருக்கு காயம் பட்டிருக்கிறது. காயப்பட்ட குழந்தைகள் ஏராளம். காயத்திலிருந்து கிருமிகள் பரவாமல் தடுக்கும் மருந்துகள் மருத்துவமனையில் கிடையாது. இதனால் காயம்பட்ட கையையோ காலையோ டாக்டர்கள் வெட்டி எடுத்து விடுகிறார்கள், கிருமி இதர உறுப்புகளுக்கு பரவாமல் தடுப்பதற்காக! வெட்டி எடுக்கும் அறுவை சிகிச்சைகூட பெரும்பாலும் மயக்க மருந்து இல்லாத நிலையில்தான் செய்யப்படுகிறது.

நிரந்தர குண்டுத்தாக்குதலுக்கு தப்ப- பொஸ்னிய மக்கள் மறைவான இடங்களில் போர்வை தலையணை சகிதம் பதுங்கி வாழ்கிறார்கள். உண்ண உணவு இல்லாததால் புல்லைக்கூட தாம் உண்டு வாழ்ந்ததாக சிலர் கூறியிருக்கிறார்கள். இப்போது உணவு வண்டிகள் உணவு கொண்டு போயிருக்கின்றன. உணவு வேண்டாம். துப்பாக்கிகள் தாருங்கள் எங்கள் நாட்டைக் காப்பாற்றப் போகிறோம்! சறயேவோ்வில் வாழும் மூன்று லட்சம் மக்களுக்கு ஆயுதங்களை வினியோகிக்க மேற்குலக நாடுகள் முன்வர வேண்டும்- என்பதுதான் தலைநகரில் இப்போதைய பேச்சு.

## “எங்களுக்கு உணவு வேண்டாம் துப்பாக்கிகள் தாருங்கள்”

“சறயேவோ விமான நிலையம் திறக்கப்படாமலே இருந்திருக்கலாம். எங்களுக்கு உணவு மற்றும் நிவாரண உதவிகளை அனுப்பும் மேற்குலக நாடுகள் எங்கள் எதிரிகளை- ஆக்கிரமிப்பாளர்களை அழிக்க ஏன் முன்வரவில்லை?” என்று குரல் எழுப்பி இருக்கிறார் பொஸ்னியாவின் பாதுகாப்பு அமைச்சர்.

பொஸ்னிய-சேர்பிய கலவரத்தில் மேற்குலக நாடுகள் ராணுவரீதியாக தலையிட தயங்குகின்றன என்பது உண்மைதான். வளைகுடாப் போரில் அண்ணன் சதாம் அவர்களை குவேத்திலிருந்து அடித்து விரட்டியது போல இலகுவானது அல்ல இது என்பதை தலைவர்கள் புஷ், மேஜர், கோல், மீற்றெரோங் உட்பட அனைவருமே அறிந்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல; மேற்குலக நாடுகளில் இப்போது இன்னோர் கருத்தும் வேகமாகப் பரவிவருகிறது! மேற்குலகின் செல்வந்த நாடுகளைத் தவிர உலகின் எஞ்சிய நாடுகள் அனைத்திலும் பிரிவினைப் போர், வகுப்புவாதம், கலவரங்கள் தினசரி வாழ்க்கையாகிவிட்டன. தன் சொந்த நாட்டவனையே வெட்டிக் கொல்வது; தன் சொந்த நாட்டுச் சொத்தையே சீரழிப்பது. ஆசியா, ஆபிரிக்கா, தென் அமெரிக்கா, கிழக்கு ஐரோப்பா இந்த வட்டாரங்களில் நாடுகள் தம்மைத்தாமே ஆள அருகதை அற்றவை என்பது நிரூபிக்கப்பட்டு வருகிறது. அழிமிதி- சேதம்- சாவு என்று வரும்போது மட்டும் மேற்குலக நாடுகள் விரைந்து சென்று ஏன் உதவி செய்ய வேண்டும்? உலக ராணுவத்தை ஏன் அங்கு அனுப்ப வேண்டும்? என்று பலர் கேட்க ஆரம்பித்து விட்டார்கள். நியாயமான கேள்விதான். ஆனால் தாராள மனப்பான்மை, இரக்கசிந்தை கொண்ட பிரிட்டிஷ் பொதுமக்கள் மத்தியில், அவர்களின் நாடாளுமன்ற பிரதிநிதிகள் மத்தியில், இந்தக்கருத்து வேகுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## முஸ்லிம் மன்னர்கள் மத்தியில் மோதல்....

“இலங்கையின் இனத்தகராற்றில் அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா போன்ற வல்லரசுகள் இன்று கடைப்பிடித்து வரும் கொள்கைக்கு ஒரு காரணம்- ‘திருகோணமலை’ என்ற இயற்கைத்துறைமுகம்தான். அதன் கேந்திர முக்கியத்துவம்தான்!...” என்று ஒரு கருத்து அடிபட்டு வருகிறது. பிலீப்பீன்ஸ் நாட்டில் அமெரிக்கப் படைகள் தங்கி இருப்பதற்கு காரணம்; தென் கொரியாவில் அமெரிக்க செல்வாக்கு ஓங்கியிருப்பதற்கு காரணம்; வளைகுடாவில் முக்கியமான மன்னர்களை மேற்குலகம் தன் “கைக்குள் போட்டு வைத்திருப்பதற்கு” காரணம், அந்தந்த நாடுகளின் கேந்திர முக்கியத்துவம்தான் என்பது அரசியல் ஆய்வாளர்களின் கருத்து.


இப்படி மேற்குலக நாடுகளின் நண்பர்களான இரு அரபு மன்னர்கள் அண்மையில் மோதிக் கொண்டார்கள். அதற்குக் காரணம் அல் அக்ஸா என்ற புனித பள்ளிவாசல். உலக முஸ்லீம் மக்களின் மூன்றாவது முக்கிய தலம் என்று கருதப்படும் இத்தலத்திலிருந்துதான் தீர்க்கதரிசி நபிசள் நாயகம் அவர்கள் சுவர்க்க வாயில் ஏகினார் என்று கூறப்படுகிறது.

இந்தப்பள்ளிவாசலை அண்மையில் பரிசோதித்த யுனெஸ்கோ கலைகலாச்சார நிறுவனம் இதனைப் பழுதுபார்க்க பணம் தேவை என்று அறிவித்தது. இந்தப்பள்ளிவாசலுக்கு பொறுப்பான ஜோர்டான் நாட்டு இஸ்லாமிய புனித விவகார அமைச்சு பள்ளிவாசல் புனர் நிர்மாண வேலைகளுக்கு ஒரு தொகையை செலவிடப்போவதாக அறிவித்தது.

அயலில் இருந்த சவூதி மன்னராட்சி என்ன செய்தது? பள்ளிவாசல் சீரமைப்பு வேலைகளுக்கு சவூதி மன்னர் பாஹ்ட் இத்தனை லட்சம் டாலர் வழங்குவதாக அறிவித்தது! சவூதி அரேபிய பததிரிகைகளும் தமது மன்னருக்கு ஆதரவாக களத்தில் குதித்தன! “...ஐரோப்பிய பனிமய நாட்களில் சறுக்குபனி விளையாடிக் கொண்டு திரியும் ஜோர்டான் மன்னர் ஹூசேனுக்கு பள்ளி வாசலின் பழுதுகளை கவனிக்க ஏது நேரம்?” என்று சீண்டிவிட்டன.

ஜோரார்டான் அமைச்சு மீண்டும் தொடர்ந்தது: “எது எவ்வாறாயினும் பள்ளிவாசல் சீர்திருத்தும் வேலையை ஐக்கிய நாடுகளின் யுனெஸ்கோ நிறுவனத்திடம் கொடுக்கமாட்டோம். எங்கள் அல் அக்ஸா பள்ளிவாசல் பின் ஐ.நா.சொத்தாகிவிடும். இஸ்ரேல் கூட அதன்மீது இறைமை பாராட்ட ஆரம்பித்துவிடும்!” என்று அச்சம் தெரிவித்துள்ளது.

நியாயமான அச்சம்தான்! ஆனால் இந்த சவூதி அரேபிய- ஜோர்டான் மோதல் அல் அக்ஸாவினால் ஆரம்பித்ததா? இன்று நேற்று தொடங்கியதா?... இல்வேயில்லை. பல வருடங்களுக்கு முன்- தற்போதைய சவூதி மன்னராட்சிப் பரம்பரை ' நிறுவப்படுவதற்கு முன் ஹஷீம் மன்னர் பரம்பரை அடித்து விரட்டப்பட்டது. அந்தப்பரம்பரையின் வழித்தோன்றல்தான் இன்றைய ஜோர்டான் மன்னர் ஹூசேன். இப்படிப்பல வருடங்களாக எரிந்து கொண்டிருக்கும் வெந்த புண்ணில் வேல் பாய்சுவது போல வந்து சேர்ந்தது சதாம் ஹூசேனின் வளைகுடாப்போர். வளைகுடாப்போரில்- சதாமுக்கு ஜோர்டான் மன்னர் ஹூசேன் உதவுகிறார் என்று சவூதி மன்னராட்சி குற்றஞ்சாட்டியதற்குக் கூட இந்தப் பழம்பெரும் பகைமைதான் காரணம்!



ஷாமீர்

## பலஸ்தினிய மக்களுக்கு விடிவுகாலம் வந்து விட்டதா?...

“பலஸ்தினிய மக்களுக்கு நாங்கள் சுயாட்சி கொடுக்க மாட்டோம்! பலஸ்தினிய விடுதலை இயக்கத்தினருடன் நாங்கள் ஒருமித்து உட்கார்ந்து சமரசம் பேசமாட்டோம்! நாங்கள் ஆக்கிரமித்து வைத்துள்ள நிலங்களைத் திருப்பிக் கொடுக்க மாட்டோம். இதனை நிருபிக்க அந்த நிலத்தில் நாங்கள் யூத மக்களைக் குடியேற்றப் போகிறோம்!” என்று தனது ஆட்சிக்காலத்தில் பயமுறுத்தி வந்தது இஸ்ரேலின் தீவிர வலதுசாரிக்கட்சி. 76 வயதான அதன் தலைவர் இஸ்ரேலின் பிரதமர் ஷாமீர் அவர்களின் கையில் உலகப்போரை ஆரம்பிக்கும் விசை இருந்ததாக நிபுணர்கள் கருத்து வெளியிட்டார்கள். அத்தனை பிடிவாதம் கொண்டவர் அவர். அமெரிக்காவின் அரசியற் தந்திரம்- சாணக்கியத்தனம்- சமரசத்திறமை எதுவுமே அவரிடம் பலிக்காது!

(13ம் பக்கம் பார்க்க)




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எம்.ஜி.ஆர்: மனிதனும் மர்மமும்

**தமிழ் நாட்டிலே உதித்த தலைவர்களில் எம்.ஜி.ஆர். என்ற எம்.ஜி.ராமச்சந்திரன் வாழ்வும் வளர்ச்சியும் ஒரு தனி. அவர் ஆட்சிக்கு வருமுன்பும் முதலமைச்சராக வந்த பின்பும் தொடர்ந்து தனிப் பட்ட முறையிலும் உத்தியோக ரீதியிலும் நெருங்கிப் பழகி பல ரகஸ்யங்களை அறிந்த மலையாளப் பொலீஸ் அதிகாரி கே.மோகனதாஸ் தமது அனுபவத்தில் எம்.ஜி.ஆரிடம் கண்ட குணநலன்களையும் மற்றும் செய்திகளையும் எம்.ஜி.ஆர்: மனிதனும் மர்மமும் என்ற தலைப்பில் மிகவும் சுவாரஸ்யமான நூலாக எழுதி வெளியிட்டிருக்கிறார். பல அதிர்ச்சி தரும் செய்திகள் இந்த நூலில் காணப்படுகின்றன. பெங்களூர் "பாந்தர் பதிப்பகம்" என்ற நிறுவனத்தின் மூலம் வெளியிடப்பட்ட இந்த நூலின் விலை ரூபா 195.**



"எந்தா தரவாட்டு பேரு?" ( உங்க குடும்பப் பேர் என்ன?) என்ற கேள்விதான், நான் எம்.ஜி.ஆரை 1969ம் ஆண்டு முதல் முதல் சந்தித்தபோது அவர் என்னைக் கேட்டது. அப்போது நான் மதுரை மாவட்ட பொலிஸ் சுப் ரின்டென்டாக இருந்தேன். உத்தி யோக விஷயமாகத் தேனியிலிருந்து திரும்பி மதுரைக்கு வரும் வழியில், வைகை அணைக்கட்டு விருந்தினர் விடுதியில் எம்.ஜி.ஆர், "மாட்டுக்கார வேலன்" படப்பிடிப்புக்கு வந்தவர், தங்கியிருக்கிறார் என்று அறிந்து அங்கே பார்க்கச் சென்றேன். தி.மு.க. ஆட்சியில் அப்போது அவருக்கு மந்திரி பதவி இல்லையென்றாலும் சிறுசேமிப்புத் திட்டத்தில் உபதலைவர் என்ற பதவியில் மந்திரிக்கு இணையான அந்தஸ்தைப் பெற்றிருந்தார். எனவே மரியாதைக்காக நான் பார்க்க வேண்டிய கடமையிருந்தது.

படப்பிடிப்பைப் பார்க்க பெரிய கூட்டம் கூடியிருந்தது. காலை எட்டு மணியிருக்கும். அவர் இருந்த அறையில் அப்போது எம்.ஜி.ஆர். ஒரு வேஷ்டியுடனும் கையில்லாத பனியனுடனும் தேகாப்பியாசம் செய்து கொண்டிருந்தார். அவரது சின்னங்களான தொப்பியும் கறுப்புக் கண்ணாடியும் காணப்படவில்லை. எனக்கு காப்பியும், தனக்கு பாலும் கொண்டுவரச் சொல்லிவிட்டு என்னிடம், "நான் காப்பி, தேநீர் சாப்பிடுவதில்லை. புகை பிடிப்பதுமில்லை, மது


மனைவி ஜானகியுடன்

அருந்துவதுமில்லை. தவறாமல் தேகாப்பியாசம் செய்வேன். அதனால்தான் நான் எனது உடல்கட்டை திடமாக வைத்திருக்க முடிகிறது" என்று விளக்கினார். பின்னர் பேசிக்கொண்டே "மாட்டுக்கார வேலன்" வேஷத்துக்கு "கோட்டும் சூட்டும்" அணிந்து கொண்டதைப் பார்த்து ஆச்சரியம் தெரிவித்தேன். கண்ணைச் சிமிட்டிக் கொண்டே சொன்னார், "இதுதானப்பா சினிமா, கண்கட்டு வித்தை. அரசியலிலும் என்ன, இந்த மாயாஜாலம்தான்". ஒரு சில நிமிடங்கள் இந்த அபூர்வ மனிதனுடன் நேருக்குநேர் தொடர்பு கொண்ட பின், நிச்சயமாக இவர் வாழ்க்கையில் வெற்றியடைவார் என்ற நம்பிக்கையுடன் புறப்பட்டேன். திரையில் மாத்திரமல்ல, திரைக்கு வெளியேயும் எம்.ஜி.ஆர். ஒரு நடிகன் தான். அரசியலிலும், ஆட்சியிலும், சொந்த வாழ்க்கையிலும் அந்த நடிப்பின் பண்புகளைக் காணலாம். தனது நடிப்புத்தான் மக்களைக் கவரும் ஆயுதம் என்பதை நன்றாக உணர்ந்து கொண்ட இந்த மனிதன், அவ்வவ்போது வேண்டியவாறு தனது முகபாவத்தை மாற்றிக் கொள்ளத் தெரிந்து கொண்டார். முகக்குறிப்பிலிருந்து இவர் உள்ளத்தில் என்ன நடக்கிறது என்பதை அறிய முடியாது. இதுதான் எம்.ஜி.ஆர்.மாயம்.

## சொந்த வாழ்க்கைமுறை

இந்த சந்தர்ப்பத்தில் எம்.ஜி.ஆரின் சொந்த வாழ்க்கை முறைபற்றியும் ஒரு வார்த்தை சொல்வது பொருத்தமாயிருக்கும் என்று நினைக்கிறேன். அவர் பரதாரத் தொடர்பு வைத்திருந்தவர் என்பதை மக்கள் எல்லாரும் அறிவார்கள். அவரது சொந்த மனைவி திருமதி ஜானகி ராமச்சந்திரனுக்கும் தெரிந்த விஷயம்தான். இது தமிழ்நாட்டிலே அன்றும் இன்றும் காணப்படும் வழக்கம்தான். ஒன்றோ இரண்டோ "சின்ன வீடு" வைத்திருப்பது ஒரு மதிப்பு என்று நம்புகிறார்கள். மிகுந்த செல்வம் படைத்தவர்கள் அவ்வப்போது "வீட்டை " மாற்றிக் கொள்வதும் வழக்கம். எம்.ஜி.ஆர். குடும்பத்தோடு நெருங்கிய ஒருவர் எனக்குச் சொன்னார், "எம்.ஜி.

> "எம்.ஜி.ஆரின் ஜாதகப்படி அவர் ஒரே சமயத்தில் இரண்டு மனைவியரை வைத்திருப்பார்" என்று இருக்கிறதாம். திரைப்பட உலகில் இருந்து காதலிகள் பலர் அவரை நாடினார்கள். ஆயினும் ஒரே சமயத்தில் ஒருவர்தான் 'இரண்டாம் தாரமாக' இருந்திருக்கிறார்.

ஆரின் ஜாதகப்படி அவர் ஒரே சமயத்தில் இரண்டு மனைவியரை வைத்திருப்பார்" என்று இருக்கிறதாம். திரைப்பட உலகிலிருந்து காதலிகள் பலர் அவரை நாடினார்கள். ஆயினும் ஒரே சமயத்தில் ஒருவர்தான் "இரண்டாம் தாரமாக" இருந் திருக்கிறார். தம்மோடு பழகிய பெண்களிடத்தில் அவர் சுயநலத்தோடு ஆட்சிப்படுத்தி வந்தார். அவர்கள் எல்லோரும் இப்போது வாழும் பெண்கள் அவர்களை இனம் காண்பது மரபல்லவாகையால், A,B,C,D,E என்று ஐந்து பேரைக் குறிப் பிடலாம். இவர்களில் ஒருவர் எம்.ஜி.ஆர் வாழ்வில் இருதடவை இணைந்தவர்.திருமதி ஜானகி ராமச்சந்திரன் (இவரும் திரைப்பட நடிகைதான்) இதையெல்லாம் சகித்துக்கொண்டது மாத்திரமல்ல, நான்கு பேருடன் நட்புரிமையோடும் பழகினார். எல்லாரும் இவரை அக்கா என்றுதான் அழைத்தார்கள். ஆனால், ஐந்தாவது நபரை ஜானகி வெறுத்தார். அரசியல் பேராசையும், சதிக்குணமும், மூர்க்க குணமுமுள்ளவர் என்று தள்ளி வைத்தார். இவர்கள் விரோதம் பரஸ்பரம் என்று சொல்ல வேண்டும். அத்துடன் இந்த இருவருக்குமிடையே நடக்கும் சக்களத்திப் போராட்டத்தை எம்.ஜி,ஆர். ரசித்தார் என்று சொல்ல வேண்டும். இது அவர் தனது நிலைமையை பலப்படுத் துவதற்கு நல்ல ஆயுதமாகப் பயன்பட்டது என்று கருதினார்.


## புரியாத புதிர்

எம்.ஜி.ஆர் ஆளுமை ஒரு புரியாத புதிர். அவர் ஒரு தேசியவாதி, மகாத்மா காந்தியைப் பின்பற்றினார், கடவுள் நம்பிக்கை வைத்திருந்தார். அப்படியிருக்க, சுயமரியாதையும் நிரீச்சுரவாதத்தையும், இந்தி எதிர்ப்பையும் பிரிவினை வாதத்தையும் கடைப்பிடிக்கும் திராவிட முன்னேற்றக் கட்சியுடன் எப்படிச் சேர முடிந்தது என்பதை விளக்க முடியவில்லை. எம்.ஜி.ஆர். ஓர் இரட்டை வேடதாரி. தி.மு.க. ஒரு வளரும் அரசியல் கட்சி என்பதையும், அவர்கள் மேடைப்பேச்சு வெகுசன மதிப்பைப் பெற்றது என்பதையும், காங்கிரஸின் நீண்ட நாள் ஆட்சியில் மாற்றம் வேண்டும் என்பதை மக்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பதையும், அவர்கள் தமிழினதும் தமிழ்நாட்டினதும் பாரம்பரியத்தை நிலைநாட்ட ஆவல் கொண்டுள்ளார்கள் என்பதையும் எம்.ஜி.ஆர். நன்றாகக் கணக்குப் போட்டு வைத்திருந்தார். இவர் ஒரு அறிவாளி என்று சொல்ல முடியாது.ஆனால், இரட்டைச் சிந்தனையிலும் இரட்டை நாவிலும், சிந்திக்கவும் பேசவும் ஒரு கலையை வளர்த்துக் கொண்டார். அடிக்கடி ஒன்றுக்கொன்று முரணாகப் பேசுவதிலும் செயலாற்றுவதிலும் உள்ள குறையைப் பற்றி எண்ணிப்பார்த்தது கிடையாது. மிகப்பெரிய வருமானத்தைப் பெறும் நடிகன் என்ற வகையிலோ அல்லது தமிழ்நாட்டின் முதல் மந்திரி என்ற வகையிலோ இந்த முரண்பாட்டைக் கவனித்தது கிடையாது. அவர் வாழ்வில் சுயநலம்தான் முக்கிய இடத்தைப் பெற்றது.

பழகுவதற்கு இனிமையானவராக இருந்தாலும் எம்.ஜி.ஆரின் ஆணவம் அளப்பரியது. அணுவளவு எதிர்ப்பு இருந்தாலும் மலையளவு கோபம் கொள்வார். தன்னைச் சுற்றியுள்ளவர்கள் மீது எப்போதும் சந்தேகக் கண். எல்லாமே ரகஸ்யம். சொந்த நலன்தான் நோக்கம். சினிமாவாயிருந்தாலும், அரசியலாயிருந்தாலும், நிர்வாகமாயிருந்தாலும் தந்திரமாகச் சுயநலத்தைப் பெறுவது தான் முடிவாயிருக்கும். எவர்மீதும் நம்பிக்கை கிடையாது. தமது சொந்த ஆளுமையை வளர்த்துக் கொள்வதில், பின்வருவது எதையும் பார்க்காமல், கணக்காயிருப்பார். திரைப்பட உலகில், தன் சொந்தப் படங்களுக்கு தானே காட்சிகளை அமைப்பதும், பாடல்களைத் தெரிவதும், தனது பெருமையை நிலைநாட்டுவதும் போலவே, அரசியலிலும் நிர்வாகத்திலும் தனது சொந்த வடிவத்தை முன் நிறுத்தினார்.

## முதல் அமைச்சர் எம்.ஜி.ஆர்

எம்.ஜி.ஆர். தமிழ்நாட்டின் முதலமைச்சராக ஏற்பட்டதும் நான் எனது பழைய உத்தியோகமான சி.பி.ஐ. பிரிவுக்குத் திரும்ப, டில்லிக்குப் போக விரும்பினேன்.



## திரையில் மாத்திரமல்ல வெளியிலும் நடிகன்தான்

ஆனால் அவர் எப்படியோ என்னைத் தமிழ்நாட்டிலேயே வைத்திருக்க முடிவு செய்து, ரகசியத் தகவல் சேகரிக்கும் பகுதியில் டி.ஐ.ஜி. பதவி தந்து வைத்திருந்தார். தகவல் சேகரிப்பதில் அவர் தவிர்க்க முடியாத ஆசையுள்ளவர். தகவலின் சக்தியை நன்றாக உணர்ந்தவர். உள்நாட்டு, வெளிநாட்டு, மற்றும் கட்சிகள் சம்பந்தமாகவும் தகவல் சேகரிக்க நான் எனது அலுவலகத்தில் முக்கியமான ஏற்பாடுகள் செய்யவேண்டி மாற்றங்கள் செய்தேன். தினந்தோறும் காலை 7 மணி, பகல் 1 மணி, மாலை 6 மணி என்று, முதலமைச்சர் எங்கே இருந்தாலும், (தலைமைச் செயலகத்திலோ, டில்லியிலோ, வெளிநாட்டிலோ) தகவல் தெரிவித்துக் கொண்டிருக்கவேண்டும். எல்லா விதமான தகவல்களையும் கேட்பதில் தாமதத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார்.

முதலமைச்சர் கடமைகளை எம்.ஜி.ஆர். நிறைவேற்றும் வகையை மற்றவர்கள் அறியமாட்டார்கள். தம்மைச் சுற்றியுள்ள அதிகாரிகள் யாவரும் தடுமாறுவார்கள். சக மந்திரிகளும், உயர் அதிகாரிகளும் தயார் நிலையில் இருக்க வேண்டும். தம் கீழ் வேலை பார்க்கும் வேலைக்காரர் காரணமில்லாமல் நீக்கப்படுவர். ஆனால், அவரது சம்பளம் கிரமமாக வீட்டுக்கு அனுப்பப்படும். சில சமயங்களில் உணவு கூட அனுப்பச் செய்வார். இரண்டொரு மாதம் சென்றபின், அதே வேலையாள் திரும்பவும் வேலையில் அமர்த்தப்படுவார். இப்படியான வழக்கமில்லாத வழக்கம் எம்.ஜி.ஆர். பொன்னான இதயமுள்ளவர் என்ற தோற்றத்தை உண்டுபண்ணும். ஆனால் எவரும் அவருடன் நெருங்கிய உறவு கொண்டிருக்கவில்லை. தனியாளாகத்தான் இருந்தார். சரியான நேரங்களில் தமது காரியங்களைக் கவனிப்பதில்லை. எந்தச் சமயத்தில் என்ன செய்வார் என்று சொல்ல முடியாது. ஆயினும் மக்கள் நேசித்தார்கள். தாம் அவர் சம்பந்தப்பட்ட மட்டில் எந்தப் பக்கத்தில் இருக்கிறோம் என்று தெரிந்தாலும் தெரியாவிட்டாலும், அவரை வாழ்த்தினார்கள். அவர் இதயத்தை எவரும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை.

எனது பொலீஸ் பதவிக்காலத்தில் எம்.ஜி.ஆரின் கீழ் உத்தியோகம் பார்த்ததில் அவர் பல சமயங்களில் தீர ஆலோசிக்காமல் திடீரென்று முடிவெடுப்பதும், பின்னர் மாற்றுவதும், சர்வ சாதாரணமாயிருக்கக் கண்டேன். மிகவும் பாரதூரமான முடிவுகளை எடுப்பார். பின்னர் அதற்கு எதிரான அறிவித்தலையும் சிறிதும் கவலைப்படாமல் கொடுப்பார். உயர் அதிகாரிகள் தலையைப் பிய்த்துக் கொள்வார்கள். உதாரணமாக, தாழ்த்தப்பட்டவர்களுக்கு உத்தியோகத்தில் இடம் கொடுக்கும் விஷயத்தில் பொருளாதார அடிப்படையில் தரம் பிரிக்க வேண்டும் என்று அறிவித்தல் செய்தார். இது ஆபத்தில் முடியும் என்று நான் முறையிட்டேன். ஆனால் அவர் ஒரு பெரிய திட்டத்தை ஏற்படுத்துவதாக நினைத்து சட்டசபையில் அறிவித்ததும் எதிர்பாராத குழப்பங்கள் ஏற்பட்டன. ஆனால் முதலமைச்சர் என்ன செய்தார் என்பதைப் பலர் அறிவார்கள். தமது திட்டத்துக்கு எதிர்மாறாக, அந்தத் திட்டத்தை வாபஸ் செய்தது மாத்திரமல்ல, பதினைந்து வீத ஒதுக்கீடாக அவர்களுக்கு சலுகை செய்து விட்டார்.

1979 பாராளுமன்ற உபதேர்தலில் தஞ்சாவூர் தொகுதியை இந்திரா காந்திக்கு விட்டுக்கொடுப்பதாக எம்.ஜி.ஆர். ஒப்புக்கொண்டிருந்தார். பின்னர், அது வன்முறை அதிகரித்துள்ள பிரதேசம் என்றும், தி.மு.க ரௌடிகள் நிறைந்ததென்றும் சாக்குச் சொல்லிப் பின்வாங்கிக்கொண்டது பலருக்கும் தெரியும். உண்மையான காரணம் அதுவல்ல. டில்லியிலிருந்து பிரதம மந்திரி மொரார்ஜி தேசாய் எம்.ஜி.ஆரை உடனே டில்லிக்கு வரச்சொல்லி, "இந்திராகாந்தியா மொராஜி தேசாயா" என்பதை முடிவு செய்யச் சொல்லி, பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர் போல உறுமினார். அந்தச் சமயத்தில் மறுபேச்சுப் பேசாமல் பிரதமரின் விருப்பத்துக்கு மாறாக ஒன்றும் சொல்லாமல் ஒப்புக்கொள்ளவேண்டி வந்தது. உண்மை யான காரணம், அந்தச் சமயத்தில் அ.தி.மு.க. கட்சிபற்றிய ஊழல் தோப்புக்கள் எல்லாம் டில்லியில் இருந்ததை எம்.ஜி.ஆர். ஞாப கப்படுத்திக் கொண்டார்.

(அடுத்த இதழில் தொடரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# ANGLO ASIAN MINI MART

## Beckons You To

## EXPERIENCE THE DIFFERENCE

## OF

# SRI LANKAN PRODUCTS

## IN

# WEMBLEY

## HURRY CURRY

## DYNA FAB

ஆனந்தவிகடன், பொம்மை, பேசும்படம், குமுதம், கல்கி,
மற்றும் சகல வாரப் பத்திரிகைகளுக்கும்

# ANGLO ASIAN MINI MART

513 HIGH ROAD, WEMBLEY
TEL: 081-903 8202 FAX: 081-868 4918

www.tamil...net

தமிழோசை

## விலைப்பொருட்டால் ஊன் தருவார்....

முன்பெல்லாம் தமிழ்நாட்டின் ஹோட்டல் முகப்பில் "பிராமணாள் ஹோட்டல்", "சைவ உணவகம்", "மிலிட்டரி ஹோட்டல்" என்ற பெயர்ப்பலகைகளை ஒரு காலத்தில் காணக்கூடியதாயிருந்தது. மிலிட்டரி ஹோட்டல் என்பது "அசைவ" உணவு என்று சொல்லப்படும் மாமிச உணவை முக்கியமாக ராணுவத்திலுள்ளவர்கள் சாப்பிடுவதால், அந்த வகை உணவை 'மிலிட்டரி சாப்பாடு' என்று தமிழ்நாட்டில் வழங்கினார்கள். மற்றைய தாவர உணவு விடுதிகள் "வெஜிடேரியன்" ஹோட்டல்களாகி விட்டன.

இந்த வெஜிடேரியன் உணவுக்கும் மாமிச உணவுக்கும் இப்போது லண்டனில் பெரிய யுத்தம் ஒன்று ஆரம்பித்திருப்பதைப் பத்திரிகைகள் பெரிதுபடுத்துகின்றன. லண்டனில் பல ஆண்டுகளாக இயங்கிவரும் "வெஜிடேரியன் சொசைட்டி" என்ற தாவர உணவுச் சங்கத்தார் சமீபத்தில் தமது உணவுக்கொள்கையை வலியுறுத்த விளம்பர போஸ்டர்களை வெளியிட முயன்றார்கள். "அழுகலான குடலை உண்ண நீங்கள் விரும்புவீர்களா?" "செத்து நாற்ற மடிக்கும் பிணங்களைச் சாப்பிட முடியுமா?" போன்ற அருவருப்பான வாசகங்களைக் கொண்ட விளம்பரங் களைப்பற்றித் தெரிந்து கொண்ட பல உணவு விற்பனை நிலையங்கள் உடனே அந்த விளம்பரங்கள் வெளியிடப்படாமல் தடையுத்தரவு வாங்கியிருக்கின்றன. நூற்றுக்கணக்காக லண்டனிலும் மற்றுமிடங்களிலும் பல வர்த்தக நிலையங்கள், சேவ்வே, செயின்ஸ்பெரி, கேட்வே போன்றவை, தமது நிலையங்களில் கோடிக்கணக்கான பவுண் பெறுமதியான மாமிச உணவுப் பொருள்களில் வியாபாரம் நடத்தி வருகின்றன. இந்தப் புதிய விளம்பரங்கள் தமது வர்த் தகத்தைப் பாதிக்கின்றன என்பது இவர்கள் முறைப்பாடு.

லண்டனில், முன் ஒரு நாளில் சர் ஸ்டாவ்போட் கிரிப்ஸ் என்ற மந்திரி ஒருவர் இருந்தார். இவர் ஒரு தாவர உணவு மனிதர். இங்குள்ள பிரத்தியேகமான "வேகா" என்ற தாவர உணவு ஹோட்டலில் அவர் அடிக்கடி சென்று உணவருந்துவது வழக்கம்.

லண்டனில் மரத்துக்கும் மிருகத்துக்கும் நடக்கும் இந்தத் துவம்சயுத்தம் எப்படி முடியுப்போகிறது என்று சொல்ல முடியாது. இந்தச் சமயத்தில் "அனைத்துலகத் தாவர உணவுச் சங்கம்" என்ற அமைப்பைச் சேர்ந்த நானூற்றுக்கும் அதிகமான அங்கத்தவர்கள் வரப்போகும் ஜனவரி மாதத்தில் "தர்மமிகு சென்னையில்" மாநாடு கூடப்போவதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. அதுபோல, "அனைத்துலக மாமிச உணவுச்சங்கம்" என்று ஓர் அமைப்பு லண்டனில் உதயமாகுமா?

# வடக்கே ஒரு கச்சத்தீவு

இந்தியப் பத்திரிகைகளில் இப்பொழுது அதிகம் அடிபடும் ஒரு பெயர் தீன்பிகா. இது ஒரு நிலப்பரப்பு; மிகச்சிறியது. கால் பந்து மைதானம் அளவு பரப்பு. அவ்வளவுதான். இந்தியாவுக்கும் பங்களாதேஷுக்கும் இடையே உள்ள இந்தச்சிறிய மண்பரப்பை இந்தியா ஜுன் 26-ஆம் தேதி பங்களாதேஷ் நாட்டுக்கு 999 வருடக் குத்தகையாகக் கொடுத்திருக்கிறது. இதற்கு இந்தியாவில் அரசியல் கலகலப்பு எழுந்துள்ளது.

நம்வீட்டு ஓரமாக பக்கத்து வீட்டுக்காரார் நடந்து செல்ல அனும திப்பது போன்ற ஒப்பந்தம். இந்தியாவுக்கு இழப்பு இல்லை; வங்கதேசத்திற்கு ஊசிமுனை அளவு கூட நிலப்பரப்பு கூடிவிட வில்லை.ஏதோ திடீரென்று பங்களாதேஷுக்கு இந்தியா உதவிவிட்டதாகச் சொல்லமுடியாது. நாம் சுதந்திரம் பெற்ற 1947-ல் நமக்கும் பாகிஸ்தானுக்கும் இடை யே நிலப்பரப்பைப் பிரித்துக் கொள்வது, அதன் நடைமுறை சாத்தியமான அம்சங்களில் ஒப் பந்தம் செய்து கொள்வது தொடர் பான ஒரு ராஜீய சடங்குதான் இது.

சாதாரணமாக இதற்கு விபரமறிந்தவர்களிடமிருந்து எதிர்ப்பு வருவதற்கில்லை. மக்கள் சும்மா இருந்தாலும் அரசியல்வாதிகள் விட்டுவிடுவார்களா? பாரதீய ஜனதா, பார்வர்டு பிளாக் ஆகிய

அகராதி

கட்சிகள் டெல்லியிலும் கல் கத்தாவிலும், தாவாவுக்கு உட்பட்ட பகுதியிலும் மக்களைத் தூண்டி விட்டன. போராட்டம்; அதை அடக்க முயல்வது; அதில் சிலர் சாவு; பலர் காயம். இந்த சாங்கித்யங்களும் அங்கே நடந்தன. இந்தக் குத்தகை ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் என்ன? நல்ல கேள்வி! இதோ பதில்:

இந்தியாவுக்கும் பங்களா தேஷுக்கும் இடையே டீஸ்டா என்ற ஒரு ஆறு ஓடுகிறது. இதன் கரையோரம் டாஹாகிராம் என்ற வங்காளதேசப்பகுதி இருக்கிறது. தனியே இருந்து தொலைத்து விட்டால் பரவாயில்லையே பூகோள அமைப்பின்படி பாக்குவெட்டிக்குள் அகப்பட்ட கொட்டைப்பாக்கினைப் போல் இந்தியாவின் மேற்கு வங்காள மாநிலத்தின் மெக்ளகஞ்ச், குச்ளபாரி என்ற பகுதிகளுக்கு இடையே அமைந்து விட்டது. வங்காளதேசத்திதிலிருந்து இந்தியப் பகுதியை ஊடுருவித்தான் நுழையவேண்டும் இந்த டாஹாகிராம் செல்ல; அல்லது வெகுதொலைவு மேற்கு வங்களா மாநிலத்தைச் சுற்ற வேண்டும்.

இந்த இரு இந்தியப் பகுதிகளுக்கு இடையே மூக்கை நுழைக்கப் பார்க்கும் பங்களாதேஷ் டாஹாகிராம் பகுதியை 178 மீட்டர் நீளமும் 85 மீட்டர் அகலமும் உள்ள இந்தியப்பகுதி மூலம் அடையலாம் - இந்தியா வழிசெய்து கொடுத்தால். அதைத்தான் இந்தியா செய்து கொடுத்திருக்கிறது. ஆயினும் அது இந்தியப்பகுதி; இந்தியக்கொடிகள் பறக்கின்றன. பங்களாதேஷ் மக்கள் அந்தப் பாதையை 999 ஆண்டுகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். அதுதான் ஒப்பந்தம். ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்கள்:

1.பங்களாதேஷுக்கு அன்றாட வாழ்க்கை வசதியைக் கருதி ஒரு பாதை வசதி குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த 15,130 சதுர மீட்டர் எப்படிப் பார்த்தாலும் இந்திய நிலப்பகுதியே.

2.பங்களாதேஷ் மக்கள், பங்களாதேஷ் அரசு ராணுவ தளபாடங்கள் உட்பட எல்லாப் பொருட்களையும் எடுத்துச் செல்ல உரிமை உண்டு. பயண ஆவணங் கள் தேவையில்லை. இந்திய மக்களுக்கும் இதே உரிமை உண்டு.

3.பங்களாதேஷ் மக்களுக்கு இடைஞ்சல் ஏற்படாதபடி இந்தியா தீன்பிகா பகுதிக்கு மேலோ, கீழேயோ ஒரு தனிப்பாதை அமைத்துக்கொள்ள உரிமை உண்டு.


4.குத்தகை விபரங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு இருநாட்டு அதிகாரிகளுக்கும் உண்டு.

5.இந்தப் பகுதியில் ஏதேனும் குழந்தை பிறந்தால் அது இந்தியப் பிரஜையாகவே கருதப்படும்.

6.இந்தப் பகுதியில் எவரேனும் குற்றம் புரிந்தால் அந்த நாட்டவர் சட்டப்படி அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படும். இருநாட்டவர் தொடர்புடைய குற்றம் என்றால் ஸ்தலத்தில் உள்ள நாட்டின் சட்ட ஒழுங்கு அதிகாரி தக்க நடவடிக்கை எடுத்து மற்ற நாட்டுக்கு அது பற்றி அறிவிப்பார்.

7.ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படாத எஞ்சிய சகல அதிகாரங்களும் இந்தியாவுக்கே.

ஒரு விதத்தில் இந்த ஒப்பந்தம் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கச்சத்தீவு ஒப்பந் தத்தை நினைவுபடுத்துகிறது.ஆனால் கச்சத்தீவு விவகாரம் 1974-ல் அது கொடுக்கப்பட்ட பொழுது இவ்வளவு பரபரப்பாக்கப்படவில்லை. இப் பொழுது சிக்கலாக்கப்படுமோ என்ற நிலை தோன்றி மறைந்து விட்டது.




இந்திய மீனவர்களுக்குக் கச்சத் தீவுப்பகுதியில் மீன் பிடிக்க இந்திய இலங்கை ஒப்பந்தம் வழிசெய்துள் ளது; இருப்பினும் இந்திய மீன வர்கள் இலங்கைக் கடற் படையினால் தாக்கப் படுவதாகக் கூறப்படுகிறது. அதற்கு ஈழம் பிரச்சனை காரணம். அப்படியொரு பிரச்னை தீன்பிகாவைப் பொறுத்த மட்டில் எழாவிட்டால் நல்லது.

# உரைகல்

"ஆசிரியர் அவர்கட்கு"

அன்புடையூர்!

தங்களின் பத்திரிகையின் "எழில் அமைப்பு" என்னைச் சேர்ந்த பலர் மனதை வருடிவிட்டது. ஆக்கபூர்வமான செய்திகளும், நடுநிலை தவறாத நேர்மையும், தங்கள் பத்திரிகை வளர்ச்சியை மேலும் மேலும் வளர்த்தெடுக்கம் என்பதில் ஐயமில்லை!

வளர்க தங்கள் பணி!

அன்பின்,
அபிமான வாசகர்
-வண்ணையூரான்-
(கே.கணேசமூர்த்தி)

29- RUE DES PEUPLIERS
92100- BOULQGNE
FRANCE

ஆசிரியர்க்கு வணக்கம்.

'தமிழ் ஓசை'க்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள். பத்திரிகை மிகவும் தரமான நல்ல அம்சங்களுடன் அழகாக உலக தமிழருக்கு உருவாக்கப்பட்டுள்ளது வெளிப்படை. இப்படியே தொடர்ந்து உருவாக்குவீர்கள் என்று நம்புகின்றேன். செய்திகளை அதிகமாக எதிர்பார்க்கின்றோம். 'அலகில்லா விளையாட்டு', 'மகாராணி மெச்சிய மாட்டுப் பொண்ணு' வாசிக்க நன்றாக உள்ளன. பத்மாவின் செவ்வி அற்புதம். கலைஞர் ராஜாவின் கையும் கண்ணும் கடவுளின் கொடை. 'ஒரு ரயில் கிழக்கே போகின்றது'.... உண்மைச் செய்தியை கதை வடிவாக்கி போட்டுள்ளீர்கள். நன்றாக உள்ளது. மொத்தத்தில் யாவுமே பிரமாதம் சார்.நாங்கள் ஏதும் எழுதி அனுப்பினால் பிரசுரிப் பீர்களா?

அபிமான வாசகர்
எஸ்.மாதவன்
வெம்பிளி.

# நடந்து செல்லும் பெண் நீதிபதி

(சென்னை)

சென்னை உயர்நீதி மன்றத்தின் முதல் பெண் தலைமை நீதிபதி மேதகு காந்தகுமாரி படநாகர் அவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த போது கிடைத்த சில சுவையான தகவல்கள்:-

பில்வாராவில் நீதிபதியாக இருந்தபோது தன் வீட்டின் அருகேயே இருந்த கோட்டுக்கு நடந்தே செல்வாராம். ஒருநாள் ஒருவன் இவர் காதில் விழவேண்டுமென்றே சத்தமாக, "இதுவரை 35 ஹியரிங்குகள் (ஒத்தி வைப்புக்கள்) ஆகியும் என் தந்தையைப் பற்றியக் கேஸில் ஒரு ஒரு வரிகூட எழுதப்படவில்லை. இது என்ன நியாயம்?" என்று அவர்கள் மொழியில் புலம்பிக் கொண்டே சென்றானாம். அமைதியாக சென்றுகொண்டிருந்த இவர் கோர்ட்டு வளாகத்திற்குள் நுழைந்ததும் முதல் வேலையாக தன் உதவியாளரை அனுப்பி அந்தக் கேஸ் விவரங்களைக் கேட்டறியச் சொன்னார். உண்மையிலேயே நியாயமான காரணமின்றி, 35 முறை ஒத்திவைக்கப்பட்டிருந்தது. உடனடியாக "எந்த ஒரு கேஸையும் அனாவசியமாக ஒத்தி வைப்பு செய்யக்கூடாது" என்று ஆணை பிறப்பித்ததுடன், உடனடியாக அந்த வழக்கில் நீதிவழங்கவும் ஏற்பாடு செய்தார்.

ஆனால் இவரே ஒரு முறை ஒத்திவைப்பும் நிகழ்த்தி இருக்கி றாராம். ஒரு கணவன் மனைவியிடையே மனக்கசப்பு ஏற்பட்டு விவாகரத்துக்கோரி இவர் முன் நின்றனர். அவர்களுடைய 13 வயதுச் சிறுவனும் வாடிய முகத்துடன் நின்றானாம். அந்தச் சிறுவனைத் தனியாக விசாரித்த போது அப்பையன் தேம்பித் தேம்பி அழுததுடன் "எங்க அம்மா, அப்பா பிரிவால் பள்ளியில் என்னை எல்லோரும் கேலி செய்கிறார்கள். எனக்கு பெற்றோருடன் சேர்ந்து வாழ ஆசையாக இருக்கிறது. அதற்கு உதவுங்கள்" என்றானாம். உடனே நீதிபதி காந்தகுமாரி அவர்கள் அந்த வழக்கை ஒரு மாதத்திற்கு ஒத்திவைத்துவிட்டு அந்தப் பெற்றோருக்கு ஒரு மாத அவகாசம் கொடுத்து அவர்களை அழைத்துப் பேசினாராம். குழந்தையின் மனக்குமுறலையும் அவர்களுக்கு எடுத்துக் கூறினாராம். அதன்பின் பெற்றோர், தங்கள் மனக்கசப்புகளைக் குறைத் துக்கொண்டு ஒருவரையொருவர் புரிந்து கொண்டும் அனுசரித்துக் கொண்டும் சந்தோஷமாக வாழ முயற்சிப்பதாகக் கூறினரர்களாம். விவாகரத்து வழக்கு தள்ளுபடி ஆயிற்று. பின்னர் அவர்கள் மகனுடன் நீதிபதியைச் சந்தித்த போது, அந்தப் பையனுடன் சேர்ந்து வாழ்வதில் மிகுந்த மகிழ்ச்சியாக இருப்பதாக கூறினார்களாம்.

இப்படி மனிதாபிமானத்துடன் அணுகி ஒரு குடும்பத்தை இணைத்து வைத்ததுவும், அந்தச் சிறுவனின் மகிழ்ச்சியும் பசுமையான நினைவாக மனதில் நிலைத்திருப்பதாக நம் தலைமை நீதிபதி கூறினார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தழுவலும் தமிழாக்கமும் தமிழுக்கு அயலானதும்

அண்மையில் நண்பர் பாலேந்திராவின் நெறியாள்கையிலான நாடகங்கள் நான்கு தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகத்தினரின் இரண்டாவது நாடக விழாவின் முதற்கூற்றில் இடம் பெற்றன. இவை பற்றிய ஒரு விமர்சனச் செய்திக்குறிப்பு 'தமிழோசை'யின் முதலாவது இதழிற் பிரசுரமானது. விமர்சகர் மிகவும் நியாயமாகவே எழுதியிருந்தாரெனினும், பாலேந்திரா மொழிபெயர்ப்பு நாடகங்களையே நாடுகிறார் என்ற முத்திரை அவர்மீது பொறிக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டிய விமர்சகர், மொழிபெயர்ப்புகள் தம் அயற்தன்மை காரணமாக மக்களிடையே வரவேற்பைப் பெறத் தவறுகின்றன என்ற கருத்துக்கு இசைவாகவுஞ் சிறிது எழுதியிருந்தார்.

மொழிபெயர்ப்புகள் அயற்தன்மையுடையனவா என்பது ஒரு கேள்வி. அவை வரவேற்பைப் பெறுவதில்லையா என்பது இன்னொன்று. வரவேற்புப் பெறாமைக்கு அயற்தன்மை தான் காரணமா என்பது வேறொன்று. முதலில், பாலேந்திராவினால் நெறியாளப்பட்ட நாடகங்களைத் தமிழ் மூலப்பிரதிகளையுடையவை, தழுவல்கள், மொழிபெயர்ப்புக்களென்று பகுத்து, அவற்றின் அயற்தன்மை பற்றியும் வரவேற்புப்பற்றியும் பார்ப்போம். அதற்கும் மேலாகத் தமிழில் அயல் இலக்கியங்கள், இலக்கியக்கலை வடிவங்கள் என்பன பற்றியுஞ் சற்றுக் கவனிப்போம்.

அவைக்காற்றுக் கலைக்கழகத்தின் 'தமிழ் மூலப்பிரதி' நாடகங்கள்: மழை; நட்சத்திரவாசி; நாற்காலிக்காரர்; சுவரொட்டிகள்; வேடரை உச்சிய வெள்ளைப் புறாக்கள்; தப்பி வந்த தாடி ஆடு; எரிகின்ற எங்கள் தேசம்; துன்பக் கேணியிலே. (இவற்றுட் கடைசி நான்கும் லண்டனில் முதன்முறையாக அவர்களால் மேடையேற்றப்பட்டவை).

தழுவல்கள்: சம்பந்தம்; இரு துயங்கள்: தரிசனம்; பிரத்தியேகக் காட்சி. (பின்னைய இரண்டும் லண்டனில் முதல் மேடையேற்றங் கண்டவை).

மொழிபெயர்ப்புக்கள்: கண்ணாடி வார்ப்புக்கள்; யுக தர்மம்; ஒரு பாலை வீடு; முகமில்லாத மனிதர்கள்; புதிய உலகம் பழைய இருவர்; இடைவெளி; அரையுங்குறையும்; பாரத தர்மம். (இறுதி நாடகம் மட்டுமே லண்டனில் முதற்தடவையாக மேடையேறியது).

இலங்கையில் மேடையேறிய நாடகங்கள் பரவலான ஒரு ரசிக வட்டத்தை எட்டியவை. ஆகவே அவற்றை ரசிகர்கள் எவ்வாறு கருதினார்கள் என்பதை வைத்துச் சில முடிவுகட்கு வரலாம் என நம்புகிறேன். மொழி பெயர்ப்புக்களான கண்ணாடி வார்ப்புக்கள், யுக தர்ம்ம், ஒரு பாலை வீடு என்பன திரும்பத் திரும்ப மேடையேறிய நாடகங்கள். இவை பெற்ற வரவேற்பைத் தழுவல் நாடகமான சம்பந்தமும் பெற்றது. தமிழ் மூலப்பிரதியையுடைய நாடகங்களுள் நட்சத்திரவாசி தவிர்ந்த ஏனையவை விரும்பி ரசிக்கப்பட்டவையெனினும் முன்குறிப்பிட்ட அயல் மூலங்க ளையுடைய நாடகங்கட்கு அடுத்த படியாகவே அவற்றைக் கருத முடிகிறது. தமிழில் நல்ல நவீன நாடகச் சுவடிகள் போதாமை நம் கவனத்துக்குரியது. தமிழிற் கிடைக் கக்கூடிய நல்ல நாடகச் சுவடிகளின் தன்மையினதும் உள்ளடக்கத்தினதும் வரையறைக்குட்பட்ட வீச்சம் ஒரு முக்கியமான குறைபாடு. (சினிமாப் படப்பாணியிலும் கனமற்ற நகைச் சுவையுடனும் சில சமயம் இரட்டை அர்த்த ஆபாசக் கருத்துக்களுடனும் வரும் நாடகங்களைக் கணக்கிலெடுத்தால், பேராதனைப் பல்கலைக் கழக நாடகவிழாவில்

**லண்டனில் ரஸனை உள்ள தமிழர்கள் ஆங்கில நாடகங்களில் ஈடுபாடுடையோராக இருக்கிறார்களோ என்னவோ, தமிழ் நாடகங்களைப் பொறுத்த வரை அவர்களது அக்கறை போதாததாகவேயுள்ளது.**

**இசையிற் போன்று நாடகத்திலும் நல்ல ரஸனை பரிச்சயத்தின் மூலமே ஏற்படுவது. பரிச்சயமில்லாத எதுவுமே முதலில் மனதிற்கு அயலானது தான்.**

**ஒரு நாடகம் தமிழாக்கமோ தழுவலோ என்பதை விட, அது நாம் நமது சமுதாயத்தை, நமது சுற்றாடலை, நம்மைச் சூழவுள்ள உலகத்தை அறிய எவ்வளவு தூரத்துக்கு உதவுகிறது என்பது முக்கியமானது.**

**கம்பராமாயணம் ஒரு தழுவற் காவியம். அது தமிழுக்குப் பெருமை சேர்க்குஞ் சில முக்கிய இலக்கியங்களில் ஒன்று. வில்லிபுத்தூராரின் பாரதமும், புகழேந்தியின் நள வெண்பாவும் தழுவல்கள். பாரதியின் பாஞ்சாலி சபதமும், நியாயமாகச் சொன்னால், தழுவல்.**

**கதாநாயகன், கதாநாயகி, நல்லவர், கெட்டவர், பிரச்சனை, தீர்வு என்ற விதமான எதிர்பார்ப்புக் களுடன் நாடகம் பார்த்துப் பழகி விட்டால், நல்ல நவீன நாடகங்கள் உடன்பாடற்றவையாகத்தான் இருக்க முடியும்.**

1970-1976 காலத்தில் நவீன நாடகங்களை நிறையவே பார்த்திருக்கிறேன், இவை சராசரி தமிழ் வீடியோ பார்ப்பதற்கு ஒப்பான கலாரசனைக்குரியவை). இதனாலேயே தமிழாக்கங்களை அவைக்காற்றுக் கலைக்கழகத்தினர் நாட நேர்ந்தது.

பாலேந்திராவின் மொழிபெயர்ப்பு நாடகங்களிற் படுதோல்வி கண்டது புதிய உலகம் பழைய இருவர் மட்டுமே என்பேன். நாடகத்தின் போக்குடன் பார்வையாளர்களால் இணக்கங் காண இயலாது போயிற்று. இவ்வாறே தமிழ்ச்சுவடியான நட்சத்திரவாசியும் பார்வையாளர்களைக் கவரத்தவறியது. இரண்டிலும் இருந்த பொதுவான தன்மை நாடகத்தின் உள்ளடக்கமும் தன்மையும் பார்வையாளர்களாற் கிரகிக்க இயலாதவையாக இருந்ததும் பரிச்சயமின்மை அலுப்புக்கு வழிகோலியது மெனலாம். நாடகவிழாவில் இடம் பெற்ற தரிசனம் என்ற ஹவெல் நாடகமும் (இவற்றை விடக் குறைந்த அளவில்) இக்குறைபாட்டைக்(?) கொண்டிருந்தது. நம்மிற் பலரால் வஸந்தகுமாரியோ யேசுதாஸோ கர்னாடக சங்கீத ராகத்தில் அமைந்த ஒரு சினிமாப்பாட்டைப் பாடினால் ரஸிக்க முடியும். எத்தனை பேரால் அதே ராகத்தில் அவர்கள் பாடும்ராகம்- தானம்- பல்லவியைக் கேட்டுச் சுவைக்க முடிகிறது? இசையிற் போன்று நாடகத்திலும் நல்ல ரஸனை பரிச்சயத்தின் மூலமே ஏற்படுவது. பரிச்சயமில்லாத எதுவுமே முதலில் மனதிற்கு அயலானது தான்.

பாரத தர்மம், முகமில்லாத மனிதர்கள் இரண்டுமே வங்காள மூலத்தை உடையவை. இவற்றையும் சம்பந்தத்தையும் லண்டனில் பார்த்தவர்களில் எத்தனை பேர், இவற்றின்

## அயல் மொழிமூல தமிழ் நாடகங்கள் ஏன்?

மூலங்களைப் பற்றி யாருங் குறிப்பிட்டிராது விட்டால், இவை மொழி பெயர்ப்பு அல்லது தழுவல் என்று அடையாளங் கண்டிருக்கக் கூடும்? சம்பந்தம் நாடகப்பிரதியில் சில மட்டரகமான இரட்டை அர்த்த வாக்கியங்களையும் புகுத்தி யாரோ அதை வேறு ஒரு பேருடன் மேடையேற்றியதாக அறிந்தேன். இது நாடகத்திற்குத் 'தமிழ் தன்மை' சேர்ந்ததென்றோ 'ரசிக்கக் கூடிய விதமாக' நாடகத்தை அமைத்தது என்றோ யாருஞ் சொன்னால், அது சிரிப்புக்குரியதல்ல; அது மிகவும் மனவேதனைக்குரிய ஒரு நிலை.

யுக தர்மத்திலும் ஒரு பாலை வீட்டிலும் இடப் பேர்களையும் பாத்திரங்களின் பேர்களையும் (சிறிதளவுக்குச்) சில சம்பவங்களையும் மாற்றியிருந்தால் அவை மொழிபெயர்ப்புக்கள் என்று சொல்லவே இடமிராது. அவர்கள் வழங்கிய நான்கு தழுவல்களும் அயற் சுவடிகள் என்று சொல்ல மிகவுங் கடினமான முறையிலேயே தமிழில் எழுதப்பட்டவை. அயல்மொழி மூலத்தையுடைய நாடகங்கள் பல ஏன் பார்வையாளர்களால் விரும்பப்பட்டன? பல நல்ல நாடகங்கள் மனித உணர்வுகள், சமுதாய உறவுகள் என்பன தொடர்பானவை. சமுதாய, கலாச்சார வேறுபாடுகளையும் மீறிய மானுட அனுபவ ஒற்றுமைகள் சமுதாய விருத்தியாலும் அடிப்படையான மனிதத் தேவைகளாலும் மனிதனது சமுதாய இருப்பாலுஞ் சாத்தியமாகின்றன. இவையே, ஷேக்ஸ்பியர் முதல் இயனெஸ்கு, இப்ஸன் உட்பட்ட பல உயரிய நாடகாசிரியர்களது படைப்புக்கட்குச் சர்வதேசப் பண்பொன்றை வழங்குவன.

தமிழ்ச் சமுதாயம் தனது நிலமான்ய சமுதாய அமைப்பினின்றும் சிந்தனையினின்றும் விடுபடுகிற ஒரு கட்டத்தில் உள்ளது. முதலாளித்துவ முறையின் பாதிப்பு அதிகரித்து வருகிறது. அதையொட்டிய சமுதாய மாற்றமும் அதற்கப்பாலான ஒரு சமுதாய மாற்றமும் பற்றித் தமிழர் சிந்திக்கும் தேவையும் சூழலும் உருவாகிவிட்டது. எனவே, மேனாட்டு நாடகங்களில் இத்தகைய சமுதாயச் சூழலுக்குரியவை தமிழுக்கும் தமிழருக்கும் பொருந்துவனவே. அயலிலிருந்து வளங்களை எவ்வாறு உள்வாங்கிக் கொள்வது என்பது பற்றிய தெளிவு நமக்குத் தேவை.

கம்பராமாயணம் ஒரு தழுவற் காவியம். அது தமிழுக்குப் பெருமை சேர்க்குஞ் சில முக்கிய இலக்கியங்களில் ஒன்று. வில்லிபுத்தூராரின் பாரதமும், புகழேந்தியின் நள வெண்பாவும் தழுவல்கள். பாரதியின் பாஞ்சாலி சபதமும், நியாயமாகச் சொன்னால், தழுவல். அவரது பகவத்கீதை மொழிபெயர்ப்பு, தமிழாக்க இலக்கியத்தின் முக்கியமான ஒரு படைப்பு. தமிழ்ச் சிறுகதையின் அதி முக்கியஸ்தர்களில் ஒருவரான புதுமைப்பித்தனும் மொழிபெயர்ப்புகளிலும்தழுவல்களிலும் மிகவும் ஈடுபட்டிருக்கிறார். அயலிருந்து வந்த பிராமணிய இந்துமதமும், பௌத்தமும், சமணமும் தமிழின் மகா காவியங்கட்கும் நீதி நூல்கட்கும் தோத்திரப் பாடல்கட்கும் ஆதாரமாக இருந்தன. இஸ்லாமும் கிறிஸ்துவமும் தமிழ் இலக்கியத்துக்கு மிகவும் வளமூட்டியுள்ளன. எந்த மதத்தினதும் அயற்தன்மை அந்த மதஞ்சார்ந்த ஆக்கங்களை நிராகரிக்குமாறு நம்மைத் தூண்டவில்லை. அயற்தன்மை என்பது பரிச்சயந் தொடர்பான பிரச்சனை. தமிழ்ப்பண்பாடென்று ஏதேதோ பேசுகிறோம். கிழட்டு நடிகன் பதினெட்டு வயதுப் பெண்ணை இறுக அணைத்துக் காதற் பாட்டுப்பாடும் ஆபாசத்தை எல்லாம் நமது கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக்கி விட்டோமா?

அரை நிர்வாண நாட்டியங்களும் கும்கும் டிஷும் டிஷும் சண்டைகளும் பலாத்காரப் பாலுறவுக் காட்சிகளும் ஏன் தமிழ்ப் படங்களில் நிறையவே வருகின்றன? நமது கலாச்சாரத்துக்கு அயலான இந்த அபத்தங்களின் அந்நியத் தன்மையை அறியாமலா தமிழ் மக்கள் தேடிப் போய்ப் பார்க்கிறார்கள்? நம்மிடையே போதியளவு நல்ல ரசனை இல்லை. அதனாற்தான் கீச்சுக் கீச் சென்று பாடுகிற பாடகியையும் கட்டைக்குரலில் முக்குகிறவனையுங் கூட ரசிக்கிறோம். நல்ல நாடகம் பற்றிய உணர்வு நமக்கு வளரவில்லை என்ற உண்மையிலிருந்து நாம் விலகியோடி நமது

## தமிழில் நாடக ரசனை

-சி.சிவசேகரம்

கலை வடிவங்களைக் கட்டியெழுப்ப முடியாது.

தமிழ் நாடகங்கள் இன்னின்னவாறு தான் அமைய வேண்டும் என்று நாம் வரையறுத்துக் கொள்வோமாயின் நாடகத்துறையிற் தேக்கம் ஏற்படும். எந்தக் கலை வடிவமும் உயரிய சமுதாய விழுமியங்களைப் பேணுவது நல்லதே. ஆயினும், அவை சாராம்ஸத்திற் பேணப்படுவது முக்கியமானதே ஒழியச் சடங்காகக் கடைப் பிடிக்கப்படுவதல்ல. பாலியல், பாலுணர்வு போன்றவை பற்றிய நமது பம்மாத்தான பார்வைகளை நிராகரிக்க வேண்டிய அதே வேளை ஒரு சமுதாய நடைமுறைக்கு முரணான முறையிலும் பார்வையாளர்கட்கு அருவருப்பூட்டும் முறையிலும் விஷயங்களை முன் வைப்பது பற்றிக் கவனம் அவசியம். ஒரு பாலியல் நிந்தனைச் சொல்லோ பாலுறவு தொடர்பான உரையாடலோ தேவை கருதிக் கவனமாகக் கையாளப்படுவதற்கும் சிலருக்குக் கிளுகிளுப்பூட்டும் முறையில் இரட்டை அர்த்தந் தொனிக்கும் வசனங்களையும் தரக்குறைவான சேட்டைகளையும் மேடையேற்றுவதற்கும் வேறுபாடுண்டு. ஆணாதிக்கச் சிந்தனைகளும் சாதியமும் இனவாதமும் மதத் துவேஷமும் கலை என்ற போர்வையின் கீழ் உலா வருவது பற்றியும் நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். நல்ல நகைச்சுவை என்பது மிகவுங் கனதியான ஒரு விஷயம். மனிதரது உணர்வுகளைப் புண்படுத்தும் நோக்கம் நல்ல நகைச்சுவைக்குரியதல்ல. இவ்வகைகளில் நவீன தமிழ்நாடகம் மிகவும் முன்னேற வேண்டியுள்ளது.

தமிழ் சிறுகதை, நாவல், கட்டுரை போன்ற இலக்கிய வடிவங்களையும் நாடகத்தையும் அயலிலிருந்தே பெற்றது. கூத்து மரபிலிருந்து தமிழ்நாடகம்

விருத்திபெறவில்லை. அவைக் காற்றுங் கலைகளில் நம் இசையும் நடனமும் கூத்தும் நம் மரபு சார்ந்தன. இவை கையாண்ட விஷயங்களும் மரபுக்குள் வரையறுக் கப்பட்டே இருந்தன. அவ்வாறிருந்தும், இந்தியத் துணைகண்டத்தின் பிற கலாச்சாரங்களும் அவற்றிற் பாதிப்பேற்படுத்திய பிற கலாச்சாரங்களும் தமிழ்க் கலாச்சாரத்தைப் பாதித்தன. தமிழ்க் கலாச்சாரமென்பது காலத்தால் மாறாததுமல்ல, கலப்பற்றதுமல்ல. தமிழ் நாடகம் கூத்தை விடச் சினிமாவின் பாதிப்புக்கே அதிகம் ஆளாயிற்று. ஏனெனில் அயல் நாடகங்களை விட அயற் திரைப்படங்களைப் பார்க்கும் வாய்ப்பு அதிகமாக இருந்தது. தமிழ்த் திரைப்படம் பெற்ற அயற்பாதிப்பு நாடக மேடையையுந் தொட்டது. நவீன நாடகம் பற்றிய அறிவு நமக்கு மந்த வேகத்திலேயே வந்தது.

சரத்சந்திரா சிங்கள நாடகத்துறைக்கு வழங்கிய பெருங்கொடை, மரபுக்கு நவீனத் துவத்துடன் அவர் ஏற்படுத்திய இணக்கம். அவரது பங்களிப்பைத் தொடர்ந்து இலங்கையிற் சிங்கள நாடகத்துறை பல பரீட்சார்த்த நாடகங்களை மேடையேற்றியது. அவை பெரும் வெற்றி பெற்றன. தமிழில் இவ்வாறு புதியன புகுத்தும் ஈடுபாடுடையோர் சிலரே இருந்தனர். நண்பர் தாஸீஸியஸின் பங்களிப்புக்கள் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியவை. அவரதும் பாலேந்திராவினதும் வருகை தமிழருக்கு நாடக உலகின் புதிய பரிமாணங்களைக் காட்டின.

இருவரது நாடகங்களிலும் அயலிருந்து உள்வாங்கப்பட்ட பண்புகள் நிறையவே இருந்தன. எனினும் அயல் என்ற முத்திரை அயல் மூலப்பிரதிகளைக் கொண்ட நாடகங்கட்கே குத்தப்பட்டது. இது மிகவும் அகநிலை சார்ந்த ஒரு செயல். தமிழர் ஒருவர் நெல்சன் மண்டேலாவின் வாழ்வின் கதையை வைத்து ஒரு நாடகம் எழுதினால் அது தமிழுக்குரிய விஷயமாகுமா? அல்லாமல் அவ்வாறான ஒரு நாடகம் ஏற்கனவே அயல் மொழியொன்றில் இருந்து, அது தமிழாக்கப்பட்டால் அது அயலான விஷயமாகுமா? மாறாக ஒரு தமிழர் மூலத்தைத் திருடித் தானே எழுதியதாகப் பாசாங்கு செய்தால் அது தமிழுக்குரியதாகி விடுமா?

தமிழ்க் கிராமிய வாழ்க்கைக்கு தமிழ்ப் பட்டண வாழ்க்கையும் சீமைப்பட்டண வாழ்க்கையும் அயலான விஷயங்கள் தான். ஒரு வாழ்க்கை முறையை நாம் புரிந்து கொள்ளவும் நயக்கவும் அறிய இயலாவிட்டால் அது அயலான ஒன்றாகவே இருக்கும். கலைகளும் நம் வாழ்க்கை முறைக்கு நெருங்கியவை. அயலிலிருந்து தனிமைப்படுத்தப்படக்கூடிய வாழ்க்கையும் இல்லை, வாழ்க்கையைப் பிரதிபலிக்கிற கலை வடிவங்களும் இல்லை. தமிழுக்குப் புதியனவும் நல்லனவும் வேண்டுமாயின், அவற்றைத் 'திக்கெட்டுஞ் சென்று தேர்ந்த கலை யாவுங் கொண்டு வரும்' முனைப்புடன் அறிமுகஞ் செய்ய வேண்டும்.

ஒரு நாடகம் தமிழாக்கமோ தழுவலோ என்பதை விட, அது நாம் நமது சமுதாயத்தை, நமது சுற்றாடலை, நம்மைச் சூழவுள்ள

(19ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பழைய நினைவுகள்

சோ.சிவபாதசுந்தரம்

## வண்ணார்பண்ணையில்..

சென்றுபோன நாட்களை மீண்டும் நினைத்துப் பார்க்கையில் ஒரு புத்துணர்ச்சி ஏற்படுகிறது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நான் படித்துக் கொண்டிருந்த நாட்களில் (1925-1930) வண்ணார் பண்ணையில் தங்கியிருந்தேன். யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை அந்த நாட்களில் ஒரு குட்டி தஞ்சாவூராக எனக்குக் காட்சியளித்தது. அழகான சிவன்கோவில், அடுத்து அக்கிரகாரம், சைவ உணவு விடுதிகள், புத்தகக் கடைகள், வெற்றிலை பாக்குக்கடைகள், அவற்றின் முகப்பில் தொங்கும் சென்னைப் பத்திரிகைகள், பூக்கடைகள் என்ற சுற்றுச் சூழலை அனுபவிக்கலாம். சிவன் கோவிலில் ஒரு சம்பிரதாயம் அப்போதிருந்தது, அதாவது, திருவிழாவில் உபயக்காரர் சிறப்பாக "ஏறுபடி மேளம்" ஏற்பாடு செய்தால், கோவில் நிரந்தர தர்மகர்த்தாவின் அனுமதியைப் பெற வேண்டும். சிலரை அவர் உள்வீதியில் வாசிக்க அனுமதிக்கமாட்டார்.

சிவன்கோவில் வீதியில் நான் தங்கியிருந்த நாட்களில் கேட்டனுபவித்த நாதஸ்வர இசை பின்னால் சில ஆண்டுகள் புல்லாங்குழலை நாட வழிவகுத்தது. அத்துடன் இசைக்கலைஞர்கள் பலருடன் உறவாடவும், ஈழகேசரியில் சங்கீத விமர்சனம் எழுதவும் வாய்ப்பாயிருந்தது. யாழ்ப்பாண வட்டாரங்களில் கோவில் திருவிழாவின் போது சின்னமேளம் என்ற சதிர்க்கச்சேரி ஒரு சிறப்பான அம்சமாக இருந்தது. அதற்கென்று கும்பகோணம், மாயவரம், சிதம்பரம் முதலிய பகுதிகளிலிருந்து நாட்டிய மாதர் வரவழைக்கப்பட்டு, வண்ணார்பண்ணை வட்டாரத்தில்தான் தங்கியிருப்பார்கள். இதில் இரண்டொருவர் நிரந்தரமாக வசித்து, நாட்டியத்தையும் வாழ்க்கை முறைகளையும் கைவிட்டு, மூன்றாவது தலைமுறையில் மதிப்போடு வாழ்வதையும் காணலாம். இசை நாட்டியத்தைத் தவிர, நாடக மேடைக்கும் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை சிறப்புப்பெற்றிருந்த நாட்கள் அவை. இங்கிருந்த தகரக் கொட்டகையில்தான் கிட்டப்பாவும் சுந்தராம்பாளும், கோவிந்தசாமியும், சுப்பையா பாகவதரும், ராஜலக்ஷ்மியும், மற்றும் ஹார்மோனிய சக்கரவர்த்திகளும் தோன்றிப் புகழ் பெற்றார்கள். முதலில் மதுரை தங்கம் தியேட்டர், அடுத்து யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை, இந்த இரு மேடைகளிலும் வரவேற்பைப் பெற்றால்தான் அந்த நாட்களில் இந்திய நாடகக் கலைஞர்கள் தமிழ்நாட்டில் அங்கீகரிக்கப் படுவார்கள் என்ற நியதி அப்போது இருந்தது. யாழ்ப்பாண ரசிகர்களின் மதிப்பீடு அப்படியிருந்தது.

### கலாநிலையம்

வண்ணார்பண்ணையில் அப்போது கலாநிலையம் என்ற பெயரில் ஓர் அமைப்பு இருந்தது. எங்கள் மத்திய கல்லூரியில் வணிக இயல் கற்பித்த ஆசிரியர் நவரத்தினம் என்பவர், சாந்தி நிகேதனத்தில் இசை பயின்ற தமது மனைவி மகேஸ்வரிதேவியுடன் அமைத்த நிலையம் இது. நண்பர் நவரத்தினம் இலக்கியத்திலும் கலைகளிலும் மிகுந்த ஈடுபாடுடையவர். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கலாநிலையத்தில் ஏதாவதொரு இலக்கியச் சொற்பொழிவு அல்லது கலைநிகழ்ச்சி நடைபெறும். இதன் ஆதரவில் வெளியிடப்பட்ட "ஞாயிறு" என்ற பெயர்கொண்ட காலாண்டு சஞ்சிகை தமிழில் புதுமாதிரியானது. அந்த நாட்களில் ஆங்கிலத்தில் வெளிவந்த "திரிவேணி" என்ற சஞ்சிகையைப் போன்ற அமைப்பில் முன்னொரு போதும் தமிழ்நாடு கண்டிராத வகையில் வெளிவந்தது அற்புதமான படைப்பென்று இலக்கிய உலகு பாராட்டியது. ஆனால் இரண்டோ மூன்று இதழ்களுடன் தொடர முடியவில்லை. அதற்குப் பிறகு தமிழில் அம்மாதிரியான அந்தஸ்தில் இதுவரை ஒரு சஞ்சிகை பிறக்கவில்லை. நவரத்தினம் பின்னர் தமது உழைப்பை திராவிட சிற்ப வடிவங்கள் என்ற சிறந்த நூலை எழுதி வெளியிடுவதில் உபயோகித்துப் பெருமைதேடினார். தமிழில் இது ஒரு புதுமையான முதல் நூல். சிற்ப வடிவங்களைப்பற்றி ஆங்கிலத்தில் பல நூல்கள் இருந்தும் தமிழில் இல்லாத குறையை நவ ரத்தினம் உணர்ந்து தமது கடின உழைப்பை பயன்படுத்தி இந்த நூலைப் படைத்தார். இந்த நூலைப் பற்றி, நண்பர் புதுமைப்பித்தன் என்ற சொ.விருத்தாசலம், சென்னை தினமணியில் இருந்த காலத்தில் (1940) எழுதிய விமர்சனத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்: "ஸ்ரீ நவரத்தினம் எழுதியது முதல் புத்தகம் என்பதுடன் முதல்தரமான புத்தக மும்கூட. கற்பனையுடன் வாசிப்பவர்களுக்கு அது ஒரு புதையல். யாழ்ப்பாணத்தவர்கள் முந்திக்கொண்டு விட்டீர்கள். ஒரு விபுலா னந்தரும் ஒரு நவரத்தினமும் பழந்தமிழ் நுண்கலைப்போக்கில் நம் கண்ணுக்கு இருண்ட பகுதிகள் பல வற்றிற்கு வெளிச்சம் காட்டி விட்டார்கள்"

### யோகர் சுவாமிகள்

லக்குமி வாசம் என்ற பெயரில் ஒரு புத்தகக்கடை வண்ணார் பண்ணை பிரதான வீதியில் இருந்தது. ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் அந்தக் கடை ஒரு பஜனைமடமாக மாறிவிடும். தெருவாசல் பக்கம் பக்குவமாகப் பெருக்கப்பட்டு, தண்ணீர் தெளித்து, உள்ளே சில படங்கள் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு, தெய்வமணம் கமழும். காரணம், யாழ்ப்பாணம் பெற்றிருந்த தவமுனிவரான யோகர் சுவாமிகள் வெள்ளிக்கிழமை தோறும் அங்கு எழுந்தருளுவார். தெய்வ சான்னித்தியம் போன்ற அந்தச் சூழ்நிலையில் பஜனையும் புராணபடனமும் நடக்கும். இந்த யோகர் சுவாமிகள் ஓர் அபூர்வ மனிதர். வெள்ளை வேஷ்டியும் வெள்ளை அங்கவஸ்திரமும் தரித்து, வெள்ளை முடியுடனும் வெள்ளைத் தாடியுடனும் கம்பீரமாகக் காட்சியளிப்பார். சுருட்டுப் புகைப்பார். பல மைல் தூரம் நடந்தே போவார். யாழ்ப்பாண நகரத்தையடுத்துள்ள கொழும்புத்துறை என்ற இடத்தில் ஒரு குடிசையில் தனியாக வசித்தவர். அவருடைய பூர்வீகம் ஒருவருக்கும் தெரியாது. ஆனால், மகாதவயோகி என்பது பலரும் அறிந்த உண்மை. பெரிய பெரிய மனிதர்கள், சட்டசபை பிரமுகர்கள், நீதிபதிகள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் எல்லோரும் இவரையண்டித் தம் குறைகளை அகற்றிக்கொண்டனர். இலங்கையில் பல பாகங்களிலும் அடியார்கள் வரவேற்பார்கள். "நற்சிந்தனை" என்று இந்த யோகி திருவாய் மலர்ந்தருளிய சாமானிய நன்னெறிவாக்கியங்கள் நூலாக வெளிவந்திருக்கின்றன.

லக்குமிவாசத்துக்கு எதிரிலுள்ள கட்டிடத்தில்தான் நான் தங்கியிருந்தேன். அது ஒரு பெரிய வீடு. பல அறைகளும் பின்புறம் பெரிய தோட்டமும் கிணறும் இருந்தது. மளிகைக்கடை நண்பர் ஒருவருக்குச் சொந்தமான இதில் சில சமயம் ஒரு சந்நியாசி வந்து தங்குவார். கூடவே உதவிக்கு கோவிந்தன் என்ற திருநெல்வேலி தவசிப் பிள்ளையும் இருப்பார். அம்பலவாண நாவலர் என்பது அவர் பெயர். யாழ்ப்பாணத்தையடுத்த சித்தங்கேணி கிராமத்தைச் சேர்ந்த இவர் இளமையிலேயே இந்தியாவில் வசித்து தமிழ், வடமொழி இலக்கண இலக்கியங்கள் கற்று, வேத சாஸ்திரங்களிலும் சைவசித்தாந்தத்திலும் வல்லுநராக விளக்கினார். சிலர் இவருடைய கல்விச்செருக்கை அங்கீகரிப்பதில்லை. அகங்காரம் நிறைந்தவர். சமயச் சொற்பொழிவுகளுக்கு அழைத்தால், மடாதிபதிகள் தோரணையில், பூரணகும்பத்தையும் மேளதாளத்தையும் எதிர் பார்ப்பார். இப்படியான தபசியிடம் நானும் சில நாட்கள் பழகவேண்டிய வாய்ப்புக் கிடைத்தது. ஒரு நாள் என்னுடைய படிப்பைப்பற்றி விசாரித்தவர், திடீரென "மெட்டீரியலிஸம்" என்ற ஆங்கிலச் சொல்லுக்கு தமிழ் என்ன என்று கேட்டுவிட்டார், அவ்வளவு தூரம் எனது ஆங்கிலமோ சித்தாந்தமோ வளர்ச்சியடைந்திருக்கவில்லை. சிரித்துக்கொண்டே அந்தப் பெரியவர், "லோகாயதம்" என்று சொல்லித் தந்தது மாத்திரமல்ல, மற்றும் சில தத்துவ வார்த்தைகளையும் புகட்டினார். யாழ்ப்பாணத்தில் அப்போது புதிதாக வெளிவந்திருந்தது ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை யாத்த "ஆங்கில- ஆங்கில- தமிழ் அகராதி" ஒன்று. என் கையில் ஒரு பத்து ரூபா கொடுத்து உடனே போய் நாவலர் கோட்டம் என்ற கடையில் அந்த அகராதியை வாங்கிவரச்சொல்லி அன்பளித்ததை மறக்க முடியாது.

வெள்ளிக்கிழமை தோறும் யோகர்சுவாமி தரிசனத்துக்காக லக்குமி வாசம் புத்தகக் கடையின் முன் பக்தர்கள் கூடுவதையும், நான் அங்கு செல்வதையும் அவதானித்த அம்பலவாண நாவலருக்கு யோகரைத் தனிமையில் கண்டு பேசவேண்டுமென்ற ஆவல் ஏற்பட்டது. ஒரு நாள் அவர் என்னிடம் ஒரு கடிதம் தந்து அதை எப்படியாவது யோகர் சுவாமிகளிடம் ஒப்படைக்குமாறு தெரிவித்தார். வண்ணார்பண்ணையில் பிரசித்தி பெற்ற ஆயுர்வேத வைத்தியர் கஸ்தூரி முத்துக்குமாரு என்ற பெரியார் வீட்டில் யோகர் சுவாமிகள் தங்கியிருந்தார். மிகுந்த தயக்கத்துடனும் பயத்துடனும் நான் அந்த வீட்டுக்குச் சென்று கடிதத்தை அங்கிருந்த ஒருவரிடம், அவர் யார் என்று தெரியாமல், கொடுத்து விட்டு வந்துவிட்டேன். திரும்பி வெளியே வரும்போதுதான் சுவாமிகளே நேரில் வந்து, "வரச் சொல்லடா அவனை" என்று உத்தர விட்டார். ஒரு பெரிய தூதுச் செயலைச் செய்துவிட்ட பெருமித மடைந்தேன். பின்பு அம்பலவாணர் யோகரைக் கண்டு உரையாடிய விவரம் என்னிடம் தெரிவிக்கவில்லை. பல ஆண்டுகளுக்குப் பிறகு நான் லண்டன் பிரிட்டிஷ் நூலகத்தில் சில பழைய நூல்களைத் தேடிக்கொண்டிருந்தபோது, அம்பலவாண நாவலரின் சில படைப்புக்களைப் பார்த்தேன். நீல கண்டபாஷ்யத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு அவற்றில் ஒன்று. பதினெட்டாம் நூற்றாண்டில் திரு நெல்வேலியைச் சேர்ந்த கங்கை முத்துப்பிள்ளை என்ற நட்டுவனார் உருவாக்கிய பஞ்சமூர்த்தி கவுத்துவங்களை இவர் விளக்கத் துடன் பதித்திருப்பதையும் பார்த்தேன்.

## ஜெயலலிதா அன்பளிப்பு

சென்னை

சென்னை அடையாறு பகுதியில் உள்ள குச்சுபுடி ஆர்ட் அகாதெமிக்கு முதல்வர் ஜெயலலிதா சலுகை விலையில் நிலம் அளித்தார். முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆரின் உருவப்படத்தையும் அங்கு செவ்வாயன்று திறந்து வைத்தார்.

இந்த அகாதெமியை நடத்திவரும் வேம்பட்டி சின்னசத்தியம் முதல்வரின் குரு என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விழாவில் பேசுகையில், சின்னசத்தியம் குச்சுபுடி நடனக்கலைக்காகத் தனது வாழ்க்கையே அர்ப்பணித்தவர் என முதல்வர் பாராட்டு தெரிவித்தார். இது போன்ற கலைநிலையங்களில் பயிற்சி பெறுபவர்கள் தொடர்ந்து நடனக்கலைக்குச் சேவை புரிய வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

இந்த அகாதெமிக்கு 10 ஆண்டுகளுக்கு முன்பு எம்.ஜி.ஆர். 5 ஏக்கர் நிலத்தைச் சலுகை விலையில் வழங்கியதை நினைவு கூர்ந்த முதல்வர், இங்கு பயிலும் மாணவிகள் தங்குவதற்கான விடுதி கட்ட 1.25கிரவுண்ட் நிலத்தை, எம்.ஜி.ஆர்.வழங்கியதைப் போன்று சலுகை விலையில் தமது குருதட்சணையாக வழங்குவதாக அறிவித்தார்.


UNIVERSAL AGENCY

இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உணவு, மற்றும் பொருள்களுக்கும்

நாடுங்கள்

Universal Agency
Promenadenstr. 24-27
(Zolltorpassage)
4040 Neuss1
Teiefon: 02131/23198
Fax: 02131/275640


## திரைப்படங்கள் தடை

(சென்னை)

தென்னிந்திய படங்களுக்கு யாழ்ப்பாணத்தில் தடை யாழ்ப்பாணத்தில் தென்னிந்திய திரைப் படங்களை திரையிடுவதற்கு முற்றிலுமாக தடை விதிக்கப் பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் (எல்.டி.டி.ஈ) இந்தத் தடையை விதித்துள்ளதாக இலங்கை வானொலி செவ்வாயன்று தெரிவித்தது.

யாழ்ப்பாணத்தில் வீடுகளில் மக்கள் தென்னிந்திய படங்களை வீடியோவில் பார்ப்பதற்கும் எல்.டி.டி.ஈ மிரட்டியுள்ளது.

தமிழ்நாட்டில் எல்.டி.டி.ஈ.க்கு எதிர்ப்பு வலுத்து வருவதை அடுத்து அதற்குப் பழி வாங்கும் செயலாக எல்.டி.டி.ஈ. இந்தத் தடையை விதித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

## புலிகளின்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புகுமாறு பாதுகாப்புப்படைகள் கேட்டுள்ளன. பரந்தன்-முல்லைத்தீவு பிரதான வீதியின் இருமருங்கிலும் 1000 மீட்டர் தூரத்தை தவிர்க்கும்படியும் அவை கேட்டுள்ளன. அத்துடன், யாழ்ப்பாணத்தையடுத்த காரைநகர், சாவகச்சேரி, ஆனையிறவு, நாவாந்துறை, சங்குப்பிட்டி மற்றும் கல்முனை கடலேரிகளில் பிரயாணிகள் படகு நடமாட்டமும் உடனடியாக தடைசெய்யப்பட்டதாகவும் மீறுவோர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இவை, வடபகுதியில் தமது கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கையாக ஒரு பெரிய அளவிலான இராணுவ தாக்குதலை மேற்கொள்வதற்கு பாதுகாப்புப்படைகள் ஆயத்தமாவதை வெளிப்படுத்துகின்றன. அரசாங்கத்தின் இந்த அறிவிப்பால் பீதியடைந்த மக்கள் தெற்கே வவுனியாவை நோக்கி விரைவதாக கொழும்புக்கு வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்செய்தியை எழுதும்வரை இப்பகுதிகளில் எவ்வித முக்கிய தாக்குதலும் நிகழவில்லை. எனினும் அது எச்சமயத்திலும் நிகழலாமெனவே எதிர்பார்க்கப்படுகிறது.




www.tamilarangam.net

www.tamilarangam.net

### கவுதமி திருமணம்

பெற்றோர் அன்பு செலுத்தா ததனால் மனம் வருந் திய கவுதமி தன்னிடம் பியூனாக வேலை பார்த்த விஜயகுமாரை திருமணம் செய்ய முடிவு செய்து அவரிடம் கேட்க அவரும் ஒப்புக்கொண்டார்.

மேற் குறிப்பிட்ட காட்சி ராஜ புஷ்பா பிக்சர்ஸ் 'பட்டத்து ராணி' படத்துக்காகப் படமாக்கப்பட்டது. அவர்களுடன் ஜனகராஜ், கவுண்டமணி, செந்தில், மனோரமா ஆகியோரும் நடிக்கின்றனர்.

இப்படத்துக்கு இசைஅமைப்பவர் தேவா. திரைக்கதை எழுதி இயக்கியிருப்பவர் மணிவாசகம்.

### விஜயகாந்த் நடிக்கும் ஏழைஜாதி படத்திற்கு லண்டனிலிருந்து நடன உடைகள்.

புரட்சிக்கலைஞர் விஜயகாந்த் நடிக்கும் 'ஏழைஜாதி' படத்தில் இடம்பெறும் பாடற்காட்சி ஒன்றிற்காக நடனமாடும் விஜயகாந்துக்கும் 300 துணை நடிகைகளுக்கும் விசேடமாக லண்டனில் தயாரிக்கப்பட்ட உடைகள் பாவிக்கப்பட்டன. மேற்கண்ட பாடல் காட்சி சமீபத்தில் பெங்களூரில் படமாக்கப்பட்டது. இப்படத்தில் விஜய்யுடன் ஜெயப்பிரதா கதாநாயகியாக நடிக்கிறார். இசை இளையராஜா. திரைக்கதை வசனம், இயக்கம் ஆகிய பொறுப்புகளை லியாகத் அலிகான் ஏற்றிருக்கிறார்.



### பிரபு குஷ்பூ மீண்டும் நாளைய செய்தியில்.

வெள்ளிவிழாப்படமான சின்னத்தம்பியில் இணைந்த பிரபு குஷ்பூ ஜோடி மீண்டும் "நாளைய செய்தி"யில் இணை கின்றனர். நிருபர்கள் அனுபவிக்கும் இன்னல்களையும், எதிர்நோக்கும் பிரச்சனைகளையும் (அரசியல் தலைவர்களால்) மையமாக வைத்து இக்கதை அமைக்கப்பட்டிருக்கிறது. செந்தில் மாறுபட்ட ஐந்து வேடங்களில் நடிக்கிறார். இப்படத்துக்காக ஆதித்யனின் இசையில் உருவான பாடலொன்றின் படப்பிடிப்பு ஊட்டியில் இடம் பெற்றது. இளம் இதயங்களுக்கு இதமளிக்க குஷ்பூ கவர்ச்சி காட்டி நடித்திருக்கிறார். நாளைய செய்தி பிரவுக்கு ஒரு பேர் சொல்லும் படமாக அமையும்.

## லாரியில் சிக்கினால் அதிர்ஷ்டம்

லாரியில் சிக்கிக் கொண்டு உயிர் பிழைத்தாலே பெரிய அதிர்ஷ்டம். அப்படித் தப்பிக் பிழைத்தவர் தன் பெயரை மாற்றி வைத்துக் கொண்டு ஓஹோவென நடிகராக புகழ் பெற்றார். இந்த பெருமைக்குரியவர் பிறந்த போது பெற்றோர் அவருக்கு வைத்த பெயர் முனீஸ்வரன். அந்த முனீஸ்வரன் வளர்ந்து ஆளானபோது ரோட்டைக் கடந்த நேரத்தில் லாரி ஒன்று அவர் மீது மோதி விட்டது. போட்டு புரட்டி எடுத்தும் முனீஸ்வரனுக்கு சின்ன சிராய்ப்புக்கூட கிடையாது. காயமின்றி அதிசயமாக உயிர்தப்பினார். வியந்துபோன பெற்றோர் முனீஸ்வரன் என்ற பெயரை மாற்றி விட்டு, மோதிய லாரியின் பெயரையே சூட்டி செல்லாமாக கூப்பிடத் துவங்கினர். கடைசியில் அதுவே அவர் பெயராகி விட்டது. அதே பெயரில் அவர் நடிகராகி இப்போது தமிழில் பிரபல நடிகராக விளங்குகிறார். அவர் வேறு யாருமில்லை. நம்மையெல்லாம் வயிறு குலுங்க சிரிக்க வைக்கும் செந்தில்தான். அவரது ஒரிஜினல் பெயர்தான் முனீஸ்வரன். அவர்மீது மோதி அவருக்கு அதிர்ஷ்டத்தை ஏற்படுத்தித் தந்த லாரியின் பெயர் செந்தில்.




படப்பிடிப்பு: ராஜா

தவழும் தமிழோசை
தலை நிமிரும் வருங்காலம் !



### தமிழ் இசையமைப்பாளர்களுக்கு கொண்டாட்டம்

உலக நாடுகளுக்கு தமிழ்ப் பாடல்களில் ஒடியோ-கசற் விநியோக உரிமை பெறுவதில் கடும்போட்டி நிலவுகிறது. இப்போட்டியின் விளைவாக விலையை இமாலய உயரத்திற்கு ஏற்றியிருக்கிறார்கள். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு படத்தின் கேசட் உரிமை பெறுவதற்கு, அது எந்தப் பெரிய இசையமைப்பாளரின் படமாயிருந்தாலும் இந்திய ரூபா ஐயாயிரத்துக்கு (5000) மேல் தரப்பட்டதில்லை. இன்று 16 இலட்ச ரூபாய்கள் கொடுத்து வாங்குகிறார்கள். இதன் பலனாக "சில இசையமைப்பாளர்களுக்கு ரூ.10 இலட்சத்துக்கு மேல் கொடுக்க வேண்டியுள்ளது" என பிரபல படதயாரிப்பாளர் ஒருவர் வேதனைப்பட்டார்.



ஏனிந்தப் புன்னகையோ?
பானுப்பிரியா

# சி னி மா

## ரஜனி அரசியலில் குதிக்கிறார்

ஜெயலலிதாவின் அராஜக ஆட்சியை எதிர்த்து ரஜனி அரசியலில் இறங்குவார் என விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. முன்பு எப்படி எம்.ஜி.ஆருக்காக வசனங்கள், பாடல்கள் எழுதப் பட்டனவோ அதேபோல் இன்று ரஜனிக்கும் எழுதப்பட்டு வருகிறது. உதாரணத்திற்கு சமீபத்தில் வெளிவந்த அண்ணாமலை படத்தில் ஒன்று "நான் பாலிடிக்சுக்கு வரமாட்டேன். நீங்க பாலிடிக்சை வைத்து பணம் பண்றீங்க. நான் உண்டு என் வேலை உண்டுண்ணு இருக்கிறேன். தூங்கிக்கிட்டு இருக்கிற சிங்கத்தை உசுப்பாதீங்க. என்னைச் சீண்டிப் பார்த்திங்கன்னா நீங்க தாங்க மாட்டீங்க".

சமீபத்தில் ஜெயலலிதா, சுவரொட்டிகளுக்கு தடை விதித்தது ரஜனிக்காகவே என்றும் பேசிக் கொள்ளப்படுகிறது. ஜெயலலிதாவை பதவி விட்டு இறக்கக்கூடிய ஒரே நடிகர் ரஜனிதான். ஜெயலலிதாவுக்கே பயம் ஏற்பட்டிருப்பதன் விளைவு தான் சுவரொட்டித்தடை என்றும் சுவரொட்டியால் முன் னேறிய நடிகை ஜெயலலிதா இன்று அதனைத் தடை செய்கிறார் என்றும் பிரபல நடிகர் ஒருவர் இரகசியமாக வருத்தப்பட்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கலையை கலைக்காகவே பயிலுங்கள்



## கலாக்ஷேத்திரத்தில் கலைமணம் பரப்பும் பொன்ரோஜா கிருஷ்ணவேணி லக்ஷ்மணன்

உன்னதமான-பத்தி செறிந்த – இந்திய கலைப் பாரம்பரியத்தின் காப்பகமாக – கலைமலரும் பூங்காவாக உலகளாவிய புகழோடு திகழ்வது திருவான்மியூரிலுள்ள கலாக்ஷேத்திரா. ருக்மிணி அருண்டேல் நிறுவிய அந்த நிறுவனத்திலே- கலைப் பூங்காவிலே பன்னெடுங் காலமாக மணம் பரப்பும் பொன்ரோஜா கிருஷ்ணவேணி லக்ஷ்மணன்.

சிறுவயதிலிருந்தே கலாக்ஷேத்திராவில் ருக்மிணி அருண்டேலின் செல்லப் பிள்ளையாகவே வளர்ந்த கிருஷ்ணவேணி, கலாக்ஷேத்திராவின் முயற்சிகள்- தயாரிப்புகளில் எப்போதுமே முக்கியத்துவத்தைப் பெறுபவர்.

மயிலாம்பூர் கௌரி அம்மாளிடம் அபிநயம் கற்ற இவர், இன்று நிருத்தம்- அபிநயம் இரண்டிலுமே சிறந்து விளங்குகின்ற மிகச் சிலரான நர்த்தகிகளில் ஒருவர். இப்போது கலாக்ஷேத்திராவில் சிரேஷ்ட போதனாசிரியையாக விளங்குகிறார். அவருடன் நிகழ்த்திய ஒருரையாடல் இது.

**வணக்கம்! கலாக்ஷேத்ரா ஒரு பெரிய நிறுவனம். பரதநாட்டியத்தில், அதன் பிரதான பாணிகளுடன் 'கலாக்ஷேத்திரா' பாணி என்றும் ஒன்றை அடையாளம் காணலாம். ஆனாலும் அந்த கலாக்ஷேத்திரா பாணியிலே 'சோலோ' கலைஞர்கள் மிக குறைவாகவே காணப்படுகிறார்கள். நீங்களும் கூட பிரபலமான நடனக் கலைஞர். ஆனாலும் உங்களுடைய 'சோலோ' நிகழ்சிகளுங்கூட குறைவாகத்தானே இருக்கின்றன.**

*'கலாக்ஷேத்ரா' ஒரு நிறுவனம். அப்படி ஒரு நிறுவனத்திலே பணிபுரியும்போது 'சோலோ' கலைஞர்களாகவும் தம்மை நிலை நாட்டுவது மிகவும் கடினமானது. ஏனென்றால், அந்த நிறுவனத்தின் ஒழுங்கு விதிகளுக்கு அவர்கள் அமைந்தாக வேண்டும்.*

*அதனாலேதான் பிரபலமான 'சோலோ' கலைஞர்கள் எல்லோருமே எந்தநிறுவனத்தையும் சாராதவர்களாக ஓரளவுக்கு Freelance மாதிரியே இருக்கிறார்கள். என் போன்றவர்களுக்கு இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டிய நிலை இருந்தது. நான் 'கலாக்ஷேத்திரா'வில் இருப்பதையே கௌரவமாக கருதினேன். அப்படியிருந்தும் கூட நான் இவ்வளவு தூரம் என்னை நிலையாட்டியிருப்பது ஒரு சாதனையேதான்.*

**இதிலே உங்களுக்கு திருப்தி இருக்கிறதா?**

*திருப்தி என்பது அவரவர் மனதைப் பொறுத்ததுதானே! ஒரு நிறுவனத்தில் இருந்தால் நன்மையும் இருக்கும்; பாதிப்பும் இருக்கும். இரண்டையும் நாம் சமமாகப் பார்க்க வேண்டும். எனக்கு அங்கிருந்து வெளியேற வேண்டும்*



*போல தோன்றவில்லை. ஆரம்பத்தில் இதுஎன்னுடைய தொழிலாக அமையும் என்றும் நான் கருதவில்லை. ஆனால் அதுவே உயிர் மூச்சாகி விட்டது.*

**கலாக்ஷேத்ராவில் சேருவதற்கு முன்னதாக வேறு எங்கு நடனம் கற்றீர்கள்?**

*5 வயதிலிருந்து அங்கேயேதானே இருக்கிறேன். வேறு இடமே தெரியாது. வேறு பாணிகளை கற்றதும் கிடையாது.*

**கலாக்ஷேத்திரா பாணி சற்று விறைப்பாக இருக்கிறதே...**

*கலாக்ஷேத்ரா பாணி பந்தநல்லூர் பாணியேதான். ருக்மிணி அருணடேல் கற்ற மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை பந்தநல்லூர்க்காரர். அவருடைய அந்தப்பாணியை, அப்படியே காப்பாற்றி, பின்பற்றுவதால் அது*

**-மாலி**

*இப்போ 'கலாக்ஷேத்ரா' பாணி என்று ஆகிவிட்டது.*

*-ஒருமுறை தஞ்சாவூர் உபேந்திரன் என்னுடைய நடனத்தைப் பார்த்துவிட்டு 'இப்படி சுத்தமான நாட்டியத்தைப் பார்த்து மிகவும் அதிக நாள்களாகிவிட்டன. எங்களுடைய பாட்டி காலத்திலே பார்த்ததற்கப்புறம் யாரிடமும் நான் இப்படி பார்த்ததில்லை' என்றார்.*

*-நான் சொன்னேன், 'அதே நாட்டியந்தான் இப்போதும்;ஆனால் சிலர் சுத்தத்தை மறந்து விடுகிறார்கள்' என்று.*

*ஒவ்வொருவரும் தம் உடம்புக்கு எப்படி வருகிறதோ அப்படியே தரத்தை குறைத்து விடுகிறார்கள். கலாக்ஷேத்திராவில் அந்த தூய்மைக்கு முக்கியத்துவத்தைக் கொடுத்து அப்படியே கற்பிப்பதால் இப்போ அதற்கு கலாக்ஷேத்ரா பாணி என்றாகிவிட்டது; அது பந்தநல்லூர் பாணியேதான்.*

**பந்தநல்லூர் பாணிதான் கலாக்ஷேத்திரா பாணி என்றால் ஏன் கலாக்ஷேத்திரத்தினருக்கு 'சோலோ' நிகழ்ச்சிகளிலே சந்தர்ப்பம் அதிகம் கிடைப்பதில்லை?**

*இப்போதெல்லாம் 'சோலோ' கலைஞர் ஆவதற்கு சந்தர்ப்பங்கள் குறைந்தே வருகின்றன. ஒன்றில் நிறைந்த 'பின்னணி' இருக்கவேண்டும். அல்லது பணம் இருக்க வேண்டும். நான் என்னிடம் பயில்பவர்கள் எவரும் பணம் கொடுத்து ஆடுவதற்கு அநுமதிப்பதில்லை.*

*முன்னரெல்லாம் அமைப்பாளர்கள் வந்து கேட்பார்கள். என்னுடைய 40 ஆண்டுகள் ஆடல் அநுபவத்தில் ஒரு நாள் கூட நான் பணம் கொடுத்து ஆடியதில்லை. இதை ஒரு பெருமையாகக்கூட சொல்லலாம். ஆனால் இப்போது அந்த நிலை இல்லை. கலாக்ஷேத்திரத்தில் நடனத்தை ஆடுவதற்காக மாத்திரமன்றி, அதனைக் கற்பிக்குந்திறன் பற்றியும் நாம் கற்பிக்கிறோம். அதனால் ஏராளமான ஆசிரியர்கள் கலாக்ஷேத்திராக்காரர்களாகவே இருக்கிறார்கள்.*

**ஆனாலும் கலாக்ஷேத்திரத்திலிருந்து உருவான கலைஞர்களின் எண்ணிக்கை குறைவானதாகவே இருக்கிறதே?**

*நிறைய இருக்கிறார்களே. ஜாமினியிலிருந்து ஆரம்பித்து சந்திரசேகர், தனஞ்சயன்-சாந்தா, நான்,...அதாவது தொழில் கலைஞர்களாக இருப்பவர்கள். அப்படிப் பார்க்கையில் மற்றைய நிறுவனங்களிலிருந்து எத்தனை பேர் வந்திருக்கிறார்கள்?*

**வழுவூர் பாணியிலே கூடுதலான நளினம் இருக் கிறதா?**

*எதனை நளினம் என்று சொல்கிறீர்களோ தெரியவில்லை.அடவு என்பது சுத்தமாக இருக்க வேண்டும். அல்லாவிட்டால் அது எந்த பாணியில் செய்தாலும் தப்பு. வழுவூர் பாணியில்கூட சுத்தமில்லாத அடவே கிடையாது.செய்கிறவிதம் வித்தியாசமாக இருக்கும். அதனால் 'வழவழ' என்று செய்தால் அது வழுவூர்பாணி என்று சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். ஆனால் வழுவூர் ராமையா பிள்ளை அடவு பிடித்துக் காண்பித்தால் அது மிகுந்த சுத்தமாகவே இருக்கும். சில அடவுகள் வித்தியாசமானவையாக இருந்தாலும் அழகானவை.*

*எப்படியெனினும் எது உயர்ந்தது, எது குறைந்தது என்று சொல்ல முடியாது. எல்லாம் சமமானவையே.*



**வழுவூர் பாணி கலைஞர்கள் கூடுதலான பிரபல்யத்தைப் பெற்றிருக்கிறார்களே?**

*எத்தனைபேர் சொல்லுங்கள் பார்க்கலாம்? ஒரு பத்மா; ஒரு சித்திரா. அப்புறம்...?*

*-எதனால் வழுவூர் பாணி பிரபல்யத்தைப் பெற்றதென்றால் அந்தக் காலத்தில் வழுவூரார் சினிமாவில் நிறைய ஈடுபட்டிருந்தார். கமலா சினிமாவில் ஆடி நடித்ததன் மூலம் அதிக புகழ் கிடைத்தது. எப்போதுமே சினிமா சத்தி வாய்ந்ததுதானே.*

*அப்படியேதான் கூச்சுப்புடியில் சின்ன சத்தியமும். சினிமா நடிகைகள் அவரிடம் கற்றதால் அவருக்கு பிரபல்யம் ஏற்பட்டது. இப்போ அமலா சினிமாவில் நடிப்பதால் 'கலாக்ஷேத்ரா, கலாக்ஷேத்ரா' என்று ஒரு பிரபல்யம்.*

*அவ்வளவுதான்!*

**கலாக்ஷேத்திராவுடனான உங்களுடைய 40 வருட காலத்தில் எத்தகைய மாறுதல்களை நீங்கள் அங்கு பயிலவருபவர் களிடம் காண்கிறீர்கள்?**

*எங்களுடைய காலத்திலே இத்தனை ஆண்டுகளில் இதனை முடிக்க வேண்டும், நாம் வெளிப்பட வேண்டும் என்ற எண்ணம்*



*இருந்ததில்லை. படித்துக்கொண்டே இருப்போம். இப்போது, வரும்போதே 15 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுகளில்தான் வருகிறார்கள்.*

*நாலு ஆண்டுகள் கற்றதும் அங்கிருந்து வெளியேறவேண்டும் என்பதுதான் நோக்கம். நாமெல்லாம் வருடத்தை எண்ணியதே கிடையாது. ஆனால் அதற்காக அவர்களைக் குற்றமும் சொல்ல முடியாது. இதை ஒரு தொழிலாக்கி, அதனாலேயே சம்பாதிக்க வேண்டும் என்று வருபவர்களுக்கு அப்படியே மனசு செல்கிறது. சிலருக்கு ஆசை இருக்கலாம், ஆனால் வசதியும் வேண்டுமே. அதுதான் குறை.*

**இயற்கையான ஆர்வம் இவர்களுக்கு இருக்கிறதா? அல்லது பெற்றோரின் தூண்டுதலில்......**

*யாருடைய தூண்டுதலில்- என்ன நோக்கத்துடன் அவர்கள் வந்தாலும் யாரிடம் இயற்கையான ஆற்றல் இருக்கிறதோ அவர்கள் தான் நல்ல கலைஞர்களாக முடியும். அதாவது சிலர் கலைஞர்களாக பிறக்கிறார்கள். சிலர் கலைஞர்களாக உருவாக்கப்படுகிறார்கள். இயற்கை வைரத்துக்கும் செயற்கை வைரத்துக்கும் வித்தியாசம் இருக்கிறதல்லவா?*

*ஆனால், எதற்காக எல்லோருக்கும் கற்பிக்கிறோமென்றால், 50 பேர் கற்றால் 2 பேர்தான் நல்ல கலைஞர்களாக வருவார்கள். மீதி 48 பேர் கலையை ரசிக்கக்கூடிய அளவுக்காவது வரலாமில்லையா? கற்கின்ற எல்லோருமே கலைஞர்களாக வேண்டும் என்ற அவசியம் இல்லை.*

**இப்போதெல்லாம் பரதநாட்டிய நிகழ்ச் சிகளிலே- அதன் பத்ததியில் சில மாற்றங் களை- சில உருப்படிகள் தவிர்க்கப்படுவதை பார்க் கிறோமே......**

*பரதநாட்டிய கச்சேரியினுடைய ஒழுங்கு எப்படி ஆரம்பித்ததென்றால் ஒரு நர்த்தகி 2 மணி நேரம் ஆடும் போது கொஞ்சம் கொஞ்சமாக மனதும் உடலும் சூடுபிடித்து பிரதான உருப்படியான வர்ணத்துக்கு வரும்போது நல்ல ஓர் உற்சாக நிலையை அடையும் வகையில் அமைந்தது. அது மரபு. அதனை பின்பற்றுபவர்கள் இப்போதும் இருக்கிறார்கள்.*

*-இதை சற்று மாற்றலாமே என்று சிலர் சப்தத்துக்கு பதிலாக ஒரு கீர்த்தனம் அல்லது ஜதீஸ்வரம் செய்து நேராக வர்ணம் செய்கிறார்கள். கௌத்வம், மல்லாரி எல்லாம் இசை உருப்படிகள். அதை நாட்டிய ரூபத்தில் மேடையில் செய்கிறார்கள்.*

*இதைத்தவிர முற்றிலும் புதுமையாக- தலைகீழாக யாரும் செய்வதில்லை. முன்னரெல்லாம் ஒரு மார்க்கத்தில் 10 உருப்படிகள் இருந்தன. வர்ணம் மாத்திரம் ஒன்றரை மணிநேரம் ஆடுவார்கள். அதை ரசித்தார்கள். ஆனால் இப்போ 15 நிமிடங்களுள் வர்ணத்தை முடித்துவிடவேண்டுமென்கிறார்களே!*

*-அந்தமாதிரி ரசிகர்களுக்கும் பொறுமை இல்லாததால் கலைஞர்களான நாமும் என்ன செய்ய இயலும்? அப்படியான சமயத்தில் எது இரண்டு சற்று ஒரே மாதிரி இருக்கிறதோ, அதில் ஒன்றை நிறுத்துகிறோம். ஜதிஸ்வரமும் தில்லானாவும் நிருத்த*

(15ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# புருஷா மிருகம்

நார்மாவுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியில் அவளுடைய பொன்னுடல் நடுநடுங்கிற்று. "ஓ! மை காட்!" என்று கூவிய வண்ணம் அப்படியே கல்லாய்ச் சமைந்து விட்டாள்!

"டேக் இட் ஈஸி மை டியர்!....." – மகளைச் சமாதானப்படுத்த முயன்றார் பெர்க்மன்! அவருக்கு நன்றாகத் தெரியும், அந்தச் செய்தியால் நார்மாவின் உள்ளம் எந்த அளவுக்குப் பாதிக்கப்படும் என்பது! ஆனால் சொல்ல வந்த செய்தியில் பாதியைக் கேட்டே இத்தனை பாதிப்பு என்றால், மீதியை எப்படிச் சொல்வது என்ற கலக்கத்துடன் அவரும் நிலைகுலைந்து நின்று விட்டார். மகள் முகத்தை ஏறிட்டுப் பார்க்கவே ஓர் அச்சம் பிறந்தது.

"நார்மா...ஐ'ம் டெர்ரிபிளி ஸாரி....." என்றவாறே தைரியத்தை ஒன்று திரட்டிக் கொண்டு அவள் முகத்தை நோக்கினார்.

நார்மாவின் நீல நயனங்களின் ஓரத்தில், நித்திலம் போல் துளித்து, நெஞ்சில் கிளர்ந்த அனலால் சூடேறி உருண்டு திரண்ட கண்ணீர்த் திவலைகள், இமைகளின் படபடப்பில் சிதைந்து கன்னப் பரப்பில் நீர்க் கோலம் போட்டன!

"நடந்தது, நடந்து விட்டது! என்ன செய்வது, வேறு வழியில்லை! கேவலம் ஒரு நாய்! அதுவும் வெறிபிடித்தது!"

"நாய்க்கா, உங்களுக்கா? எப்படிச் சுட்டுக்கொல்ல மனம் வந்தது?"

சட்டென்று பதில் சொல்ல வாயெடுத்தார். சொன்னால்– அந்தச் செய்தியின் உக்ரம்– அவளை மேலும் கருக்கிவிடக்கூடாதே என்பதால் அடக்கிக் கொண்டார்! பாவம்! அவருக்கு தர்ம சங்கடமான நிலைமை!

அவர் தான் ஏழாண்டுக்கு முன்பு நார்மாவுக்கு "ஸீஸரை"– அந்த நாயைச் செல்லப்பிராணியாக வாங்கிப் பரிசளித்தவர்!இப்போது அவரே அதைச் சுட்டுக் கொன்று

சங்கர் (தமிழோசை சங்கரண்ணா)

விட்டார்.

"யூ டோன்ட் ஹாவ் எ ஹார்ட்! ஹாவ் யூ?...." என்று வெடித்தாள் நர்மா.

"எஸ் ஐ ஹாவ்!... ஆனால் அந்த இதயம் இப்போது அழுகிறது; அந்த நாய்க்காக அல்ல, உனக்காக!"

"எனக்காகவா?"

"ஆமாம்; 'அது' என்ன வேலை செய்து விட்டது தெரியுமா?"

வேத னைக்கு மத்தியிலும் வியப்புக்குறியுடன் தந்தையின் 'வாயை' நோக்கினாள் நார்மா.

"நீ வெளியே சென்றிருந்த போது, ஸ்டீஃபான் உன்னைத்தேடி இங்கே வந்திருந்தான். ஸீஸர் அவன்மேல் கண்மூடித்தனமாக வெறிகொண்டு பாய்ந்து, கடித்துக் குதறிவிட்டது!"

"ஓ!....நோ...நோ!...."– அரற்றினாள் நார்மா.

"ஆம்புலன்ஸ் வரவழைத்து, நானே மருத்துவமனையில் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டு மதியம் வந்தேன்; எனக்கும் பொறுமை அற்றுவிட்டது. ஸீஸரைத் தீர்த்துக் கட்டிவிட்டேன்!"

நார்மா அசைவற்றுச் சித்திரப் பதுமையாகி விட்டாள்!

இடி மேல் இடி!

ஸ்டீஃபான் அவளுடைய காதலன்; அவளைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறவன். அவனை ஸீஸர் கடித்துக் குதறிவிட்டதா? என்ன கொடுமை!

நார்மாவின் தலை சுழன்றது! தந்தையை 'பித்தேறியவளைப்' போல வெறிக்கப் பார்த்தவண்ணம் நின்று கொண்டிருந்தாள்.

"ஏதோ..... போதாத காலம். நீ வீணாக மனத்தை அலட்டிக் கொள்ளாதே! நானும் அம்மாவும் இன்று மாலை மருத்துவமனைக்குச் சென்று ஸ்டீஃபானைப் பார்த்துவிட்டு வர எண்ணியிருக்கிறோம். இன்று நீ அவனை 'அந்தக் கோலத்தில்' பார்ப்பது அத்துணை உசிதமில்லை; நாளைக்குப் போகலாம். பேசாமல் போய்ப் படுத்து உறங்கு. தூக்கத்தைப் போல துக்கத்தை மாற்றும் செவிலித்தாய்– மனப்புண் ஆற்றும் மாதா வேறு உண்டோ?..... போம்மா....ட்ரை டு கெட் ஸம் ஸ்லீப்!...."

அதிர்ச்சியால் அல்லாடிப்போன மகளைக் கைத்தாங்கலாக, மாடிக்கு அழைத்துப்போய் அவளுடைய அறையில் விட்டுவிட்டுக் கீழே இறங்கினார் பெர்க்மன்! ஹாலில் சுவரில் மாட்டப்பட்டிருந்த வண்ண ஓவியம் அவர் கண்களை உறுத்திற்று. 'வின்ஸெண்ட் வாங்கோ'வின் புகழ் பெற்ற 'ஸன் ப்ளவர்ஸ்' –சூரியகாந்தி மலர்கள்! 'அதீனா'வில் வாங்கிய அச்சுப் படிவம்! சித்திரத்தின் அடியில் முன்பு நார்மா கிறுக்கியிருந்தாள்: THE INSANE FLOWER!– பித்தம் பிடித்த மலர்!.........

செடியிலிருந்து பறித்து– அலங்காரப் பொருளாக ஜாடியில் வைக்கப்பட்டு வாடியதுபோல் காணப்பட்ட அந்த மலர்களை நினைத்து அந்தத் தலைப்பைக் கொடுத்தாளா, அல்லது சித்திரப் பிரமையால் வாடிப் பித்தம் பிடித்துத் தற்கொலை செய்து கொண்ட அந்த ஓவிய பிரம்மாவின் தலையெழுத்தை எண்ணிக் கிறுக்கிய கிறுக்கலா?

பெர்க்மன் ஒரு கணம் அந்த ஓவியத்தையே கண்கொட்டாமல் நோக்கினார். சூரியகாந்தி இதழ்ச் சிலிர்ப்பில், மகள் நார்மாவின் முகம் தெரிவது போல ஒரு மயக்கம், பிரமை! சட்டென்று பார்வையை திசை திருப்ப முயன்றார்....... ஏதுவாக தொலைபேசி மணி அதிர்ந்தது!.... 'பித்தம் பிடித்த மலர்'– மனத்திரையின் இருளுக்குள் தலையை மூடி மறைத்துக் கொண்டது.

(2)

அந்த நாள்........
அந்த நாய்!

குட்டியாக வந்ததிலிருந்தே நார்மாவுடன் ஒட்டிக்கொண்ட ஜீவன் அது!.....

அப்பா– அம்மா– அவள்– **அது!**

உயர்திணை– அஃறிணை,மாந்தர்– விலங்கு என்ற பேதம் ஏதும் இல்லாமல் குடும்பத்தில் ஓர் 'உறுப்பினர்' என்ற முறையில் 'ஸீஸர்' நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக,–

> **அந்த 'ஆதிமூலமே' இந்த அல்சேஷனைக் கண்டால், அடுத்த அவதாரம் என்று எடுக்க நேரிட்டால், 'ஸம்பவாமி யுகே, யுகே!' என்ற சாக்கை வைத்துக் கொண்டு, 'பைரவ வாகனாவதாரம்' என்று நிலவுலகில் ஜனித்து–பெர்க்மன் இல்லத்தில் ஒட்டி, பேரழகுப் பெட்டகமான நார்மாவின் அன்பையும் அரவணைப்பையும் அனுபவித்து அருள்பாலிக்க இறங்கி, இரங்கி வந்தால் கூட வியப்படையத் தேவையில்லை**

இல்லையில்லை– கணந்தோறும் கட்டித் தழுவலும் இதந்தரும் முத்த மழையுமாக, அன்புடன், அரவணைப்புடன் வளர்ந்து வந்தது!....'பெடிகிரி சம்' ஊட்டம்; 'பி.எம்.டபுள்யூ' ஏற்றம்! அந்த 'ஆதிமூலமே' இந்த அல்சேஷனைக் கண்டால், அடுத்த அவதாரம் என்று எடுக்க நேரிட்டால், 'ஸம்பவாமி யுகே, யுகே!' என்ற சாக்கை வைத்துக்கொண்டு, 'பைரவ வாகனாவதாரம்' என்று நிலவுலகில் ஜனித்து–பெர்க்மன் இல்லத்தில் ஒட்டி, பேரழகுப் பெட்டகமான நார்மாவின் அன்பையும் அரவணைப்பையும் அனுபவித்து அருள்பாலிக்க இறங்கி, இரங்கி




வந்தால் கூட வியப்படையத் தேவையில்லை என்று கூறலாம்! சுந்தர பூமியாம் ஸ்வீடனில் பிறந்து, இந்திர பூமியாம் இங்கிலாந்தில் வந்து வாழும் பெர்க்மன் குடும்பம் அத்துணை ஏற்றமும் எழிலும் உடையது!

பெர்க்மன் ஒரு ஜெட்–செட்டர்! அனைத்துலகப் புகழ்பெற்ற 'ஆன்டீக்ஸ் டீலர்' பன்னாட்டுக் கலைப்பொருட்கள், பழம் பெரும் ஓவியங்கள், சிவா வடிவங்கள், தொல் பொருள் துப்பாக்கிகள் என்று ஆயிரக்கணக்கில் பணம் முதலீடு செய்து, இலட்சக்கணக்கில் சம்பாதிப்பவர். ஸ்டாக்ஹோமில் சொத்துக்கள் நிரம்ப உண்டு. வியாபார வசதிக்காக லண்டனில் பல ஆண்டுகளாகக் குடும்பத்துடன் வசித்து வருகிறார். ஹேம்ஸ்டெட்டில் வீடு!... வீடா, அரண்மனை மாதிரி பெரிய மாளிகை!....

நார்மா ஒரே மகள்! இருபது வயது எழிற் கன்னி! ஆடை–டிஸைனிங், ஒப்பனைக் கலைத்துறையில் தேர்ச்சி பெற்றுவிட்டு, சுயமாகத் தொழில் துவங்கலாமா என்று யோசித்துக் கொண்டிருப்பவள்!.....அவள் உடல் வாளிப்பையும் அங்க லாவண்யங்களையும் முக இலட்சணத்தையும் பார்த்துவிட்டு, 'மாடலிங்' துறைக்கு அவளை இழுக்க எத்தனையோ பேர் மண்டியிட்டுப் பார்த்தும் அவள் மறுத்துவிட்டாள். பெர்க்மனும் ஒப்பவில்லை!

'ஷி இஸ் நாட் எ பிம்போ, எ பிரில்லியன்ட் கேர்ல்!' என்று ஒரே வரியில் மடக்கி விடுவார்!

'பெர்மிஸிவ்னஸ்' என்பதெல்லாம் அவருக்குத் துளியும் பிடிக்காத விஷயம்: குடும்பத்தில் எல்லாம் அவர் 'பெர்மிஷனை' ஒட்டியே நடக்கும். அவ்வளவு கட்டுப்பாடான குடும்பம்; அதற்காகக் 'கட்டுப்பெட்டியும்' இல்லை!

வரையறைக்குள்–வரைகடக்காத சுதந்திரம் உண்டு.

இளைஞன் ஸ்டீஃபானை– மகளுக்கு 'தீர்க்க தரிசனத்தோடு' ஃபியான்ஸியாக அறிமுகப்படுத்தியவர் பெர்க்மன் அவர்கள்தாம்! நார்மாவுக்கும் அவனைப் பிடித்திருந்தது.

ஆனால்?.......

அப்பா–அம்மாவுக்கும் அவளுக்கும் மட்டும் பிடித்தால் போதுமா?....பின், யாருக்குப் பிடிக்கவில்லை?.....இங்கே தான் நம் 'கதை'யின் கருப் பொருள் தொக்கி நிற்கிறது!

உங்கள் ஊகம் சரிதான்! அந்த நாய்க்கு ஸ்டீஃபானைக் கண்டால் துப்பரவாக ஆகாது!.... ஸீஸருக்கும் ஸ்டீஃபானுக்கும் அப்படிப்பட்ட ஏழாம் பொருத்தம்!

"டார்லிங்!.... வாட்ஸ் ராங் வித் யுவர் பிளடி டாக்? என்னை அது முறைக்கிற முறைப்பும், உறுமுகிற உறுமலும்–எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை!... ஐ'ம் ஸ்கேர்டு...." என்று நார்மாவிடம் ஒருநாள் புகார் செய்தான் ஸ்டீஃபான்!

"ஷீயர் ஜலஸீ!"

என்று சிரித்துக்கொண்டே, வேடிக்கையாகப் பதில் சொன்னாள் நார்மா!

என்னது, பொறாமையா ?....இந்த நாய்க்கா?... ஆர் யூ க்ரேஸீ?......

"இருக்கக்கூடாதா?...இதோ பாருங்கள் ஸ்டீஃபான், அது வாயில்லா ஜீவன்!... குட்டியிலிருந்தே ஒட்டிப் பழகிவிட்டது!...நீங்கள் என்னைப் பார்க்க வரும் போதெல்லாம், நான் அதைப் புறக்கணித்துவிட்டு உங்களோடு உல்லாசமாகப் கொஞ்சுவதும் சல்லாபமாக வெளியே புறப்படுவதும் அதற்குப் பிடிக்கவில்லையோ என்னவோ?... எல்லாம் ஒரு 'இன்ஸ்டிங்ட்' தானே!...." அவள் கள்ளங் கபடமில்லாமல், பரமாகவே சொன்னாள்!...

"நாயை, நாய்மாதிரி நடத்தணும்; நாயகன் மாதிரி நடத்தினால்?..... அதுக்கு 'கொழுப்பு' ஏறாமல் என்ன செய்யும்! எல்லாம் நீ கொடுக்கிற செல்லம்; குட்டியிலே சரிதான், கூடப்போட்டுப் படுத்தே!... இப்போ 'எருமை மாடு' மாதிரி வளர்ந்த பிறகு– 'எம்ப்ரேஸ்' பண்றது கொஞ்சங்கூட நல்லா இல்லே!..." –சூடாகவே பொரிந்து தள்ளினான் ஸ்டீஃபான்!.......

வேண்டாத விருந்தாளியாக அவனைக் கருதி– சற்று எட்டி நின்று முறைத்துக் கொண்டிருந்த ஸீஸர்– அந்த நாய் அல்சேஷன், அவன் சொன்ன 'சுடுமொழிகளைப்' புரிந்து கொண்டதைப் போல, சற்று கிட்ட வந்து 'உர்ர்...ற்...' என்று உறும ஆரம்பித்தது!...."ஸீஸர்!.... என்ன இது!...கெட் லாஸ்ட்!..." என்று கையிலிருந்த புத்தகத்தை அதன் மேல் வீசி எறிந்தாள் நார்மா. தன் 'எஜமானி' என்பதற்காகவோ என்னவோ, ஸீஸர் 'மூஞ்சியை' இழுத்துக் கொண்டு வெளியேறியது!

ஒரு வேடிக்கை:

பெர்க்மன் வீட்டுக்கு எத்தனையோ பேர், வாலிபர்கள், வயோதிபர்கள் வருவார்கள், போவார்கள்! நார்மாவோடு அளவளாவுவார்கள்; பிரியும்போது அன்போடு கட்டிப்பிடித்து, அணைத்து அவள் கன்னத்தில் முத்தமிட்டுச் செல்வார்கள்! ஸீஸர் உடனிருக்கும்; ஒரு தொந்தரவு கிடையாது, எல்லோரிடமும் வாலைக் குழைக்கும்!...

அப்படிப்பட்ட 'ஸீஸர்' ஏன் ஸ்டீஃபானிடம் மட்டும் 'வாலாட்ட' வேண்டும்? பகைமை பாராட்ட வேண்டும்?... பூர்வ ஜென்மப் பகையோ?.... இருக்கலாம், யார் கண்டார்கள்!................

(3)

ஸ்டீஃபானுக்கு பெரிய நிம்மதி!.... ஒரு வாரம் மருத்துவமனை வாசம்; உடம்பில் ஏழு இடங்களில்– 'ஸ்டிச்' தையல்கள்!... என்றாலும் 'மாமனாராகப்' போகிறவர் தன் 'எதிரியான' நாயைச் சுட்டுக்கொன்றதில் பரம ஸந்தோஷம்!...அவன் 'ஆஸ்பத்திரியில்' இருந்த போது– பெர்க்மன் தம்பதியர்– நார்மா எல்லோரும் தினமும் வந்து பார்த்தார்கள்! நார்மா தனித்தும் இருமுறை வந்து பார்த்தாள்! 'நாயைக்' கொன்றதால் ஏற்பட்ட துயரச் சாயல் அவள் முகத்தில் இருந்தது.... அவனும் பக்குவமாக 'நடந்து கொண்டான்'.

நாயைப்பற்றி எதுவுமே பேசவில்லை!... 'டிஸ்சார்ஜ்' ஆனதும், டார்பிஷயரில் உள்ள தன் பெற்றோர்களோடு ஒரு வாரம் தங்கிவிட்டு, மீண்டும் லண்டன் வந்த ஸடீஃபான், நேரே 'இன்டர்ப்ளோரா'வில் 'சிவப்பு ரோஜாச் செண்டு' ஒன்றை வாங்கிக்கொண்டு நார்மாவைப் பார்க்க ஆவலுடன் ஹேம்ஸ்டெட் நோக்கி விரைந்தான். அங்கே அவன் கையிலிருந்த ரோஜாவுக்குரியவள்----சூரியகாந்தி மலராகிக் கொண்டிருந்தாள்............

(இரண்டாம் பகுதி அடுத்த இதழில்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உலக அரங்கில்...

(4ம் பக்க தொடர்ச்சி)

அப்படிப்பட்ட தீவிரவாதப் பிரதமரையும் அவரது லிக்குட் கட்சியையும் சில வாரங்களுக்கு முன் நடந்த இஸ்ரேல் பொதுத்தேர்தலில் தூக்கி எறிந்து மண் கவ்வச் செய்தார்கள் சமாதானத்தை நேசிக்கும் இஸ்ரேலிய வாக்காளர்கள்.

தமது நாட்டை வழிநடத்த அவர்கள் தெரிவு செய்திருப்பது 70 வயது "இளைஞர்", முன்னாள் ஜெனரல் யிற்ஷாக் றாபின் அவர்களை! புதிய பிரதமர் தொழிற்கட்சியைச் சேர்ந்தவர். தேர்தல் முடிவு வெளியிடப்பட்ட ஒரு சில மணி நேரத்திற்குள் அவர் இரண்டு வாக்குறுதிகளை வழங்கி வாக்காளர்களை, பலஸ்தினிய மக்களை மட்டுமல்ல உலக அரசியல் வாதிகளையே மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்:-"...பலஸ்தினிய மக்களுக்கு சுயாட்சி வழங்குவேன்!

அயலில் உள்ள அரபு நாடுகளுடன் சமாதானத்தை ஏற்படுத்துவேன்!" என்று வாக்குறுதி வழங்கியது மட்டுமல்ல சர்ச்சைக்குரிய நிலங்களில் மேலும்மேலும் புதிய யூத கட்டிடங்கள் எழுப்பப்படுவது, யூத குடியேற்றங்கள் நடத்தப்படுவது உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்றும் உத்தரவிட்டார்!... சொன்னதையெல்லாம் புதியவர் றாபின் செயலில் காட்டுவாரா என்பதை அறிய உலகம் காத்திருக்கிறது. அதற்கு ஒரு காரணம்- 1967ல் அரபு- இஸ்ரேல் போரின் போது இஸ்ரேலின் ராணுவ ஜெனரலாக இருந்து அரபு நிலங்களை ஆக்கிரமித்த-கைப்பற்றிய றாபின்- 25 வருடங்களுக்கு பிறகு இஸ்ரேலின் பிரதமராக வந்து திருப்பிக் கொடுத்தால், அது வரலாற்றில் இடம்பெறப்போகும் சம்பவமாகும்! உலகப் போரின் விசை தீவிரவாத முன்னாள் பிரதமர் ஷாமீரின் கையில் இருந்தது என்று சொன்னேன். இப்போது தற்போதைய பக்குவவாத பிரதமர் றாபினின் கையில்தான் பலஸ்தினியர்களின் வெள்ளிதிசை ஆரம்பமே தங்கி இருக்கிறது!

## மாண்புமிகு 'முன்னாள்' அதிபர் அவர்களே!....


அமெரிக்க நாட்டில் ஒரு சாதாரண அரசியல்வாதி நாட்டின் முதற்குடிமகனாக அரசு கட்டில் ஏறிவிட்டால் உயிருள்ளவரை அவர் அதிபர்தான்! வெள்ளைமாளிகை வாசம். ஹெலிகாப்டர், கார், சீ.ஐ.ஏ மெய்க்காவலர்கள், ஆள் அம்பு இப்படிப்பல. தேர்தலில் அவர் தோற்று வெளியேறும்போது அவரிடமிருந்து எல்லாமே பறிக்கப்படுவதில்லை. வீட்டுவசதி, சீ.ஐ.ஏ காவலர்கள், அவர்களுக்கு ஊதியம். ஊழியர்கள் கூட முன்னாள் அதிபரை 'மிஸ்டர் பிரசிடென்ட்' என்றுதான் தொடர்ந்தும் அழைக்கிறார்கள். இந்த வசதிகளை இன்று அனுபவித்து வருகிறார்கள் மாண்புமிகு (முன்னாள்) அதிபர்கள் நிக்சன், ஜிம்மி கார்ட்டர் மற்றும் றொனால்ட் ரேகன் போன்றோர். இதுதான் அமெரிக்கா! இந்த அமெரிக்க நிலையைப்பற்றி எழுதும்போது 'முன்னாள்' சோவியத்அதிபரின் இன்றைய நிலைமையும் இலங்கையின் முன்னாள் பிரதமர் ஒருவரின் நிலைமையும்தான் என் நினைவில் பளிச்சிடுகின்றன.

சோவியத்யூனியனில் மட்டுமல்ல உலகின் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றிலும் கம்யூனிசம் உடைக்கப்படுவதற்கு "சம்மட்டியை கழற்றிக்" கொடுத்தவர் தலைவர் கோர்பச்சேவ். இளகாத இரும்புமனம் கொண்ட இங்கிலாந்தின் அப்போதைய பிரதமர் தாச்சர் அம்மையாரின் இதயத்தையே இளக வைத்தவர்! அவர்- மேற்கொண்ட பணிகளினால்- உலக மக்கள் மூன்றாவது உலகப்போரிலிருந்து காப்பாற்றப் பட்டார்கள். இந்த சகாப்தத்தின் யுகபுருஷன்- சமாதானத்தின் பிதா என்றெல்லாம் விபரிக்கப்பட்ட அந்தத் தலைவர் கோர்பச்சேவ்- இரண்டு வாரங்கள் சிறையில் அடைக்கப்பட்ட பெருமகனார்- தனது சோவியத் மக்களின் வாழ்வில் ஒளியேற்றுவதற்காக மெழுகுவர்த்தி போல தன்னைத்தானே உருக்கி அழித்துக் கொண்டார். அமெரிக்க ஆட்சிமுறைபோல ரஷ்யாவிலும் எமது முன்னாள் அதிபரை கௌரவிப்போம் என்று ஆரம்பித்தார்கள் ரஷ்யாவின் புதிய யெல்சின் ஆட்சியாளர்கள்.

முன்னாள் அதிபருக்கு தனியான இருப்பிடவசதி, அதிபராக பதவிக்காலத்தில் இருந்தது போன்ற பெரிய மோட்டார் கார்- இவற்றோடு மெய்க்காப்பாளர்கள் பலரும் முன்னாள் தலைவருக்கு வழங்கப் பட்டார்கள். "பேசும் உரிமை பறிக்கப்பட்ட சோவியத் மக்களுக்கு பேச்சுச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்துவிட்டேன். அந்த உரிமை எனக்கும் இருக்கிறது தானே!" என்று தப்புக்கணக்குப் போட்ட அந்த அப்பாவி மனிதர் கோர்பச்சேவ்- புதிய ரஷ்ய அதிபர் யெல்சினின் பொருளாதார கொள்கைகளை கண்டனம் செய்து தமது கருத்தை வெளியிட்டார்!

வந்ததே ஆபத்து! கோர்பச்சேவுக்கு வழங்கப்பட்டிருந்த வசதியான நீளமான (பலர் ஏறிப்பயணம் போகக்கூடிய) மோட்டார் கார் அவரிடமிருந்து பறிக்கப்பட்டது! இந்தியாவின் அம்பாசடர் வண்டி போல ரஷ்யாவின் ஸ்ரீமான் சாதாரண பொதுஜனம் அவர்களின் காரான 'ஒல்கா' கார் கோர்பசேவுக்கு வழங்கப்பட்டது!

"ஐயா! இது சிறிய கார். எனது மெய்க்காப்பாளர்கள் எல்லோரும் என்னோடு ஏறிப்போக இது வசதி இல்லாத கார்!..." என்று அரசாங்கத்துடன் வாதாடிப்பார்த்தார் கோர்பசேவ். விஷயம் நடக்கவில்லை. உங்கள் மெய்க்காப்பாளர்களின் எண்ணிக்கையை குறையுங்கள், அல்லது இருப்போர் எல்லோரும் காரில் ஏறி அடைத்துக்கொண்டு செல்லுங்கள் என்று அரசு பதிலளித்தது. சிக்கன நடவடிக்கையாகவே கார் மாற்றப்பட்டது



றாபின்

என்பது அரசின் அதிகாரபூர்வமான விளக்கம். ஆனால் தமது வாயடைப்புக்காகவே இந்த கார் பறிப்பு! ஆள் அடைப்பு! என்பது அந்த அரசியல் மாமேதை கோர்பச்சேவுக்கு தெரியாதா என்ன?...

"...உங்களுக்கு கார் எதற்கு? ரஷ்ய பஸ்வண்டியில் பயணம் செய்யுங்கள் அல்லது மற்றப் பொதுமக்களைப்போல சைக்கிளில் போங்கள் என்று ரஷ்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து தமது முன்னாள் அதிபரை "கௌரவிக்காமல்" விட்டால் அதுவே பெருந்தன்மைதான்!

'ஜனநாயகத்தின் தாய்நாடு' என்று விபரிக்கப்படும் இங்கிலாந்தில் கடந்த ஆண்டில் கட்சியால் பிரதமராக்கப்பட்டு, இவ்வாண்டில் மக்களால் உறுதிப்படுத்தப்பட்டவர் இனியவர் மேஜர் அவர்கள். அவரது அரசியல் குரு- முன்னாள் பிரதமர் 'இரும்புத்தலைவி' தாச்சர் அம்மையார் என்பது எல்லோருக்கும் தெரியும்!

பதவியிலிருந்து இறங்கிய பின்னர் அம்மையார் தனது கட்சிக்காரர்களை குறைசொல்ல ஆரம்பித்தார். தனது சிஷ்யப்பிள்ளைகளை பகிரங்கமாக திட்ட ஆரம்பித்தார். ஐரோப்பிய ஐக்கியம், ஐரோப்பிய நாணயமுறை என்பன பற்றி- தற்போதைய அரசு கடைப்பிடிக்கும் கொள்கைகளை தாறுமாறாக கண்டனம் செய்து பத்திரிகையாளர் மகாநாடுகளை நடத்தினார்!

பிரிட்டிஷ் கன்சவேட்டிவ் அரசினரும் பிரதமர் மேஜரும் என்ன செய்தார்கள்? தாச்சர் அம்மையாரை கேலி செய்தார்களா? அவரது காரைப் பறித்தார்களா? இல்லையே இல்லை. 'பேசத் தெரிந்தவர் அம்மையார்! பேசட்டுமே!...' என்ற போக்கில் சும்மா விட்டுவிட்டார்கள்.

கடந்த மாதம் தாச்சர் அம்மையார், அரசாங்கத்தின் சிபார்சின் பேரில் பிரிட்டிஷ் பேரரசியால் பிரபுகள் சபைக்கு உயர்த்தப்பட்டார். இப்போது அவர் "மதிப்பிற்குரிய சீமாட்டி தாச்சர்" ஆகிவிட்டார்! பிரபுக்கள் சபையில் இனி அவரது கர்ஜனை கேட்கும். இதுதான் பிரிட்டிஷ் அரசியல் தலைவர்களின் தனியான பண்பு.

இனி இலங்கையில் சுமார் 22 ஆண்டுகளுக்கு முன் நடந்த ஒரு சம்பவம். 1970ம் ஆண்டின் பொதுத்தேர்தலில் பிரதமர் டட்லி சேனநாயக்கா அவர்களின் யூ.என்.பி அரசை தோற்கடித்து நாட்டின் தலைவியாக (உலகின் முதலாவது பெண் பிரதமராக) திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் பதவி ஏற்ற காலம் அது. திடீரென 'முன்னாள்' பிரதமராக்கப்பட்டார் டட்லி அவர்கள். இலங்கை வானொலி நிலைய வாசலிலும் மற்றும் இடங்களிலும் இருந்த அவரது புகைப்படங்கள் அகற்றப்பட்டு முதலாவது பெண் பிரதமரின் புகைப்படம் மாட்டப் பட்டது. வானொலி நிலையம் இருக்கும் றொறிங்கடன் சதுக்கத்தினூடாக பொரளையில் இருந்த தமது வீடுநோக்கி போய்க் கொண்டிருந்தார் (முன்னாள்) பிரதமர் டட்லி.

வழியில் சிறுகூட்டம். பொதுமக்கள் சிலர் கூட்டமாக நிற்பதைக்கண்டு தமது காரை நிறுத்தும்படி காரோட்டியிடம் சொல்லி காரை விட்டு இறங்கினார் டட்லி. வழக்கம் போல தம்மை அணுகி குறை நிறைகளைச் சொல்வார்கள் என்று அவர் எண்ணினார் போலும். கோர்பச்சேவ் போல டட்லியும் போட்டது தப்புக்கணக்கு!

அங்கிருந்த பொதுமக்கள் அவரையும் அவரது காரையும் சூழ்ந்து கொண்டு கலாட்டா செய்ய ஆரம்பித்தார்கள். கேலிசெய்து



டட்லி

எக்காளமிட்டார்கள். டட்லி அவர்கள் பக்குவமாக மீண்டும் காரில் ஏறி விடைபெற்றுக் கொண்டார். இச்சம்பவம் நடந்து ஓரிரு வருடங்களுக்குள் இந்த உலகிலிருந்தே விடைபெற்றுக் கொண்டார் அந்த அப்பாவிப் பிரம்மச்சாரிப் பிரதமர் டட்லி சேனநாயக்கா அவர்கள்.

அவரது சடலம் றொறிங்கடன் சதுக்கத்தில் தீ மூட்டப்படமுன் அப்போதைய கட்சித்தலைவர் திரு.ஜே.ஆர்.ஜெயவர்தனா சொன்ன வழியனுப்பு வார்த்தைகள் மனதை உருக்குபவை.

"தூங்குங்கள்! என் இனிய இளவரசே! நிம்மதியாகத் தூங்குங்கள்!..."

நன்றிமறந்த அந்த மக்கள் ஒரு முன்னாள் தலைவரை அகௌரவப் படுத்திய அந்த சம்பவத்தை நான் நினைக்கும் போதெல்லாம்- வானொலியில் நான் அடிக்கடி ஒலிபரப்பும் ஒரு பாடலின் வரிகள் என் நினைவில் ஒலிப்பது வழக்கம்:

"....யாரை எங்கே வைப்பது என்று- யாருக்கும் புரியல்லே! அண்ணே!ஊதுபத்திக்கும் பீடித் துண்டுக்கும் பேதம் புரியல்லே அண்ணே பேதம் புரியல்லே...."


நாடக விழா 92-(2)



# தமிழ் அவைக்காற்று கலைக் கழகம்

அளிக்கும்

# நாடக விழா 92-(2)

## 19-07-1992

ஞாயிறு மாலை 6.00 மணி முதல் 10.00 மணி வரை

## WALTHAM FOREST THEATRE

LLOYD PARK, WINNS TERRACE, WALTHAMSTOW
LONDON E17

## நாடகங்கள்:

1. தப்பி வந்த தாடி ஆடு (சிறுவர் நாடகம்)
2. மழை
3. இரு துயரங்கள்
4. "துன்பக் கேணியிலே..." (கவிதா நாடக நிகழ்வு)

நெறியாள்கை . பாலேந்திரா

பிரவேசம்
£ 3.00
£ 5.00 (இருவர்)
சிறுவர் இலவசம்

சிற்றுண்டி விற்பனைக்குண்டு
சிறுவர் நாடகந் தவிர்ந்த மற்றைய நேரங்களில் குழந்தைகளுக்கென
பிரத்தியேக வீடியோ காட்சி காண்பிக்கப்படும்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மனித வாழ்வின் நோக்கம் அன்பினால் நன்மை செய்வதே

# இலக்கிய மேதை டால்ஸ்டாய்


ருஷிய இலக்கிய மேதை என்று போற்றப்படும் டால்ஸ்டாய் அமர இலக்கியங்களை மட்டும் விட்டுச் செல்லவில்லை. ஆன்மீக, உலகியல், சமூகவாழ்நிலைகள் குறித்த ஆழ்ந்த சிந்தனைகளையும்வழங்கியிருக்கிறார். இந்திய விடுதலையானாலும் 'சரி, ரஷியாவில் ஏற்பட்ட பஞ்சமாயினும் சரி– எல்லாப் பிரச்னைகள் குறித்தும் அக்கறை காட்டியிருக்கிறார். ஒரு சிந்தனையாளனின் பொறுப்புணர்வோடு செயலாற்றியிருக்கிறார். இதனாலேயே ஆன்மிக நாட்டம் கொண்ட காந்தி முதல் ரஷியப் புரட்சியினை நிகழ்த்திக் காட்டிய லெனின் வரை பல்வேறு தலைவர்கள் மற்றும் அறிஞர்களின் கவனங்களை ஈர்த்திருக்கிறார். அவரது நூறாவது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு சோவியத் யூனியன்அவரது எழுத்துக்களையெல்லாம் தொகுத்து 90 தொகுப்புகளாக வெளியிட்டது. அவரது நாட் குறிப்புகள், கடிதங்கள் மட்டுமே 30 தொகுதிகள் வரை வருகின்றன. இதிலிருந்தே அவரது தனிப்பட்ட வாழ்வின் போக்கும் சமூக அக்கறை குறித்த அவரது பங்கும் எவ்வளவு விரிவும் வீச்சும் கொண்டவை என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

டால்ஸ்டாயின் மூன்று பெரிய நாவல்கள்:போரும் அமைதியும், அன்னா கரீனினா மற்றும் மறு உயிர்ப்பு. முதலாவது நாவல் "போரும் வாழ்வும்" என்ற தலைப்பில் டி.எஸ்.சொக்கலிங்கத்தால் தமிழில் ஆக்கப்பட்டு வெளியாகியுள்ளது. 1863–69கால இடைவெளியில் எழுதப்பட்டது. ஓர் இதிகாசத்தின் கன பரிமாணம் கொண்டது. 500 பாத்திரங்கள் இடம் பெறுகின்றன. மாவீரன் நெப்போலியன் முதல் சாதாரண சிப்பாய் வரை ஒவ்வொருவரையும் ஒவ்வொரு கோணத்தில் உருவாக்கியிருக்கிறார். "நம்மால் சகித்துக் கொள்ள முடியாத விஷயங்களும் இந்நூலில் இருக்கின்றன. ஆச்சரியப்படக்கூடிய விஷயங்களும் இருக்கின்றன. ஆனால், அந்த ஆச்சரியமான விஷயங்களை அவ்வளவு பிரமாதமாக, அவ்வளவு கம்பீரமாக இந்தப் புத்தகத்தில் எழுதியருப்பதைப் போல வேறு எந்த நாவலாசிரியரும் எழுதியதில்லை" (டி.எஸ். சொக்கலிங்கம்)

இந்நாவல் எழுத நேர்ந்த ஒரு சந்தர்ப்பத்தைடால்ஸ்டாய் குறிப்பிடுகிறார்: "யுத்த நெருக்கடி ஏற்படும்போது ஊரிலுள்ள கீழ்த்ரமான பேர்வழிகள்தான் முன்னால் வந்து நிற்பார்கள். மாஸ்கோவில் யுத்த நெருக்கடியைச் சமாளிப்பதற்காக ருஷ்யசக்கரவர்த்தி ஒரு மகாநாட்டைக் கூட்டியபோது, அங்கே பேசியவர்களில் ஒரு கள்ளுக்கடைக்காரன்தான் ரொம்ப

**"யுத்த நெருக்கடி ஏற்படும்போது ஊரிலுள்ள கீழ்தரமான பேர்வழிகள்தான் முன்னால் வந்து நிற்பார்கள். மாஸ்கோவில் யுத்த நெருக்கடியைச் சமாளிப் பதற்காக ருஷ்யசக்கரவர்த்தி ஒரு மகாநாட்டைக் கூட்டியபோது, அங்கே பேசியவர்களில் ஒரு கள்ளுக்கடைக்காரன்தான் ரொம்ப தேசபக்தி ஆர்வத்தோடு பேசினான்".**

போரிட்டு யுத்த களத்தில் வீழ்ந்து கிடக்கும் ஆண்ட்ருவின் எண்ண ஓட்டங்களில் அவனது அபிமான வீரன் நெப்போலியன் கூட ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை: "பிரெஞ்சுப் படையினருடன் தன் தரைப் படையினர் நிகழ்த்தும் போர் எப்படி முடிவடைகிறது என்று அறியவும் பீரங்கிகள் காப்பாற்றப்பட்டனவா என்று தெரியவும் வேண்டி கண்களைத் திறந்தார். ஆனால் இவற்றையெல்லாம் பார்க்கவில்லை. அவருக்கு மேலே வானத்தைத் தவிர வேறொன்றுமில்லை. அமைதியாக ஊர்ந்து செல்லும் சாம்பல் வண்ண மேகங்களைத் தவிர வேறொன்றும் இல்லாத பரந்து விரிந்த வானம். அம் மேகங்கள் நிசப்தமாக, அமைதியாக, வெற்றியுடன் செல்கின்றன; நம்மைப் போல கூக்குரலிட்டும் சண்டையிட்டும் ஓடவில்லை;... எல்லையற்ற வானத்தின் மீது எவ்வளவு வித்தியாசத்துடன் ஊர்ந்து செல்கின்றன அவை! இதற்கு முன் அவற்றை எவ்வாறு பார்க்காது இருந்தேன்? இப்போது பார்த்ததும் எப்படி உற்சாகம் கொள்கிறேன்! எல்லை



டால்ஸ்டாய்

யற்ற அவ் வானம் தவிர அனைத்தும் பகட்டு, ஏமாற்று. அது தவிர வேறொன்றுமில்லை. அதுகூட இல்லை; அமைதியும் நிசப்தமும்தான், வேறொன்றுமில்லை. கடவுளுக்கு நன்றி....அது நெப்போலியன்தான். ஆனால் அந்தக் கணத்தில் அவன் சிறிய சிறப்பேதுமில்லாத ஒன்றாக ஆகிவிட்டான். பரந்து விரிந்த எல்லையற்ற வானத்துக்கும் அவனது ஆன்மாவுக்கும் இடையில் நிகழ்பவற்றின் முன் நெப்போலியன் ஒரு பொருட்டல்ல."

அலெக்ஸாண்டர் ஸோல்ஜெனிட்சனின் " ஆகஸ்டு 1914" நாவலில் ஸான்யா என்பவன் டால்ஸ்டாயைச் சந்தித்து பேசும் ஓர் இடம் வருகின்றது. ஸான்யா வினவுகிறான்– "புவியில் மனித வாழ்வின் நோக்கம் என்ன?" "நன்மை புரிவதும் அதன் மூலம் பரலோக சாம்ராஜ்யத்தை இங்கேயே நிர்மாணிப்பதும்." "எவ்வாறு நன்மை புரிவது? அன்பின் மூலமாக வா? அன்பின் மூலமாகவே இருக்க வேண்டுமா?" "அன்பின் மூலமாக மட்டுமே." "மனிதனிடம் உள்ள அன்பின் ஆற்றலை மிகைப் படுத்தவில்லை என்பதில் உறுதியாக இருக்கிறீர்களா? குறைந்த பட்சம் நவீன மனிதனிடம்? அது அவ்வளவு ஆற்றல் இல்லாததாக, ஒவ்வொருவரிடமும் இல்லாமலும் இருந்தால் என்ன செய்வது? அப்போது உங்கள் தத்துவம் பயனின்றிப் போய் விடுமே? எல்லோரிடமும் நல்லெண்ணம் வளர, வேறு ஏதாவது இடைப்பட்ட ஒன்றை ஏன் உருவாக்கக் கூடாது? அதன் பின் அன்பின் மூலமாகச் செய்யலாமே?" "அன்பின் மூலமாக மட்டுமே. அதைவிடச் சிறந்தஒன்றை யாரும் கண்டுவிட முடியாது."

**அடிக்கடி அவர் மன அமைதியை குலைத்ததே கடவுள் பற்றிய சிந்தனை தான்**

("August 1914", Alexander Solzhenitsyn, The Bodley Head, London 1972, pp.20-23)

சரிவர டால்ஸ்டாயைப் புரிந்து கொள்ள இது உதவும். அவரது கருத்துகளில் அவருக்குள்ள உறுதிப்பாட்டையும் இது சுட்டிக்காட்டுகிறது. உரையாடலில் அவர் அடிக்கடி விவாதிப்பன: கடவுள், விவசாயக் குடியானவன், பெண்–இவர்கள் பற்றியே. பெண்கள் பற்றிய நல்ல அபிப்பிராயம் அவருக்கு இருந்ததில்லை. விவசாயக் குடியானவர்கள் மீது அவருக்கு அளவு கடந்த அபிமானம். 'அடிக்கடி அவர் மன அமைதியை குலைத்ததே கடவுள் பற்றிய சிந்தனைதான்' என்று கார்க்கி தனது நினைவுக் குறிப்புகளில் எழுதுகிறார்.

"ஸெர்ஜியஸ் பாதிரியார்" என்னும் குறுநாவலின் ஒரு பகுதியை நண்பர்களுக்குப் படித்துக்காண்பிக்கும்போது 'வயதானவன், நன்றாகவே எழுதியிருக்கிறான்' என்று தன்னைப் பாராட்டிக்கொண்டாராம். கோட்டுவாத்திய நிபுணர் ஒருவர் தனது இசையில் நுட்பமான இடங்கள் வரும்போது, 'பலேராவ், பலே' என்று தன்னையே பாராட்டிக்கொள்வது நினைவுக்கு வருகிறது இங்கு. இவர் சிந்தனையில் தோய்ந்திருந்தபோது நேரில் கண்ட அனுபவத்தை கார்க்கி கவிதையாக விவரிக்கிறார். "...அனைத்தின் தோற்றம், நோக்கம் இவற்றை அறிந்து பாறை, புல் இவற்றின் இறுதி எப்போது, எப்படி இருக்கும் என்று வியந்து, அதுபோல் மனிதன் முதல் சூரியன் வரை ஒவ்வொன்றின் ரகசியத்தை உணர்ந்து பாறை ஒன்று உயிர் பெற்று எழுந்து வந்தது போல் தோன்றியது அவர் தோற்றம். கடல் அவரது ஆன்மாவின் ஒரு பகுதியாகவும், அவரைச் சுற்றியுள்ள அனைத்தும் அவரிடமிருந்து விகசித்த மாதிரி இருந்தது. கடல் அலைகளுக்குக் கட்டளை இடுவதும் புறக்கணிப்பதும், மேகங்களின் போக்கை வழிகாட்டுவதுமாக இருப்பதுபோல் தோன்றியது. திடீரென்று அவர் எழுந்து கை அசைக்க, கடல் அசைவற்று நின்றுவிடும்; பாறைகள் எழுந்து கூவும்; அனைத்தும் உயிர் பெற்று குரல் கொண்டு பல்வேறு மொழிகளில் பேசும் என்று உணர்ந்தேன்."

('On literature'-Maxim Gorky, pp. 329-330)

அவரது தனிப்பட்ட வாழ்வோ எல்லையில்லாதசோக நாடகம், லீயர் அரசனாக பரிதவிக்கும் நிலை. ஏராளமான சொத்துகளுக்கு வாரிசான அவர், உழைக்க வேண்டும், உழைப்பின் மூலம் கிடைப்பதைக் கொண்டு பூர்த்தி செய்துகொள்ள வேண்டும், மிஞ்சுவதைப் பிறருக்கு வழங்க வேண்டும், அன்பின் மூலமாக பரலோக சாம்ராஜ்யத்தைப் புவியில் நிர்மாணிக்க வேண்டும் என்ற முடிவுக்கு வருகிறார். நிலங்களையெல்லாம் ஏழைக் குடியானவர்களுக்குத் தந்துவிட முற்படுகிறார். மனைவியும் மற்றவர்களும் தடுக்கின்றனர். இப்படியாக அவரது சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் இடைவெளி உண்டாகிறது.இதைத் தாங்கிக் கொள்ள இயலவில்லை. இறுதியாக அச்சூழலிலிருந்து தான் வெளியேறிவிட முடிவு செய்து, 28.10.1910 நள்ளிரவில் தனக்குத் தெரிந்த விவசாயக் குடியானவரைச் சந்திக்க ரயிலில் செல்கிறார். பயணத்தின்போதே நிமோனியா காய்ச்சல் கண்டு எஸ்டபோவா ரயில் நிலையத்து நிலைய அதிகாரியின் அறையிலேயே இறந்துபோகிறார். கிளம்பும் முன் மனைவிக்கு எழுதிய குறிப்பு: "என் பிரிவு உன்னை வருத்தும். அதற்காக வருந்துகிறேன். இது தவிர வேறொன்றும் செய்ய இயலாதுஎன்பதைப் புரிந்துகொள்ள வேண்டும், நம்பவேண்டும். இந்த வீட்டில் என் நிலை தாங்க இயலாததாகிவிட்டது. மேலும் ஆடம்பர வாழ்வை ஒருபோதும் நடத்த முடியாது.... உனது 48ஆண்டு வாழ்வை என்னுடன் கழித்ததற்கு நன்றி. எனது குற்றங்களையெல்லாம் மன்னித்துவிடு. நானும் உனது குற்றங்களை–ஏதும் இருந்தால் –மன்னித்து விடுகிறேன்..."

வாழ்கையாயினும் மதமாயினும் கலையாயினும் அனைத்தும் மனிதனது கதிமோட்சத்துக்கு வழி வகுக்க வேண்டும் என்பது டால்ஸ்டாயின் அபிப்பிராயம். அவரது வாழ்வின் பிற்பகுதி மத–தத்துவ விசாரத்தில் கழிந்தது. சங்கரர், ராமகிருஷ்ணர், விவேகானந்தர் சிந்தனைகளை உற்சாகத்தோடு படித்திருக்கிறார். "நான் சங்கரரைப் படித்தேன். பிரபஞ்சத்தின் அடிப்படைகள், வாழ்க்கையின் சாராம்சத்தை விளக்கும் அவரது கருத்துகள் மிக நன்று. ஆயினும், அவரது ஒட்டுமொத்தமான போதனைகள் எனது போதனைகளை விடவும் குழப்பமிக்கன" என்று நாட்குறிப்பில் எழுதியிருக்கிறார். மனிதனது கதிமோட்சத்துக்கு உதவாத ஏதும் பயனற்றவை என்ற முடிவுக்கு வந்து ஷேக்ஸ்பியர், பீதோவன், ரஃபேல் படைப்புகளையெல்லாம் நிராகரிக்கிறார். தனது படைப்புகளையெல்லாம் நிராகரிக்கிறார். அவரது முடிவு சர்சைக்குரியது. ஆனால் அவரது நேர்மை ஆச்சரியமானது. அவரது போதனைகள், மனிதாபிமானம் மற்றும் சிந்தனைகளைப் பரிசீலித்துவிட்டு லெனின் மதிப்பிட்டார்: "முடியாட்சியை எதிர்த்த அவர், அஹிம்சை நெறியை மேற்கொண்டார்... புரட்சியிலிருந்து ஒதுங்கி இருந்தார். திருக்கோயிலை எதிர்த்த அவர், புதியதொரு நுட்பமான மதத்தைப் போதித்தார். நிலத்தை உழைப்போர்க்கு வழங்க வேண்டும் என்று விரும்பிய அவர், நிலப் பிரபுத்துவத்தையோ அதன் கருவியான அரசியல் சக்திகளையோ எதிர்க்க வேண்டும், போராட வேண்டும் என்று உணர்ந்ததில்லை. அவரது கொள்கை முரண்பாடுகள்

**"என் பிரிவு உன்னை வருத்தும். அதற்காக வருந்துகிறேன். இது தவிர வேறொன்றும் செய்ய இயலாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும், நம்பவேண்டும். இந்த வீட்டில் என் நிலை தாங்க இயலாததாகிவிட்டது. மேலும் ஆடம்பர வாழ்வை ஒருபோதும் நடத்த முடியாது.... உனது 48ஆண்டு வாழ்வை என்னுடன் கழித்ததற்கு நன்றி. எனது குற்றங்களையெல்லாம் மன்னித்துவிடு. நானும் உனது குற்றங்களை–ஏதும் இருந்தால் –மன்னித்து விடுகிறேன்..."**

தனிப்பட்ட அவரது வாழ்வில் மட்டும் ஏற்பட்டதல்ல. பல்வேறு வர்க்கங்களையும் பிரிவினரையும் கொண்ட ருஷிய சமுதாயத்தைத் தீர்மானித்த

## சா.தேவதாஸ்

வரலாற்று மரபுகள்,சமுதாயச் செல்வாக்குகள், சிக்கலான முரண்பட்ட சூழல்கள்– இவற்றின் பிரதிபலிப்பும் கூட". வாழ்வின் ஒவ்வொரு கணத்தையும் சிந்திப்பதிலும் எழுதுவதிலும் செலவழித்தவர் அவர். சமூகத்திடம் அவர் எதிர்பார்த்த அன்பும் மனிதாபிமானமும் தனது சொந்த வாழ்விலேயே அருகிப் போவதுகண்டு அல்லலுற்றவர் அவர். அதற்கு இறுதி காணத்துடித்தவர் அவர். நேர்த்தியான சிறுகதைகள், நீதிக்கதைகள், குறுநாவல், பாரதூரமான நாவல்கள், குழந்தைக் கதைகள் எனப் பலவிதமான படைப்புகளைத்தந்தவர் அவர்.

நன்றி:தினமணி

THAMPA
SOLICITORS
16 Welbeck Road, West Harrow
Middx HA2 ORW Tel: 081 422 8248
* CONVEYANCING * LITIGATION
* IMMIGRATION MATTERS * LAND LORD & TENANT
* LIQUOR LICENSING * PERSONAL INJURY
* WILLS & PROBATE * MATRIMONIAL MATTERS
LEGAL AID WORK UNDERTAKEN



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கலையை

11ம் பக்க தொடர்ச்சி

உருப்படிகள். எனின், தில்லானாவை வைத்துக்கொண்டு ஜதிஸ்வரத்தை விடுகிறோம். இப்படியே சப்தமும், வர்ணமும். சப்தத்தை விடுத்து வர்ணத்தை செய்கிறோம். கீர்த்தனம், பதம், ஜாவளி இவை ஒரு மாதிரியானவை. ஒன்றை செய்கிறோம்.

முழுமையாக செய்ய நாங்கள் தயார். அதைப்பார்க்க நீங்கள் தயாரா?

**ஆனால், பழியை முற்றிலும் ரசிகர்களிடம் சுமத்திவிட முடியாதல்லவா? கலைஞர்களுக்கும் சில பொறுப்புகள் இருக்கின்றனவே?**

நாம் ஆடுவது ரசிகர்களுக்காக. அவர்களை மனதில் வைத்திருக்க வேண்டும். அந்தக் காலத்தில் ரசிகர்களுக்காகவன்றி கோவில்களுக்காகவே ஆடினார்கள். அதனால்தான் சிருங்கார ரசமான உருப்படிகள் நாயகா, நாயிகா பாவத்தில் ஜீவாத்மா, பரமாத்மா அம்சத்தில் கர்ப்பக்கிருகத்தில் தாசி ஆடி, தன்னை அர்ப்பணிக்கும் வகையாக அமைந்தன.

எனவே இப்போ ரசிகர்களை நாம் அறிந்து அவர்களுக்கு ஏற்றாற்போல் தான் நமது நிகழ்ச்சிகளை அமைக்க வேண்டும்.

**கலாக்ஷேத்திராவினுடைய பிரபலமான ஒரு நர்த்தகியாக நீங்கள் இருந்தாலும் இசைவிழா காலத்திலே ஏன் சபாக்கள் அந்தப் பிரபல்யத்தை உங்களுக்கு அளிப்பதில்லை?**

எல்லா சபாவிலுமே நான் ஆடியிருக்கிறேன். நான் ஆடாத சபா எதுவும் சென்னையில் இல்லை. ஆனால் ஒவ்வோராண்டும் தொடர்ச்சியாகச் செய்திருக்க மாட்டேன். கலாக்ஷேத்திராவின் பருவகால கலைவிழாவும் அச்சமயத்திலேயே வருவதும் இதற்கு ஒரு காரணம்.

**நிருத்திய சூடாமணி விருதைப் பெறறிருக்கிறீர்களா?**

*1976 இலேயே பெற்றுவிட்டேனே!*

**ருக்மிணி அருண்டேல் உங்களுக்கு தனிப்பட்ட முறையில் சலுகைகள் எதனையும் கலாக்ஷேத்திராவில் அளித்தாரா?**

அதை ஒரு விட்டுக்கொடுக்கும் give & take கொள்கை என்று சொல்லலாம். நானும் அவர்களுக்காக எனது குடும்ப வாழ்வில் பலவற்றை விட்டுக் கொடுத்திருக்கிறேன். 40 வருட காலத்தில் ஒருநாள் கூட கிருஷ்ணவேணியினால் ஒரு நிகழ்ச்சி தடைப்பட்டோ அல்லது கெட்டோ போனதில்லை. அதுபோலவே தனிப்பட்ட முறையில் நான் எதைக் கேட்டாலும் அவர் இல்லை என்று சொன்னதும் இல்லை.

-அதுமட்டுமல்ல, மற்றையவர்கள் வருகிறார்கள், படிக்கிறார்கள், போய்விடுகிறார்கள். நான் போகவே இல்லையே? ஆற்றலிலும் அவர்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப இருந்தேன். அதனால் அதை அவர் செய்தார். அதுதான் காரணமே தவிர வேறொன்றுமில்லை.

-இந்தக் கேள்வியை நீங்கள் மட்டுமல்ல, பலர் என்னிடம் கேட்கிறார்கள்.

**அப்படியா? அப்படி ஒரு கேள்வி இயற்கையாகவே எழுகிறது.**

ஆமாம். அப்படி ஒரு பேச்சு பரவலாக இருக்கவே செய்கிறது. எல்லோருமே தங்களை நிலை நிறுத்திக்கொண்டு சென்று விடுகிறார்கள். அப்படியின்றி, என்னைப்போல் அங்கேயே இருந்தால் அவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்கலாம்.

**உங்களுடைய 40 வருடகால ஈடுபாட்டில் என்ன மாற்றத்தை நாட்டியத்துறையில் காண்கிறீர்கள்?**

மொத்தத்தில் நாட்டியம்பற்றி நிறைய பேசுகிறார்கள், படிக்கிறார்கள். ஆனால் நாட்டியம் என்பது கண்ணாரக் கண்டு அதில் ரசித்து- ஐக்கியமாகி- ஆத்ம அநுபவத்தோடு செய்யப்பட வேண்டும். வெறுமனே படிப்பதால்- எழுதுவதால்- பேசுவதால் அது வந்து விடாது. ஆனால் இப்போ அதுதான் அநேகமாக நடக்கிறது. ஆயிரம்தான் செய்தாலும் குருமூலம் கற்பதுபோல் நிச்சயமாக வாராது.

**அரங்கேற்றங்கள் பற்றி......**

அரங்கேற்றங்களின் தரமே குறைந்து விட்டது. அரங்கேற்றம் என்பது முடிவு அல்ல ஆரம்பம். இப்போது என்ன செய்கிறார்கள்? அரங்கேற்றம் செய்து 'முடித்து' விடுகிறார்கள். சின்ன 'கல்யாணம்' மாதிரி.

முன்னரெல்லாம் அரங்கேற்றம் என்றால் குரு சொல்ல வேண்டும். பாட்டு, நாட்டியம், நட்டுவாங்கம், நடன அமைப்பு என்று எல்லாம் தெரிந்தவரே குரு. அவருக்குத்தான் குரு என்ற ஸ்தானத்தைக் கொடுக்கலாம். அவர் நல்ல ஓர் அரங்கத்திலே தன்னுடைய சிஷ்யையை ஆட வைப்பார். அவர்கள் பார்த்து நன்றாக ஆடுகிறார் என்று சொல்ல வேண்டும்.இப்போ அப்படியா நடக்கிறது?

ஆரம்பத்திலிருந்தே நோக்கம் வேறாகவே இருக்கிறது. நாமும் 'உலகத்தோடு ஒட்ட வாழல்' தானே....திருக்குறள்.

**உங்கள் கலை வாழ்வில் உங்கள் கணவர் உங்களுக்கு உறுதுணையாக இருந்தவர். அவருடைய திடீர் மறைவு உங்களுக்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும்....**

ஆம், அவர் கணவராக மாத்திரமன்றி, நண்பராக, விமர்சகராக, தத்துவவாதியாக எல்லாமுமாகவே இருந்தார். ஒவ்வொரு நிமிடமும் அவர் நினைவாகவேயிருந்தாலும் கலை எனக்கு ஆறுதல் தருகிறது.

**லண்டனிலே நடனம் தொடர்பான ஈடுபாடுகளில் எதை அவதானிக்கிறீர்கள்?**

லண்டனின் இயந்திர வாழ்விலே அருமையாகக் கிடைக்கின்ற ஓய்வு நேரங்களில் தங்களுடைய பிள்ளைகளுக்கு கலைகளைப் போதிப்பதில் பெற்றோர்கள் கொள்ளும் அலாதியான அக்கறையை நான் பார்க்கிறேன்; பாராட்ட வேண்டும். பாலைவனத்திலே கங்கை நீருக்கு அலையாது, கிடைப்பதை நல்லபடியாக பயன்படுத்த வேண்டும். அதை அவர்கள் நன்கு தெரிந்திருக்கிறார்கள்.

**கடைசியாக, இளைய தலைமுறையினருக்கு நீங்கள் என்ன கூறுவீர்கள்?**

நான் கூறுவதா? நான் அப்படியொன்றும் பெரியவளில்லையே.

**இல்லை, நடனத் துறையில்...**

எதிலாகட்டும், என்னைவிட எத்தனையோ பெரியவர்கள் இருக்கிறார்கள்.எனினும் ஒன்றைச் சொல்வேன். கலையைக் கற்கும் போது முதலில் கலையைக் கலைக்காக கற்க வேண்டும். பின்னர் அதனைத் தொழிலாகக் கொள்வது அவரவர் விருப்பம். எடுத்த மாத்திரத்தே இதனால் எனக்கு என்ன லாபம்? என்ற நோக்கத்தோடு கற்க வேண்டாம். ஆசையோடு, அநுபவித்து, அர்ப்பணத்தோடு பயிலுங்கள். ஆழ்கடலில் மூழ்குங்கள்; முடிந்தால் முத்தை எடுங்கள். இல்லாவிட்டால் கிழிஞ்சலையாவது எடுங்கள். மூழ்கு முன்னரே முத்தை எடுத்து விடுவீர்கள் என எண்ணாதீர்கள். இதுதான் நான் கூறுவது.

## நம்பிக்கை

துணை பிரிந்த குயிலொன்றின்
சோகம் போல
மெல்ல மெல்ல
கசிகிறது ஆற்று வெள்ளம்.
காற்றாடும் நாணலிடை
மூச்சுத் திணறி
முக்குளிக்கும் வரால் மீன்கள்.
ஒரு கோடை மாலைப்பொழுது
அது.
என்ன ருகே
வெம் மணலில்
ஆலம்பழக் கோதும்
ஐந்தாறு சிறு வித்தும்
காய்ந்து கிடக்கக்
காண்கின்றேன்
என்றாலும்,
எங்கோ வெகு தொலைவில்
இனிய குரல் எடுத்து
மாரி தன்னைப் பாடுகிறான்
வன்னிச் சிறான் ஒருவன்.

வ.ஐ.ச.ஜெயபாலன்.

# வழிகாட்டி விநாயகர் பிரதிஷ்டை

தெற்கு லண்டனின் பிரசித்தி பெற்ற விம்பிள்டன் இந்து ஆலயத்தின் ஆலய வாயிலருகே. வழிகாட்டி விநாயகர் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார். இதற்கான வைபவங்கள் கடந்த மாதம் 2ஆம் தேதி ஆரம்பித்து, 5ஆம் தேதி மஹா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. வழிகாட்டும் விநாயகரை வழிபட்டு வினைபோக்க ஆயிரத்துக்கும் அதிகமான பக்தர்கள் அங்கு கூடியிருந்தார்கள்.

வழிகாட்டி விநாயகர் வழிபாடு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே தென் இந்தியாவில் ஆரம்பித்து பாக்குநீரிணைக்கு அப்பால் யாழ்ப்பாணத்துக்கும் இலங்கையின் மற்றைய பகுதிகளுக்கும் பரவியதாக பழைய இந்து சமய நூல்களிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.ஆலயத்ததுக்குச் செல்பவர்கள் நுழை வாயிலிருக்கும் இவ்வழிகாட்டி விநாயகருக்கு நல்லெண்ணெய் சாத்தி வழிபட்டு ஆலயத்துள் செல்லலாம். இத்தகைய ஒரு பெருவாய்ப்பும் பேரருளும் லண்டனில் முதன்முறையாக நம்மவருக்குக் கிட்டியிருக்கிறது.

கும்பாபிஷேக வைபவங்களை விம்பிள்டன் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ வாகீஸ்வர குருக்கள் தலைமையில் விக்னேஸ்வரக் குருக்கள், செல்வராஜ குருக்கள், ஜெகதீஸ்வர குருக்கள் ஆகியோர் நிகழ்த்தினர்.

டாக்டர் கே.சி.ராஜசிங்கம்

**விபுலானந்த அடிகளார்!**

"மீன்" பாடும் திருநாடு
"மட்டுநகர்" எனும் நாடு!
"விபுலானந்த அடிகளார்"
அவதரித்த பொன்நாடு!
"யாழ்நூல்" தனைந்தந்து
சிறப்புற்றார் தரணிதனில்!

**-வண்ணையூரான்-**
**பாரிஸ்**

VASAN LITHO PRINTER
We are offering Four Colour Offset
Litho Printing, Design, Typesetting and Desk Top Publishing
using quality equipment such as
ORIGINAL HEIDELBERG
Printing Machines
QUALITY, SPEED & COMPETITIVE RATES
Business Cards, Letterheads, Complement slips,
N.C.R Forms, Leaflets, Invoices
Wedding Cards, Menu Cards, Show Tickets,
Labels, Envelopes, Calendars,
Programme Brouchures, Magazines and Books.
ALL PRINTING SERVICES UNDER ONE ROOF
60 P PITCAIRN ROAD, MITCHAM, SURREY CR4 3LL
TEL: (081) 640 4366




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# SHANKAR

## NEW AVM
## CLASSICAL MUSIC CD COLLECTION
## AVAILABLE FROM US





**WHOLESALE OR RETAIL**

**OPEN 7 DAYS A WEEK**




**FROM 9.30 A.M. TO 10.30 P.M**




## SHANKAR & CO LTD

231 NORTHOLT ROAD, SOUTH HARROW, MIDDLESEX. U.K..

TEL: 081-426-8960 FAX: 081-861 5248

GALA ADS

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யார் இந்த யாழ்ப்பாணத்தான்?

பேராசிரியர் கா.சிவத்தம்பி

**யாழ்ப்பாணத்து மனிதனின் கிடுகுவேலித்திரை அவனை மற்றவர்களிடமிருந்து பிரித்துவைக்கிறது**

இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூக வாழ்வில் "யாழ்ப்பாணத்து மனிதன்" என்பவன், தனிப்பட்ட கருத்துருவாக- கோட்பாடாகக் காணப்படுகிறான். இலங்கையின் பிற மக்கட் குழுவினரிலிருந்து சுலபமாகப் பிரித்தறியக் கூடிய பண்புகளையும், குணநெறிகளையும் கொண்டவனாக இவன் கருதப்படுகின்றான். இலங்கைத் தமிழரது சமீபகால அரசியல், சமூக வாழ்க்கை காரணமாக,இவனது தனித்துவத்தையும், மற்றவர்களினின்று பிரிநிலைப்பட்டு நிற்கும் பண்பையும் அழுத்திக்கூறும் பண்பு இப்பொழுது சிறிது குறைந்துள்ளதெனினும், சமூகவியலாளர் நோக்கில் இவன் தனிப்பட்டவொரு "பிரகிருதி"யாகவே இன்னும் உள்ளான் என்பதை எவரும் மறுக்க முடியாது. யாழ்ப்பாணத்து மனிதனின் கிடுகு (வேலி)த் திரை அவனை மற்றவர்களிடமிருந்து பிரித்து வைக்கின்றது என்ற குற்றச்சாட்டு இன்னும் முற்றாக நிராகரிக்கப்படவில்லை.

இந்த உண்மையை உணர்ந்து அந்த "மனிதனை" சமூகப் பிராணியை அவன் இயற்கைச் சூழல் எனும் பின்னணியில் வைத்து ஆராய்வது முக்கியம்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக யாழ்ப்பாணத்து மனிதனின் வாழ்க்கை முழுவதையும் சமூகவியல், மனிதவியல் நெறிப்படி நோக்கிக் கண்ட ஆராய்ச்சிகள் மிகச் சிலவே. மனிதவியல் நெறி சார்ந்த ஓரிரு ஆராய்ச்சிகள் செய்யப்பட்டுள்ளனவெனினும் அவை பூரமானவையன்று. உள்ளவைதானும் எல்லோரும் படித்தறியக் கூடியனவாக இல்லை. யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு விளங்கும் அரசியற் கட்சிகள் கூட இத்தகைய முயற்சியை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவில்லை. அத்தகைய ஆராய்ச்சிகள் அவ்வப்பயில் நெறிகட்கியையச் செய்யப்பட வேண்டியவை (சிங்கள மக்களைப் பற்றி இத்தகைய ஆராய்ச்சிகள் பலமேற்கொள்ளப்பட்டுள்ளன).

## மனக்காழ்ப்பு

இலங்கைத் தமிழர் எனும் பொழுது இலங்கையில் வாழும் தமிழ் இனத்தவர் எல்லோரையும்–கிழக்கு மாகாணத்தில் வாழ்பவர்கள், மேற்கு வடமேற்கு மாகாணங்களில் வாழ்பவர்கள், பிற மாகாணங்களில் வாழ்க்கை நடாத்தும் தமிழர்கள் – குறிப்பிடப் படவேண்டுமென்பது உண்மையெனினும், இந்நாட்டில் வாழுகின்ற பெரும்பான்மையினத்தவராகிய சிங்கள மக்களைப் பொறுத்தமட்டில், இலங்கைத் தமிழர் என்ற கோட்பாடு இலங்கையின் வடபாகத்தில் வாழும் தமிழர்களையே குறிப்பிடுகின்றது என்பது யாவரும் அறிந்த உண்மையே.இதன் காரணமாக கிழக்கு மாகாணத் தமிழரிடையே நிரந்தரமான மனக்காழ்ப்புஉண்டென்பதும் உண்மையாகும். சிங்கள மக்களின் இக்கருத்து எத்துணை பொருத்தமானது என்பது பிரச்சினையன்று. கருத்து இதுவே என்பதுதான் முக்கியம்.

சிங்களமக்கள் தாம் பெரும்பான்மையாக வசிக்கும் இடங்களிலுள்ள தமிழர்களைக் கொண்டே இக்கருத்தினைப் பெற்றுள்ளனர். இக்கருத்து இந்நூற்றாண்டின் மூன்றாம், நாலாம் சகாப்தம் முதல் நிலவி வருகின்றது. மொழியால், நடையுடை பாவனைகளால், முயற்சி நெறிகளால் வேறுபட்ட தமிழரைச் சிங்கள மக்கள் சுலபமாக இனங் கண்டு கொண்டனர். சிங்கள மக்கள் அறிந்த யாழ்ப்பாணத்தவர் இருதரப்பட்டவர்கள். ஒருகுழுவினர் சிங்களப் பிரதேசங்களில்வியாபாரம் செய்தவர்கள்: செய்பவர்கள். (இப்போது இத்தொகை மிக மிக அருகியுள்ளது): மற்றையோர் அரசாங்க உத்தியோகத்தர்கள். உயர்நிலை அதிகாரிகளாக மாத்திரமல்லாது, பொது மக்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய நடுநிலை அதிகாரிகளாகவும் யாழ்ப்பாணத் தமிழர்கள், சிங்களப் பிரதேசங்களிற் கடமையாற்றி வந்தனர். சுகாதாரப் பரிசோதகர், ஓவர்சியர், புகையிரத நிலைய அதிபர், தபாற்கந்தோர் அதிபர் போன்ற பதவிகள் வகித்து வந்தோர் பலர். பொதுசனத்தொடர்புடைய பதவிகளை வகித்து வந்தமையால், இவர்கள், கிராமப் புறச்சிங்கள மக்களிடையே அந்நிய அரசாங்கத்தின் பிரதிநிதிகள், ஆட்சியின் வீசுகரங்கள் என மதிக்கப் பட்டமை ஆச்சரியமான ஒன்றன்று. பதவிநிலை காரணமாக மாத்திரமல்லாது,பதவியை வகித்தவர்கள், தாம் அரசாங்கத்தின் கீழ்ப்படிவுள்ள ஊழியர்கள் என்ற எண்ணங் காரணமாக தமது பதவி அதிகாரங்களைக் கையாண்ட முறையும், அவ்வதிகாரங்களால் தமது "சொந்த நிலையை" முன்னேற்றக் கொண்ட முறையும் இவர்களை மேலும் அம்மக்களிடமிருந்து அகலப்பிரித்திருந்தது. யாவற்றுக்கும் சிகரமாகஅமைந்தது இவ்வுத்தியோகத்தர்கள், வியாபாரிகளின் பண்பாட்டு வேறுபாடே. தாம் தொழிலாற்றும் பிரதேச வாழ்க்கையுடன் இணைந்து செல்ல முடியாத அளவுக்கு மொழி, மதம், கண்ணோட்டங்கள் இவர்களைப் பாராதீனப்படுத்தி வைத்திருந்தன. இவற்றால் அடிநிலைச் சிங்கள மக்கள் இவர்களை எப்பொழுதும் தம்மிலிருந்து வேறுபட்டவர்களாகவே கருதினர். இவை காரணமாக, இவர்கள் தங்கள் நலனில் ஆர்வமுடையவர்களல்லர் என்றகருத்து அவர்களிடையே வேர்விட்டு வளர்ந்தது.

## அவர் யாழ்ப்பாணத்திலிருந்து வருகிறார்

மத்திய நிலைச்சிங்கள மக்களைப் பொறுத்தமட்டில், யாழ்ப்பாணத் தமிழரைப் பற்றிய கருத்துப் பதிவுக்கு காரணமாக இருந்தவர்கள் அரசாங்க உத்தி யோகத்திலிருந்த தமிழர்களே. இந்நிலையில் ஆங்கில மொழி ஓரளவு பாலம் அமைக்கும்தொடர்பாக இருந்ததெனினும், முன் கூறிய பண்பாட்டு வேறுபாடு யாழ்ப்பாணத்தவர்கட்குரிய ஒதுங்கு நிலை வாழ்க்கையும் அவர்களை நீருள் எண்ணெய் போன்று பிரித்துக் காட்டியது. 1938, 1948ம் சகாப்தங்களில் இவ்வுணர்வு வேறுபாடு இருந்த அளவுநிலையினை வன்றோல் எழுதிய "அவர் யாழ்ப்பாணத்தில் இருந்து வருகிறார்" (He comes from Jaffna), செனற்றர் (Senator) முதலிய நாடகங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். ஆங்கிலேய ஆட்சியில் உத்தியோகம் பெறுவதற்கு வேண்டிய ஆங்கிலக் கல்வி வச்தி யாழ்ப்பாணத் தமிழருக்கு நன்கு வாய்த்திருந்தமையால் தமிழர்களைப் பற்றிய ஒரு விரோத உணர்வு அக்காலத்தில் இலைமறை காயாக நிலவி வந்தது. இன வாரிப் பிரதிநிதித்துவ வழி வளர்ந்து வந்த சனநாயக ஆட்சி முறை மத்திய தர நிலையில் சிங்கள மக்கள் தமிழ் மக்களைப் பிரித்து நோக்கும் பண்பையும் இறுதியில் இனவாதக் கோஷத்தையும் வளர்த்தது. ஆங்கிலக் கோமற்கோ தாமென்றும் மீளாவாளாய் அவர் தம் கொய்மலர்ச் சேவடியினைக் குறுகி நின்று கொண்டு, அந்தப் பலத்தால் நாம் ஆர்க்கும் குடியல்லோம், சிங்கள மக்களை அஞ்சோம் என்ற ஏகாதிபத்திய தாசானுதாச நோக்கு தமிழ் உத்தியோகத்தவர்களை சிங்களவவரிடமிருந்து பிரித்தது.

## ஐம்பதுக்கைம்பது

சுதந்திரத்திற்கு சிறிது முற்பட்ட காலத்தில் எழுப்பப் பெற்ற "ஐம்பதுக்கைம்பது" கோஷம் சுதந்திர இலங்கையில் சிங்கள மக்கள், தமிழர்- யாழ்ப்பாணத்தார் பாற்கொண்ட நோக்குக்கு அடித்தளமமைத்தது. சிங்கள மக்கள் தமிழரின் அரசியல் நோக்கினை நன்கு விளங்காமலிருந்திருக்கலாம். ஆனால் ஆங்கிலமறியாத சிங்களமக்களுக்கு எமது நிலையை நாமும் என்றும் விளக்கவில்லை. அரை நூற்றாண்டு காலமாக இனவாரிஅரசியலுக்குப் பழக்கப்பட்ட மத்தியதரவர்க்கத்தினர், இனக் கோஷங்களையே அரசியற் கோரிக் கைகளாக்கினர். ஐம்பதுக்கைம்பது போய்த் தமிழரசாயிற்று.அவர்களிடையேயும் அது தனிச் சிங்கள கோரிக்கையாயிற்று.சுதந்திரத்திற்குப் பின் வந்த தேசிய எழுச்சிகளின்அடிப்படை உண்மையை உணராது ஏகாதிபத்திய கால்த்திற்கேற்ற சலுகைகளையே நாம் வலியுறுத்த வலியுறுத்தச் சிங்கள மக்களிடையே, தாம் என்றென்றும் பிறத்தியார்தான் என்ற எண்ணம் வளர்ந்தது. முந்திய காலத்தில் நிலவி வந்த பண்பாட்டு வேறுபாட்டு உணர்வு, இந்த அரசியல் வேறுபாட்டு உணர்வுடன் சங்கமித்து இனப் பிரிவினை வாதத்துக்கு இடமளித்தது. சிங்கள மக்களின் நோக்கில்,தமிழர்கள் சிங்களவருக்குரிய நாட்டை அவர்களிடமிருந்து பறித்துக் கொள்ள முயலுபவர்களாயினர். தென்னிந்தியாவின் அண்மையும் மொழியொருமையும் இப்பயத்தை அதிகரித்தது. யாழ்ப்பாணம் என்பது எங்கோ தூரத்தேயுள்ள இடமென்ற எண்ணம் படித்த சிங்கள மக்களிடையே கூட நிலவுவதை இன்றும் காணலாம். மொத்தப் பயனாகச் சிங்கள மக்கள் யாழ்ப்பாணத் தமிழரிலிருந்து பராதீனப்பட்ட நிலையினை யடைந்தனர். அடிநிலைச் சமுதாய அமைப்பில், பண்பாட்டு நோக்கில் பல ஒற்றுமைகளிலிருந்தும் இவ்வேறுபாட்டுணர்வு வளர்ந்தது. சுருக்கமாகக் கூறின், சிங்கள மக்களிடத்தே யாழ்ப்பாணத்தாரைப்பற்றி அரசியற் சந்தேகமும், குணநல ஒதுங்கு நிலையும் காணப்படுகின்றது.

சிங்கள மக்களின் நிலை இவ்வாறிருக்க இந்நாட்டில் உள்ள யாழ்ப்பாணத்தாரல்லாத பிற தமிழ் பேசும் இனத்தினரின் நிலையை ஆராய்வோம். இவர்களுள் முஸ்லீம்கள் முக்கியமானோர். இலங்கை முஸ்லீம்கள் மொழியால் ஒற்றுமைப்பட்டவர்களெனனினும் மதத்தால், பண்பாட்டால் வேறுபட்டவர்கள். கிழக்கு மாகாணம், தென் மாகாணம், மத்திய மாகாணம், மேல் மாகாணம் ஆகிய இடங்களிலே இவர்கள் பெரும்பான்மையாகக் காணப்படுகின்றனர். வடக்கில், மன்னாரிலும் யாழ்ப்பாணத்திலும் குறிப்பிடத்தக்க முஸ்லீம் சனத்தொகையுண்டு. முஸ்லீம்கள் இவ்வாறு பரவலாகக் காணப்பட்டாலும் தென் மேல் மத்திய மாகாணங்களில் வாழும் முஸ்லீகளே இந்நாட்டின் முஸ்லீம் வெகுசன அபிப்பிராயத்தை உருவாக்குபவர்களாகவும், வெளியிடுபவர்களாகவும் காணப்படுகின்றனர். இம்முப்பெரும் பிரிவுகளில் வாழும் முஸ்லீம்களுடன் தொடர்பு கொண்டுள்ளவர்கள் பெரும்பான்மை யாழ்ப்பாணத் தமிழாசிரியர்களே. முஸ்லீம் பிள்ளைகளை முஸ்லீம் ஆசிரியர்களே பயிற்றவேண்டுமென்ற கோசத்தின் காரணமாக இவர்கள் தமிழாசிரியர்களை "யாழ்ப்பாணத்து மாஸ்ரர்மாரை" படிப்படியாகத் தம் பகுதிகளில் குறைக்க வேண்டுமென்றனர். தங்களுக்குரிய கல்வி வசதிகள் பெருக்கப்பட்டுத் தாமும் அரச உத்தியோகங்களில் அமர வேண்டுமெனக் கோரினர். அவர்களிடத்தும் வளர்ந்து வரும் மத்தியதர வர்க்கத்தினரே இக்கோஷங்களைக் கிளப்பினர். தங்கள் பகுதிகளில் கடமையாற்றிய ஆசிரியர்களைப் பதச்சோறாக வைத்து இவர்கள் யாழ்ப்பாணத்தவர்களை மதிப்பிட்டனர். பல ஆசிரியர்களது சேவைகள் நன்கு மதிக்கப் பட்டதெனினும், பொதுவில், இவர்கள் யாழ்ப்பாணத்தவர்கள் தம் முன்னேற்றத்துக்குத் தடையானவர்களென்றே கருதத் தொடங்கினார்கள். இக்கருத்து சரியானதா என்பது பற்றி நாம் இங்கு ஆராய வேண்டியதில்லை. அத்தகைய கருத்து நிலவிற்று என்பதை அறிந்து கொள்வதுதான் முக்கியம். பண்பாட்டு வேறுபாடு, ஒதுக்கல் நிலை வாழ்வு, முஸ்லீம்களின் தமிழ்த்தரம் பற்றிய யாழ்ப்பாணத்து மாஸ்ரர்மாரின் கருத்து முதலியன இதற்குக் காரணமாக அமைந்தன. சரியோ பிழையோ வைரமான கருத்து ஒன்று நிலவத் தொடங்கிற்று. முஸ்லீம் மக்களின் இக்கருத்துக்கு அரசியற் காரணங்களும் உள. எவ்வாறாயினும் எண்ணிய கருத்து உண்மையென்பதை மறுத்து விட முடியாது.

தமிழ் பேசும் மக்களின் பண்பாட்டில் வேறுபட்ட குழுவினரின் கருத்து இவ்வாறிருக்க, தமிழினத்தவர் என்ற வரைவிலக்கணத்துக்குள் வரும் பிற தமிழர்கள் யாழ்ப்பாணத்தவரைப் பற்றி என்ன நினைக்கின்றார்கள் என்பதைக் பார்ப்போம். இத்தகைய பிரிவினருள் முதலில் இடம் பெற வேண்டியவர்கள் மலையகத்து தமிழராகிய தோட்டப் பகுதியினர். இவர்களுடன் தொடர்பு கொண்ட யாழ்ப்பாணத்தவகளுள் முக்கியமானவர்கள் தோட்டப் பாடசாலை ஆசிரியர்களும், தோட்டங்களிற் கடமையாற்றுபவர்களுமே. அங்கொருவர் இங்கொருவராகச் சில யாழ்ப்பாணத்தவர்கள் தோட்டத் துரையாகவோ, "சின்னத் துரை" யாகவோ இருக்கின்றார்கள். எனினும், வணிக விவசாயத்தின் வர்க்க அடிப்படை காரணமாக அவர்களது வாழ்க்கை தோட்டத் தொழிலாளரது அன்றாட வாழ்க்கைக்கு அப்பாற்பட்டதாகவே இருக்கின்றது. தொழிலாளரது வாழ்க்கையுடனிணைந்து காணப்படும் யாழ்ப்பாணத்தார் பாடசாலை ஆசிரியர்தான். தோட்டப் பகுதியினர் தமது ஆசிரியரின் தன்மை, நோக்கம் பற்றி எத்தகைய மதிப்பீட்டினை வைத்திருக்கின்றார்கள் என்பதை அஞ்சலியில் வெளிவந்த "மாறுதல்கள்" எனும் தொடர்கதையில் வரும் குறிப்பொன்று துலக்கமாக வெளிக்காட்டுகின்றது. "ஒரு நூறு நூற்றைம்பதாவது ( பிள்ளைகள்) வந்தால், இதை ட்றிபள் செக்ஷனாக்கி இன்ஸ்பெக்டரை " றெக்கமண்ட்" பண்ணச் சொல்லி எலிமண்டறி ஸ்கூல் லீவிங் சேர்டி பிக்கட்டுடன் இருக்கும் மனுஷியை பிடித்துப் போடலாம், என்று ஆசிரியர் அங்கலாய்த்துக் கொண்டு கிடக்கும் பொழுது...( அஞ்சலி, ஆகஸ்ட் 71 இதழ், பக்.11) ஆசிரியர் பாடசாலைக்குச் செய்ய முனையும் முன்னேற்றங்கள் எவ்வாறு சுய நோக்குடன் இணைந்து உள்ளன என்பதை இந்த மலையகத்து நாவலாசிரியர் நன்கு சித்தரிக்கின்றார். யாழ்ப்பாணத்தார் தம்முடைய நன்மைக்காகவே எதையும் செய்பவர்கள் என்ற எண்ணம் மலையகத்து மக்களிடையேயும் வேரோடியுள்ளது. அரசியற்றுறையிலும் யாழ்ப்பாணத்தார் தம்மைக் கைவிட்டு விட்டதாகவே மலையகத்தமிழ் மக்கள் நம்புகின்றனர்.

## யாழ்ப்பாணிகள்

இந்திய வம்சாவளியினரான தமிழர் இத்தகைய கருத்தைக் கொண்டிருக்க, நிரந்தர இலங்கைத் தமிழ்ப் பிரசைகளான கிழக்கு மாகாணத் தமிழர்களுடைய நோக்கம் வேறுபாடுடையதன்று. கிழக்கு மாகாணத் தமிழர்கள் வடபகுதித் தமிழர்களுடன் அந்நியோன்னியப் பிணைப்புக் கொண்டவர்களல்லரென்பது ஊரறிந்த உண்மை. "யாழ்ப்பாணிகள்" என்ற பதப்பிரயோகத்தின் உணர்ச்சிப் பகைப்புலத்தின் ஆழத்தை நாம் மறந்து விடக்கூடாது. இலங்கைத் தமிழர்கள் என்ற முறையில் தமக்குரிய சில உரிமைகள், சலுகைகளைத் தாம் அனுபவிக்க முடியாத அளவுக்குத் தம்மை யாழ்ப்பாணத்தவர் தள்ளி வைத்துள்ளனர் என்ற விரக்தியுணர்வு மட்டக்களப்புத் தமிழ் மக்கள் பலரிடையே காணப் படுவது உண்மை. 1956க்குப் பின் இலங்கையின் அரசியல் அரங்கில் ஏற்பட்ட மாற்றங்கள் யாழ்ப்பாணத்தவரையும் கிழக்கு மாகாணத்தவரையும் இணைக்க உதவியுள்ளது உண்மையெனினும் மேற்கூறிய கருத்து தொடர்ந்து நிலவுகின்றது என்பது பலர் வெளியே எடுத்துச் சொல்ல விரும்பாத உண்மையாகும். அரசாங்க ஊழியர் கள், வர்த்தகர்கள், முதலியோரே இப்பகுதி மக்களுடன் முக்கிய தொடர்பு கொண்ட யாழ்ப்பாணத் தவராவர். வடபகுதித் தமிழருக்கும் இப்பகுதிகளுக்கு அரசியலில் ஒருமைப்பட்ட கருத்தில்லை என்பதை பொதுத் தேர்தல்கள் பலமுறை நன்கு எடுத்துக் காட்டியுள்ளன. இங்கும் நாம் யாழ்ப்பாணத்தார் பற்றிய கருத்தின் நியாய அநியாயங்களை ஆராய வேண்டியதில்லை: கருத்து உள்ளது எனும் உண்மையே முக்கியமானதாகும்.

இவ்வாறு பார்க்கும் பொழுது வடபகுதியில் வாழும் தமிழர்கள் மாத்திரமே தனியொரு குழுவினராகக் கருதப்படுகின்றனர் என்ற எண்ணம் தோன்றலாம். ஆனால் நிலமை அதுவன்று. வட பகுதியிலுள்ள வன்னிப்பகுதிகளிலும் யாழ்ப்பாணத்தவருக்கெதிரான ஓர் உணர்வு உண்டு. வன்னிப்பகுதியின் வளத்தை யாழ்ப்பாணத்வர்கள் சூறையாடு

(18ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கலாச்சார பாலமாக விளங்கிய சுவாமி விபுலானந்தர்

(நமது நிருபர்)

"அந்நியரின் ஆதிக்கத்தால் அழிவுற்ற நிலையிலிருந்த தமிழையும் தமிழ்க் கலாச் சாரத்தையும் பாரம்பரிய பிரதேசத்திலிருந்து பாதுகாக்கவும் வளர்க்கவும் அரும்பாடுபட்டு வந்த சுவாமி விபுலானந்தர், பல துறைகளிலும் ஈடுபட்டு பணியாற்றினார்.

வடக்கில் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றியபோது யோகர் சுவாமிகள் தொடர்பு ஏற்பட்டது. இளைஞர் காங்கிரஸ் தலைவராக இருந்தார். யாழ் வந்த மகாத்மா அடிகளை வரவேற்றார். நாவலர் சென்ற வழியில் தமிழையும் கலாச்சாரத்தையும் வளர்க்க முற்பட்டார். பல இடங்களில் பரந்து பணியாற்றி வடக்கிற்கும் கிழக்கும் கலாச்சார பாலம் அமைத்தார் சுவாமி விபுலா னந்தர்" இவ்வாறு மட்டக்களப்பு முன்னாய் இணை அரசாங்க அதிபரும், விபுலானந்தரிடம் ஆரம்ப கல்வியை ஆரம்பித் தவருமாகிய திரு சங்காரவேல் தவத்திரு விபுலானந்த அடிகளின் நூற்றாண்டை முன்னிட்டு செ.யோகநாதன் எழுதிய "இன்று கேட்கும் விபுலானந்தர்" நூல் வெளியீட்டு விழாவில் வாழ்த் துரை வழங்கும்போது குறிப் பிட்டார். நூல் வெளியீட்டு விழா சுடரொளி வெளியீட்டு கழகத்தினால் லண்டன் மனோப்பாக் தமிழ் கவுஸ் மண்டபத்தில் நடைபெற்றது. மேற்படி விழாவிற்கு கழகத் தலைவர் திரு க.ஜெகதீஸ்வரன் தலைமை வகித்தார். மேற்கு லண்டன் பாடசாலை அதிபர் கலாநிதி ஆர்.நித்தியானந்தன் அவர்கள் குத்துவிளக்கேற்றி விழாவினைத் தொடக்கி வைத் தார். திருமதி மகாதேவா அவர்களின் தமிழ் வணக்கத்தைத் தொடர்ந்து திரு ஐ.தி.சம்பந்தன் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு சம்பந்தன் தமது வரவேற் புரையில்- 'கதிர்காமம் முதல் கயிலாயம் வரை சென்று பணியாற்றிய அடிகளாரை ஆய்வ தும், அறிவதும், இன்றைய தமிழரின் கலாச்சார வாழ்வுக்கும் வளத்துக்கும் உந்து சக்தியாக அமையும்.

ஏனெனில் தமிழியல், அறிவியல், வாழ்வியல், இசையியல் துறைகளிலுள்ள பல குறைகளை நீக்குவதற்கான

வரிவகைகளை அன்று கூறிய அடிகளாரின் குரல் இன்றைக்கு ஏற்றதாய், அவசியமற்றதாய் இன்றும் ஒலித்துக் கொண்டிருக் கிறது, என்றார்.

சுவாமி விபுலானந்தர் அவர்களுடன் நெருங்கிப் பழகிய திரு அடக்கல்முத்து சிறப்புரை ஆற்றினார்.

விபுலானந்தர் ஆக்கிய யாழ் நூல் பற்றி விளங்கிக்கொள்ள முடியாத பலர் இது யாழ்ப்பா ணத்தைப்பற்றிய நூல் என்று கருதினர். யாழ் நூலின் தத்துவத்தை பலர் புரிந்து கொண்ட பின்னர், அது இசைக்கருவியின் ஆய்வு என்பதை அறிந்து கொண்டனர் என்றார். விபுலானந்தரின் மாண வனாகவிருந்த முதுதமிழ்ப் புலவர் நல்லதம்பியின் புதல்வரான புலவர் சிவானந்தன் நூல் வெளியீட்டுரை நிகழ்த்தினார். "இன்றைய காலத் தின் தேவைகளைப் பூர்த்தி செய்வ தற்கு ஏற்ற கருத்துக்களை இன்று கொண்டிருக்கும் அடிகளாரின்



சிந்தனைகளை இன்றைய இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ள இந்நூல் மிகப்பயனுள்ளதாக அமைந்துள்ளது என்றார்.

திரு பற்றிமாகரன் நூல் ஆய் வுரையின் போது; அடிகளாரின் அரும்பணிகளை அனைவரும் இலகுவில் அறிந்து கொள்ள பல்வேறு விடயங்களை பல தலைப்புகளில் திரு செ.யோகநாதன் ஆய்வு செய்துள்ளார். அடிகளால் எழுதிய நூல்கள், கட்டுரைகள், சொற்பொழிவுகள், நாடகங்கள் பற்றிய விபரங்களும் நூலில் இடம்பெற்றிருப்பதாக குறிப் பிட்டார்.

நூலின் முதற்பிரதியை சைவ முன்னேற்ற சங்கத்தலைவர் திரு சி.சிதம்பரப்பிள்ளை பெற்றுக் கொண்டார்.

## செத்துப்போன கவிதை

அடர்ந்த காடு இருபுறமும்
குளிர்ந்த காற்று
நீண்ட அந்தச் சாலையில்
காரில் நான் மட்டும்
கவிதைக்கு
வார்த்தைகள் தேடி-
அவசரமாய்க் குறுக்கே வந்த
அந்த அணில்
அறிந்திருக்கவில்லை
சாலை விதிகளை-
கண்ணிமைக்கும் நேரத்தில்
குருதி கக்கி
குற்றுயிராய்த் துடித்து
சலனமற்றுப் போனது
என்கவிதை
என்றைக்குமாய்.

-வெ.அனந்த நாராயணன்
நன்றி:கணையாழி

# யார் இந்த

(17ம் பக்க தொடர்ச்சி)

கின்றனர் என்றவொரு அபிப்பிராயம் அப்பகுதியில் நிலவுகின்றது என்ப தும், அவ்வுணர்வைப்பயன்படுத்தி அங்கு வாழுகின்ற யாழ்ப்பாண மக்களை அகற்றுவதற்கான முயற்சி கள் மேற்கொள்ளப்பட்டன என்பதும் இன்று எம்மிற்பலர் குறிப்பிடப்பட விரும்பா உண்மையாகும்.

இவ்வாறு இலங்கையில் வாழும் ஒவ்வொரு பிரிவினரும் யாழ்ப்பாணத் தவரைக் குற்றஞ்சாட்டுகின்றனர். இவற்றுக்கிணையாக யாழ்ப்பாணத் தவர்களும் மேற்கூறிய பிரிவினர் ஒவ்வொருக்கெதிராகவும் கூறும் குறைகள் உள்ளன. ஆனால் அவ்வப் பிரிவினரைப் பற்றி நாம் அவற்றை எடுத்துக் கூறவோ ஆராயவோ வேண்டிய அவசியமில்லை.

ஆகவே, நாம் இப்பொழுது யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் வந்து விடுகின்றோம். குடாநாட்டில் வாழ் பவர்களே உண்மையான யாழ்ப் பாணத்தவர்கள் என்ற நிலையை எய்தி விடுகிறோம். இது உண்மை யான நிலைமையா என்பதை இனி ஆராய வேண்டும்.

# உங்கள் ராசிபலன் எப்படி?

சோமசன்மா

## மேடம்

பலவித தொல்லைகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்தாலும் சமாளித்துக் கொள்ளும் தைரியம் கிடைக்கும். பணவரவு தாமதமா கும். உடன் பிறப்புக்களின் உதவி கிடைக்கும். பிரயாணத்தைத் தள் ளிப்போடவும். அயல்நாட்டிலிருந்து செய்தி வரட்டும். குடும்ப நிலை சமனாக இருக்கப்பார்த்துக் கொள் வது நல்லது. எழுத்தாளருக்கும் கலைஞருக்கும் மகிழ்ச்சி தரும் நாட்கள் இவை.

அதிஷ்ட எண்:7

## இடபம்

உங்கள் ராசி பலனை அறிந்து கொள்ள வேண்டும் என்று ஏன் அவதிப்படுகிறீர்களோ தெரியாது. தெரிந்தாலும் தெரியா விட்டாலும் நடப்பது நடந்துதானே தீரும்? கவலைப்பட வேண்டாம். தொடர்பற்றிருந்த சகோதரர்களால் எதிர்பாராத உதவி கிடைக்கும். தாயாரின் உறவினர்களும் உங்களைப்பற்றி விசாரிப்பார்கள். ஆறுதல்தானே? குழந்தைகள் விஷயத்தில் மகிழ்ச்சியான செய்தி கேட்க இடமுண்டு. விடுமுறைதானே என்று பிரயாணத்தில் உடனே ஈடுபடுவது நல்லதல்ல.

அதிஷ்ட எண்:2

## மிதுனம்

இந்த ராசிக்குரியவர்கள் தமது தேக நிலையைப்பற்றிக் கவலை கொள்வது தவிர்க்க முடியாத ஒன்றுதான். வெகுவாக அலட்டிக் கொள்ள வேண்டாம். சாதாரண வியாதிக்கெல்லாம் பயம் வேண்டாம். அது குடும்பப் பிரச் சினைதான். திடீரென பனி நீங்கி வெயில் அடிக்கும். பணவரவு மத்திமம் என்றால் என்ன செய்ய முடியும்? கொஞ்சம் தாமதித்துத்தான் வரட்டுமே. நண்பர்கள் உதவி இருக்கவே இருக்கிறது. வியாபாரம் எப்படியும் நடந்து கொண்டிருக்கும். லாபம் கம்மிதான். பிரயாசை இருப்பதால் கவலை வேண்டாம்.

அதிஷ்ட எண்:3

## கர்க்கடகம்

தாரமும் பொருளும் எதிர்பாராத வரவை உண்டா க்கினால் அதில் மதி மயங்கிவிட வேண்டாம். தடை செய்ய விரும்புபவர்களும் இருக்கத் தான் செய்வார்கள். ஆயினும் வெற்றி உங்கள் பக்கம்தான். நல்ல குடும்பமும் நட்பும் புடைசூழ வாழ்ந்தால் மதிக்கப்படுவீர்கள் என்று தெரிகிறது. அதனால் அவசரப் பட்டு எதையும் முடிவெடுப்பது நல்லதல்ல. எதிலும் முன்னெச் சரிக்கை நல்லது. சகோதரிவழியில் உதவியை எதிர் பார்க்கலாம். பக்கத்து ஊர்தான்.

அதிஷ்ட எண்:5

## சிங்கம்

கையில் வருவதை ஏதோ ஒரு சக்தி தட்டிவிடுவதால், கால்வாசி சிதறி முக்கால்வாசிதான் தங்கும். போதாதென்று குறைப்பட முடியுமா? கலைக்கும் அறிவிற்கும் பக்திக்கும் குறையில்லை. புத்திரர் களால் வருமானத்தை எதிர்பார்க்க வேண்டாம். தாய் தந்தையர்தான் மகிழ்விப்பார்கள். எதிர்பாராத கொண்டாட்டம் ஒன்று நெருங்கும், அதற்காகச் சேமிப்பது நல்லது. பிரயாணத்தை ஒத்தி வைக்கவும். முன் எச்சரிக்கை நல்லதல்லவா?

அதிஷ்ட எண்:6

## கன்னி

"சாணேற முழம் சறுக்கும்" என்ற வார்த்தைக்கு அர்த்த முண்டுதான். அதனால் ஏற்றத்தில் நம்பிக்கையை இழக்க வேண்டாமே. எல்லாத் திசையிலும் செலவினங் களை எதிர்கொண் டாலும், இரண்டொரு பெரியவர்களின் நட்பு இருக்கும் வரையும் கவலை வேண்டாம். திருப்பதி உண்டியல் இருக்கவே இருக்கிறது. மறந்து போயிருந்த ஒருவர் எதிர்ப்படுவது உங்கள் அதிஷ்டம் தான். தொழிலை மாற்றிக்கொள்ள நல்ல சமயம். புதிய துறையில் மகிழ்ச்சியும் பொருளும் உண்டு.

அதிஷ்ட எண்:4

## துலாம்

முயற்சிதான் மெய் வருந்தக் கூலி தரும் என்ற வார்த்தை உங்களைப் பொறுத்த வரை உண்மையென்று நம்புவீர்கள்தானே. தாமதமாக வரும் கூலி மகிழ்ச்சியைத் தரும். பலர் பாராட்டுவார்கள். சிலர் திரும்பிப் பார்ப்பார்கள். கவலைப்பட வேண்டாம். உற்றார் உறவினர் பந்தம் அப்படித்தான். இந்தச் சமயத்தில்தான் உடல் நிலையைக் கவனிக்க வேண்டி வரும். சாதாரண தலை நோய் தான். அதை நீடிக்கவிடுவது நல்லதல்ல என்று தெரிகிறது.

அதிஷ்ட எண்:1

## விருச்சிகம்

திடீரென வீட்டுப் பிரச்சினை ஏற்படப் போகிறது. கொஞ்சம் சிரமம்தான். வேறு வீடு பார்த்துக் கொண்டால் போகிறது. விலையோ வாடகையோ அதிகம்தான், சமாளித்துக் கொள்ளலாம். காலம் அப்படி. கடன்பட வேண்டிய அவசியம் இருக்காது. வழக்கமான ஈடுதான். கையிலுள்ளதைக் கரைத் துவிட வேண்டாம். பின்னால் தேவைப்படும். மனைவி பக்கத்தி லிருந்து சிலரது உதவி கிடைக் கலாம். நடந்து நடந்து உங்கள் பாதம் வலியெடுத்தாலும் கவலைப் பட வேண்டாம்.

அதிஷ்ட எண்:7

## தனு

திடீரென்று உங்கள் வீட்டினுள் ஒரு நண்பர் வெளியூரிலிருந்து வந்து நுழைந்தால் எப்படியிருக்கும் என்று பாருங்கள். அன்பும் பாசமும் மாத்திரமல்ல, எதிர்பாராத உதவிக்கும் அந்த வரவு காரணமாக இருக்கப் போகிறது. எல்லாவகை யிலும் இந்த ராசிக்காரர் மிகுந்த அதிஷ்ட சாலிகள் என்று சொல்ல வேண்டும். அதற்காகத் தலைவீக் கப்பட வேண்டாம். அமைதியோடு காலத்தை நடத்துவது நல்லது. மற்றவர்கள் மத்தியில் நாமும் ஒருவர்தான் என்ற உணர்வை மறந்துவிட வேண்டாம். திடீர் அதிஷ்டம் தலைக்கேறாமல் பார்த்துக்கொள்ளவும்.

அதிஷ்ட எண்:9

## மகரம்

அவருக்கு வந்த அதிஷ்டம் எனக்கேன் வரவில்லை என்று கவலைப்படவேண்டாம். எதற்கும் ஒரு காலம் வரவேண்டுமல்லவா? பொறுத்திருந்து பார்ப்பது நல்லது. எடுத்த காரியம் எப்போதும் நிறைவேறாதுதான். சகோதர வழியில் சில உதவிகள் வரலாம். உடல் நிலை எதிர்பாராத வகையில் பாதிக்கப்படலாம். நடைமுறையில் சில பழக்கங்களைத் தவிர்க்க வேண்டும் என்று நண்பர்கள் சொல்வார்கள். கேட்பது நல்லது. கையில் இருக்கும் பணத்தைச் செலவிடச் சொல்லும். பார்த்துக் கொள்ளவும்.

அதிஷ்ட எண்:3

## கும்பம்

இந்த ராசிக்காரர் தமது குடும்பத்தைப் பற்றிக் கவலை கொள்வது எதிர்பார்க்கப்பட வேண்டியதுதான். மனைவி பக்கத் திலிருந்து பிலாக்கணம் உதிர்ந்து கொண்டிருக்கும். வழக்கமான சங்கதிதான். விரைவில் மாறிவிடும். எல்லாம் குழந்தைகள் சம்பந் தமானது என்றும் நினைத்துக் கொள்ளலாம். வீட்டுக்கு வீடு வாசற்படி தானே. இருந்தும் பொருளாதாரத்தில் அதிக கஷ்டம் இருக்காது. தந்தை வழியில் உதவிகள் கிடைக்கலாம். அதே சமயம் ஒரு துக்க செய்தியையும் எதிர்பார்க்கவேண்டி வரும். காலத்தின் நியதிதான்.

அதிஷ்ட எண்: 5

## மீனம்

யாருக்குத்தான் விரோதிகள் இல்லை. அதிலும் புதிதாகக் குடும்பம் ஆரம்பித்தவர்கள் காரண மில்லாமலே விரோதிகள் இருப்பதாகப் பீதியடையக்கூடும். அது வெறும் மயக்கம்தான். பண விஷயத்தில் ஆடம்பம் அவசியமா? மிதமாகச் செலவு செய்ய முயல வேண்டும். கலைகள் சம்பந்தமாகப் புதிய நாட்டங்கள் ஏற்படலாம். சரியான வழியில் புலனைச் செலுத்துவது நல்லது. வேற்று மனிதர் சகாயமுண்டு. அயல்நாட் டவர் தொடர்பு ஏற்படலாம்.

அதிஷ்ட எண்:4



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தழுவலும்

(13ம் பக்க தொடர்ச்சி)

உலகத்தை அறிய எவ்வளவு தூரத்துக்கு உதவுகிறது என்பது முக்கியமானது. தமிழில் நல்ல நாடகச் சுவடிகள் இருந்து அவை புறக்கணிக்கப்பட்டால் அது வருத் தத்துக்குரியது. அதே வேளை, தமிழாக்கமாகவோ தழுவலாகவோ தமிழுக்கு ஒரு புதிய நாடகச் சுவடி கிடைத்தால் அதுபற்றி நாம் ஏன் வருந்த வேண்டும்?

தாஸீஸியஸின் அபசுரம், பொறுத்தது போதும் என்ற நல்ல நாடகங்கள் இரண்டும் நாடக முறையைப் பொறுத்த வரை தமிழுக்குப் புதியன. இவை அயலிலிருந்தே தமிழுக்கு அறிமுகமான வடிவங்கள். மூலச் சுவடி தமிழர் எழுதியதா தமிழர் மொழி பெயர்த்ததா தழுவியதா என்ற வேறுபாடு அடிப்படையான அயற் பண்பை மாற்றி விடாது. இவ்வாறே தரிசனம், யுகதர்மம், முகமில்லாத மனிதர்கள், புதிய உலகம் பழைய இருவர் போன்றவை தமிழ் மேடைக்குப் புதியவை. கதாநாயகன், கதாநாயகி, நல்லவர், கெட்டவர், பிரச்சனை, தீர்வு என்ற விதமான எதிர்பார்ப்புக் களுடன் நாடகம் பார்த்துப் பழகி விட்டால், நல்ல நவீன நாடகங்கள் உடன்பாடற்றவையாகத்தான் இருக்க முடியும்.

இலங்கை நாடக ரஸிகர்களது ரஸனையை விடத் தமிழக ரஸிகர்களது ரஸனை சற்றுக் கீழானது தான். லண்டனில் ரஸனை உள்ள தமிழர்கள் ஆங்கில நாடகங்களில் ஈடுபாடுடையோராக இருக்கிறார்களோ என்னவோ, தமிழ் நாடகங்களைப் பொறுத்த வரை அவர்களது அக்கறை போதா ததாகவேயுள்ளது. சினிமாப் பாட் டுக்காரன் கோஷ்டியுடன் வந்து பழைய பாட்டையே திரும்பப் பாடுவதைக் கேட்க முண்டியடித்துப் போகிற கூட்டமும் சாப்பிடத் தவறினாலும் வீடியோ பார்க்கத் தவறாத தமிழ்ப்பட ரஸிகப் பரம்பரையும் நாடகத்தைப் பற்றி என்றாவது அக்கறை காட்டுமா? அந்தளவில் நல்ல நாடகத் தயாரிப்பாளர்கட்கு முன் ஒரு பெரும் பொறுப்பு உள்ளது என்பது உண்மை. லண்டன் தமிழர்களை மெல்லமெல்லத்தான் வென்றெடுக்க முடியும். படைப்பின் தரத்தைத் தாழ்த்தாமல் இதைச் செய்வது சாத்தியம் என்ற நம்பிக்கை எனக்கு இன்னும் இருக்கிறது. அவைக் காற்றுக் கலைக்கழகம் மட்டுமே இதைச் செய்ய வேண்டுமா? மற்றவர்களும் இத்தகைய தரமான தயாரிப்புக்களில் இறங்கக்கூடாதா? தமிழர் அறிய வேண்டியது நிறைய உண்டு. அதை அவர்கட்கு வழங்க நிறையப்பேர் தேவை.

## கிரிக்கட் சுற்றுப் போட்டி

(நமது நிருபர்)

லண்டனின் பல்வேறு பாகங்களையும் சார்ந்த 12 கழகங்கள் பங்குபற்றும் ஒரு நாள் கிரிக்கட் சுற்றுப்போட்டி இம்மாதம் 18ம் தேதி சனிக்கிழமை சவுத்தோலில் நடைபெறுகிறது.காலை 9 மணிக்கு சவுத்தோல் வின்ட் மில் றோட், வாரன் பாம் மைதானத்தில் நடைபெறும் இப்போட்டியை, கிழக்கு லண்டன் யுனைட்டெட் தமிழர் விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்துள்ளது. அணித் தாயுள்ள நான்கு மைதானங்களில் இப்போட்டிகள் நடைபெறும்.

வெற்றிபெறும் கழகத்துக்கு 250 பவுண் ரொக்கமும் சுழற் கேடயமும் வ ழ ங் க ப் ப டு ெ ம ன் று தெரிவிக்கப்படுகிறது.

# கோவை மகேசனுக்கு அனுதாபம்

சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் மறைவு என்னைக்கலங்க வைக்கிறது. தமிழுக்கும் தமிழின விடுதலைக்குமாக வாழ் நாள் முழுவதும் பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் பாடுபட்ட நண்பர் அவர்.

கடைசியாக அவரை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சென்னையில் பார்த்தேன். அப்போதே அவர் நோய்வாய்ப் பட்டிருந்தார்.

*SATURDAY REVIEW* ஆசிரியர் சிவநாயகத்தைப்போல, கோவையும் தமது மனைவியுடன் யாழ்ப்பா ணத்திலிருந்து தப்பியோடி தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்தார்.

கோவையார் பலகால நண்பர் மட்டுமல்ல நீண்டகாலமாக தமிழ்ஈழ அரசியலில் என்போன்றவர்களின் விடுதலைத்திட்டங்களுக்கு பரிபூரண ஒத்துழைப்பு நல்கிய அரசியல்வாதி.

அவர் பிரிவால் தவிக்கும் அவரது மனையாளுக்கு எமது அநுதாபங்கள். அடுத்தமாதம் வெளிவரவிருக்கும் எனது *THE LIFE & TIMES OF A TAMIL ACTIVIST* என்ற நூலை அவருக்கு சமர்ப்பணம் செய்திருக்கிறேன்.

–கிருஷ்ணா வைகுந்தவாசன்

# மரண அறிவித்தல்



## திரு வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம்

கரவெட்டியை பிறப்பிடமாக கொண்டவரும் அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவரும் கொழும்பு ஆனந்தா கல்லூரி பழைய மாணவரும் கோபாமில் ஏஜென்சியின் அதிபருமான திரு பாலசுப்பிரமணியம் அவர்கள் 15.07.92 இல் கொழும்பில் காலமானார். இவர் சாந்தியின் அன்புக்கணவரும், உகந்தன், கார்த்திகன் ஆகியோரின் அன்புத்தந்தையாரும் ஆவார். ஈமக்கிரியைகள் 19-07-1992 ஞாயிறு மாலை 4 மணிக்கு கொழும்பு 7, 24 கிறகறி வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனத்துக்காக கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித் தலை ஏற்றுக்கொள்ளவும்.

Mrs Shanthi Balasubramaniam
24, Gregory's Road
Colombo - 7
Sri Lanka.


FIAT LUX

# Hartley College

## PAST PUPILS ASSOCIATION (UK BRANCH)

INVITES

ALL HARTLEYITES, WELL WISHERS AND FRIENDS

to attend

# A DINNER

In Honour of

# MR & MRS K POORANAMPILLAI

| | | | | | |
|---|---|---|---|---|---|
| DATE | : | Saturday 15th August 1992 | DRESS | : | Lounge Suit |
| TIME | : | Reception from 7.30pm to 8.30pm<br>Dinner 8.30pm onwards | CARRIAGES | : | 11.00 pm |
| VENUE | : | Holiday Inn (Commonwealth Suite)<br>(Hotel Marriott) Ditton Road, Langley, Slough<br>Berks. SL3 8PT (Off Junction 5 - M4) | TICKET | : | £ 23.50 Per Head |

Bookings Close on 12th August 1992

**Special arrangements have been made with the Hotel for accommodation at reduced rate of £45.00 per twin-bed double room for participants from long distance for overnight stay. Group bookings consisting of 10 persons can have their own table**

Mr R Raveendralingam
(081) 554-2710 / (071) 403-5528

CONTACT PERSONS

Mr A Sriharan
(0895) 257788 / (081) 843-9974

www.tamilarangam.net

G COM

கோடை
விடுமுறையில்
சிறார்களின்
தொல்லையா?
தவிர்த்திடுவீர்!

# பரிசளிப்பீர்!!



## 386SX , 386DX, 486

உங்கள் கம்ப்யூட்டர் தேவை எதுவாயினும் நாடுங்கள்

கம்ப்யூட்டர் தயாரிப்பிலும், தொழில் நுட்ப ஆலோசனை வழங்குவதிலும் ஆறு ஆண்டு கால அனுபவம் வாய்ந்த நிறுவனம்

**G-COM COMPUTERS LTD**
**253 Western Avenue, London, W3 0PP, United Kingdom.**

தொலைபேசி : 44-(0)81-992 8384

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்